விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 11 ஞாயிற்றுக்கிழமை (25.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 157

## யாழ்.பல்கலைக்கழகத்தை சூழ இராணுவத்தினர் திடீர் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தை சூழவுள்ள வீடுகளிற்கு சென்ற இராணுவத்தினர் நேற்று திடீர் பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கிராம சேவையாளர்களிடமும் விபரங்களைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பாகவே விபரங்களை அதிகளவில் இராணுவத்தினர் சேகரித்ததாக கூறப்படுகின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் அனுஷ்டித்து விடக்கூடாது என்ற காரணத்திற்காக 16-ம் திகதி தொடக்கம் 20-ம் திகதி வரை யாழ்.பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்தது. இருப்பினும் இராணுவத்தினரின் எதிர்ப்பினை மீறியும் பல்கலைக்கழகம் கடந்த 21-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டபோது மாணவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை அனுஷ்டித்திருந்தனர்.

இராணுவத்தினரும் புலனாய்வுத் துறையினரும் தீவிர கண்காணிப்பிலும் சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்த நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டதோடு பல்கலைக்கழக பீடாதிபதிகள், பேராசிரியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் உயிர்அச்சுறுத்தல் விடும் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்ட நிலை

23ஆம் பக்கம் பார்க்க....

போர்க்குற்ற ஆதாரம்!

## புகைப்படத்தில் இருந்த நபர் அடையாளம் காணப்பட்டார்



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பில் தற்போது வெளியாகியிருக்கும் புகைப்படத்திலிருந்து மற்றுமொருவர் உறவினர்களால் அடையா

23ஆம் பக்கம் பார்க்க....

## இரு கைக்குண்டுகள் குருநகரில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் பகுதியில் இரண்டு கைக்குண்டுகள் நேற்று மதியம் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்து பொலிஸாரின் உதவியுடன் இந்தக் கைக்குண்டுகளை இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

யாழ்.குருநகர் 5 மாடிக் கட்டடத்திற்கு பின்புறமாக கடற்கரையை அண்டிய களப்புப் பகுதியில் சேற்றுக்குள் புதையுண்ட நிலையில் மேற்படி இரண்டு கைக்குண்டுகளும் கிடந்ததாகவும் கைக்குண்டுகள்

24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த வருகையை எதிர்த்து
# கறுப்புக் கொடி போராட்டம்
## வைகோ அறிவிப்பு

(புதுடில்லி)

*இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் விழாவில் இலங்கை ஜனாதிபதி பங்கேற்பதற்கு தமிழகத்தின் பெரும்பாலான கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையில் நரேந்திர மோடியின் பதவியேற்பு நடக்கும் நாளை திங்கட்கிழமையன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பங்கேற்பை எதிர்த்து டில்லியில் கறுப்புக் கொடி போராட்டம் நடத்தப்படும் என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.*



இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி நாளை 26-ம் திகதி டில்லியில் பதவியேற்கவுள்ளார். இந்த பதவியேற்பு விழாவுக்கு ஜனாதிபதிக்கு மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்

23ஆம் பக்கம் பார்க்க....




ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்ள அழைத்தமையை கண்டித்துதமிழ் நாடு மாணவர் அமைப்புகள் சென்னையில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

## புதுடில்லிக்கு இன்று பயணமாகிறார் மகிந்த

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவி ஏற்கும் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று ஞாயிற்றுக்கிழமை புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி நாளை 26ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் பதவியேற்கவுள்ளார்.

இந்நிலையில், புதுடில்லிக்கு இன்று பயணமாகவுள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை அங்கு தங்கியிருக்கவுள்ளதாக தெரியவருகிறது.

இந்தியாவில் அமையவுள்ள பாரதிய ஜனதாக் கட்சி அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புகளை வகிக்கவுள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவே, ஜனாதிபதி முன்கூட்டியே

23ஆம் பக்கம் பார்க்க....

மகிந்தவின் அழைப்பை நிராகரித்த செய்தி

## இந்திய ஊடகங்கள் விக்கிக்கு முக்கியத்துவம்



(புதுடில்லி)

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் வைபவத்தில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்து கொள்ள வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மறுப்பு தெரிவித்துள்ளமை குறித்து இந்திய ஊடகங்கள் முக்கியத்துவப்படுத்தி செய்தி வெளியிட்டுள்ளன.

புதுடில்லியில் நாளை 26ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சார்க்

24ஆம் பக்கம் பார்க்க....

## விபத்தில் சிக்கிய நபர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வாகன விபத்தில் சிக்கிய 31 வயதான நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி யாழ்.வண்ணார்பண்ணை சிவன் கோவிலுக்கு முன்பாக இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் மேற்படி நபர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் 9 ஆவது நாளான நேற்று முன்தினம்

23ஆம் பக்கம் பார்க்க....

## தேசிய பிரச்சினையை தீர்க்க இந்தியாவின் பங்கு முக்கியம்

மோடிக்கான வாழ்த்தில் சம்பந்தன் கருத்து

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொள்வதில் இந்தியா பிரதான பங்கு வகிக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின தலைவர் இரா.சம்பந்தன் இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவித்து அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் நீங்கள் பெற்ற பிரமாண்டமான வெற்றிக்காகவும், பாரத தேசத்தின் பிரதமர் என்ற உயர் பொறுப்புக்காக நீங்கள் பெறுகின்ற நியமனத்திற்காகவும், இலங்கைத் தமிழ் மக்களின் சார்பில் எங்களது மனமார்ந்த வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கிறோம்.


2009-ம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர், இலங்கைக்குள்

23ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

ஆங்கிலப் பாடநெறிகள்
ADVANCE LEARNING ENGLISH
CAMBRIDGE ENGLISH
Pre-starters
முன்பள்ளி & தரம் 01, 02
Young Learners
தரம் 03, 04, 05
Teens | தரம் 06-11
O/L தயாரப்படுத்தல்
General User | ஏனையோர்
அடிப்படையில் இருந்து
0779866409
ALISON DIGILITE
51/3,(பொற்பதிப் பிள்ளையார் கோவிலருகில்)
பொற்பதி வீதி,கொக்குவில். 0779866409



மட்டக்களப்பு ஏறாவூர் சவுக்கடி கடலிலிருந்து சுமார் ஆயிரம் கிலோ கிராம் நிறையுடைய இராட்சத கொம்புத் திருக்கை மீன் ஒன்று நேற்று சனிக்கிழமை மீனவர் ஒருவரின் வலையில் பிடிபட்டுள்ளது.

குறித்த மீனானது ஒரு இலட்சத்து 12 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## அமுதாம்பிகை மணிமண்டப அறிவித்தல்

மேற்படி மணிமண்டபத்தில் வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய பெருந்திருவிழாவிற்கு 25 தினங்களும் அன்னதானம் வழங்கப்படுவது வழமை. மேற்படி அன்னதானத்தை உபயமாக ஏற்று செய்பவர்கள் தாங்களே அன்னதானத்திற்குரிய பொருட்களை வழங்கி மண்டபத்தின் அறிவுறுத்தலுக்கமைய அன்னதானத்தை மேற்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம். மேற்படி அன்னதானத்திற்காக நிதியோ,பொருட்களோ சேகரிக்க எந்தவொரு நபருக்கோ அல்லது அமைப்புக்கோ அனுமதியளிக்கப்படவில்லை என்பதை தங்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

சிவஸ்ரீ.சிவ.கமல்ராஜ் குருக்கள்
அமுதாம்பிகை மணி மண்டபம்

(6473)

## கும்பாபிஷேக நிகழ்வு

சண்டிலிப்பாய் வேவிற்பதி ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் கோவில் புனராவர்த்தன பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேக நிகழ்வு இன்று 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு விநாயகர் வழிபாடு, யாகபூசை, ஹோமம், விம்பசுத்தி, நியாசம், ஸ்பர்சாகுதி, கும்பங்கள், வதீப்பிரதணம், ஸ்தூபி அபிஷேகம் என இடம்பெற்று மகா கும்பாபிஷேகம் நிகழ்த்தப்படும்.

தொடர்ந்து பரிவார மூர்த்திகள் அபிஷேகம், எஜமானபிஷேகம் தசமங்கள தர்சனம் நடைபெற்று காலை 10 மணிக்கு ஆசீர்வாதம், ஆசியுரை, மகாபிஷேகம், விசேட பூஜை, அன்னதானம் என்பன இடம்பெறும்.

பின்னர் மாலை 6 மணிக்கு விசேட பூஜை இடம்பெற்று சுவாமி திருவீதியுலா வரும் திருக்காட்சி இடம்பெறும்.(செ-11)

## சித்த வைத்தியம்

**சங்கீத வித்துவான்களுக்கும், சகல மாணவர்களுக்கும் ஓர் நற்செய்தி**

உங்கள் தொண்டையில் ஏற்படும் நோய்களை நீக்கி நல்ல சாரீரத்தையும் குரல் இனிமையையும் உண்டாக்கக் கூடிய மருந்துகள் எம்மிடம் உண்டு. எமது மருந்துகளைப் பாவிப்பதால் ஞாபகசக்தியும் வாக்கு வன்மையும், மூளை விருத்தியும் ஏற்படும். சுக்கில தோஷம் நிவர்த்தி செய்யப்பட்டு குழந்தை கிடைக்க வழியுண்டாகும், நீண்ட தலைமுடி பெற நேத்திர சிந்தாமணித் தைலம் உண்டு. பாலியல் குறைபாடுகள் நீங்க ராஜவஜீகரண லேகியம் உண்டு. சளி சம்பந்தமான நோய்கள், வாதரோகங்கள், நெஞ்சு, இடுப்பு, வாதவலிகள், பெண்கள் சம்மந்தமான நோய்கள் யாவற்றிற்கும் சித்தர்கள் கூறிய முறைப்படி சிகிச்சை செய்யப்படும்.

தொடர்புக்கு:-
Dr.த.கிருஷ்ணபகவான் (Govt Regi No:-10329)
கிருஷ்ணா சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
பருத்தித்துறை றோட்,
நீர்வேலிச் சந்தி, நீர்வேலி.
T.P:- 0779723369

குறிப்பு:- ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் காலை 9.00 – 12.00 மணிவரை 462,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சாந்தி மெடிகிளினிக்கில் சந்திக்கலாம். (6475)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532

## சேவை முகவர்
**காணிகள், வீடு விற்பனைக்கு**

மணல்தறை லேன், பிறவுண் வீதி, உரும்பிராய், A9 பஸ்தியன்சந்தி, முடமாவடி, 21 பரப்பு தென்னந் தோட்டம் ஆகியன யாழ். நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். V.சுந்தரம்-0774819801

## ONLINE VISA

UK நாட்டிற்கான உடனடிப் பயணம். எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது, இறங்கிய பின்னரே. Opened 26th Monday 12.00 pm 195 A, ஸ்ரேசன்றோட், திருநெல்வேலி. (மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)

VITHES - 0772947696
Reg.No - N [PVS] 36824
(6482)

## தொழில்வாய்ப்பு

இதோ அரிய சந்தர்ப்பம். வடக்கு மக்களுக்கு (துனியார்) கப்பல்/விமான நிலையத்தில் வேலை செய்வதற்கு கப்பல் புனர்நிர்மாணித்தல் பிரிவில் சாதாரண ஊழியர்/ வெல்டர்/தச்சு/பெயின்டர்/விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர்/ காகோ/லொன்றி பிரிவுகளுக்கு 18-45 வயது ஆண்-பெண் தேவை. சம்பளம் 18000/-, 38000/- உணவு+தங்குமிடம் சகாய விலைகளில். வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு.

தொடர்புக்கு:
0775561883 (சி-7466)

மானிப்பாயிலும்........

## Elocution Classes

New Era Academy (London) இன் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட Elocution Classes யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலும் இடம்பெற்று வருகின்றது அறிந்ததே. இந்த வரிசையில் மானிப்பாயிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இச் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் மூலம்.
1, Student visa வின் போதும்
2, Family Migration னின் போதும் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.
(6472)

**மேலதிக தகவல்களுக்கு:- 0772116733**

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுப்புகைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளை பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER
(C-7463)

## WANTED
## ENGLISH TEACHERS

**(Full time and Part time)**

- Female teachers to teach students between 5 years to 12 years age group in Jaffna Town and Nelliady.
- Books, modules and Teaching Training are provided by us.
- Those who have previous experience are preferred.
- Basic Qualification is "B or A" in O/L.
- Salary negotiable.

Please apply to the address given below with your Bio-Data and relevant information with in 7 Days.

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**
No. 113 Kannathiddy Road, Jaffna.
(சி-7473)

சிங்கர் தரும் இரட்டைச் சலுகைகள்
* விலைக்கழிவு
* வட்டியின்றிய இலகுதவணைக் கொடுப்பனவு

* பழைய ஒன்றுக்கு 10,000 ரூபா அல்லது 8,000 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு
35,999/=
( Fully Automatic - 7 kg)

* 3,750 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு
21,249/=
( Semi Automatic - 6 kg )

அனைத்து சலவை இயந்திரங்களுக்கும் 4 வருட உத்தரவாதம்

SAMSUNG சலவை இயந்திரங்களுக்கு 25000/= வரை மாற்று முறை விலைக்கழிவு

lenovo
lenovo LEN - NB - - i3 - 4G
Intel Core i3 (4th Gen)
15.6"HD Display, 4 GB, 500 GB
DVD RW, Webcam, Wifi, B.T
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
ரூ. 88,899/=
காசுக் கொள்வனவுக்கு ரூ. 8,890/= விலைக்கழிவு

LEN - NB -i5
Intel Core i5 (4th Gen)
15.6"HD Display, 4 GB, 500 GB
DVD RW, Webcam, Wifi, B.T
3 வருட உத்தரவாதம் இலவசம்
~~ரூ. 99,799/=~~
ரூ. 89,819/=

SINX - 243AT
Intel celeron Dual Core
14" Display, 2 GB, 320 GB
DVD RW, Wifi, Webcam,
3 வருட உத்தரவாதம் இலவசம்
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
காசுக் கொள்வனவுக்கு ரூ. 4,000/= விலைக்கழிவு
ரூ. 49,999/=

HP- i3-14NB
Intel Core i3 (4th Gen)
14"HD LED Display, 2 GB,
500 GB HDD, DVD RW,
Wifi, Webcam,
ரூ. 64,999/=

HP- i3-15NB
Intel Core i3 (4th Gen)
14"HD LED Display, 2 GB,
500 GB HDD, DVD RW,
Wifi, Webcam, ரூ. 93,399/=
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
காசுக் கொள்வனவுக்கு ரூ. 13,400/= விலைக்கழிவு
(சி-7470)

கடனட்டைகளுக்கு 24 மாத வட்டியின்றிய கொடுப்பனவு வசதி (நிபந்தனைக்குட்பட்டது)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 021 222 5408 | சுன்னாகம். 021 224 0555 | மானிப்பாய். 021 225 5343 | சாவகச்சேரி 021 225 1100 | சாவகச்சேரி 021 227 0197 | நெடுகாமம் 0776433888 | நெல்லியடி. 021 226 4937 | பருத்தித்துறை 021 226 3411 | கிளிநொச்சி 021 228 0199 | முல்லைத்தீவு 021 229 0180
www.singersl.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனயீர்ப்பு போராட்டத்தை தடுக்கவே அரசு முயன்றுள்ளது

## ஜெகதீஸ்வரன் கைதுக்கு த.தே.ம.முன்னணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களால் முன்னெடுக்கப்படும் ஜனநாயக ரீதியான செயற்பாடுகளை இன ரீதியான கண்ணோட்டத்தில் நோக்கும் அரசு தனது இராணுவ மற்றும் பொலிஸ் பலத்தை பிரயோகித்து நசுக்க முயல்கின்றது என சுட்டிக்காட்டியுள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஜெகதீஸ்வரன் கைது செய்யப்பட்டமைக்கு தனது கடுமையான கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தங்கவேல் ஜெகதீஸ்வரன் நேற்று முன்தினம், இரவு பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாளை திங்கட்கிழமை 26 ஆம் திகதி காலை 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்துவதற்கு எமது கட்சி ஏற்பாடு செய்திருந்தது.

கிளிநொச்சியில் நில அபகரிப்பை கண்டித்தும், இராணுவத்தின் பிடியிலுள்ள வீடுகள் நிலங்கள் பொது மக்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்றும், இடம்பெயர்ந்த மக்கள் அவர்களது சொந்த வீடுகளில் மீளக் குடியமர உடனடியாக அனுமதிக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே மேற்படி போராட்டத்திற்கான அழைப்பு கட்சியினால் விடுக்கப்பட்டிருந்தது. மேற்படி கவனயீர்ப்பு போராட்டத்தை குழப்பும் நோக்கில் இராணுவ புலனாய்வுத்துறையினர் கடந்த சில தினங்களாக ஜெகதீஸ்வரன் வீட்டிற்குச் சென்று அச்சுறுத்தல் விடுத்திருந்ததுடன், இடம்பெயர்ந்த மக்களையும், கட்சியின் ஆதரவாளர் களையும் அச்சுறுத்தியிருந்தனர்.

நேற்று முன்தினம் ஜெகதீஸ்வரனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி போராட்டத்தை கைவிடுமாறு கோரியிருந்தார்.

இந்நிலையில் போராட்டம் நடத்துவது தொடர்பாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் 23ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் எழுத்து மூலமான கடிதம் கட்சியின் பொதுச் செயலாளரால் நேரில் சமர்ப்பிக்கப்பட்டது.

சட்டதிட்டங்களுக்கு அமைவாக ஏற்பாடு செய்யப்பட்ட ஜனநாயகப் போராட்டத்தை அச்சுறுத்தல் மூலம் அரசாங்கம் நிறுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டது.

அதற்கு இடமளிக்காது சட்டத்திட்டங்களுக்கு அமைவாக போராட் டத்தை நடத்துவதில் பாதிக்கப்பட்ட மக்களும் கட்சியும் உறுதியாக இருந்த நிலையிலேயே மேற்படி கைது இடம்பெற்றுள்ளது.

இக்கைதை நாம் மிகவும் வன் மையாகக் கண்டிப்பதுடன், இவரை விடுவிக்க சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோருவதுடன் இவரது விடுதலைக்காக கட்சி பேதங்களுக்கப்பால் அனைவரையும் எம்முடன் இணைந்து செயற்பட முன்வருமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் என அந்தக் கண்டன அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (2-6)

# மத்தள விமான நிலையத்திற்கு 4 விமானங்கள்

மத்தள விமான நிலையத்திற்கு நான்கு விமானங்களே செல்வதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாரிய பொருட் செலவில் தெற்கின் மத்தளயில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டது. ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம், மிஹின் எயார் நிறுவனம், ப்ளை டுபாய் மற்றும் எயார் அரேபியா ஆகிய விமான சேவை நிறுவனங்களின் விமானங்களே மத்தளயில் தரையிறங்குகின்றன.

புதிய விமானம் என்பதனால் விமானப் போக்குவரத்து அதிகரிப்பதற்கு கால அவகாசம் தேவைப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மத்தளயில் விமான நிலையம் அமைத்ததனால் நாட்டுக்கு எவ்வித பயனும் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. (2)

# பணிப்பெண்கள் கர்ப்பிணிகளாக நாட்டுக்கு திரும்புகின்றனர்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண் வேலைக்கு செல்லும் இலங்கைப் பெண்கள் கர்ப்பம் தரித்த நிலையில் நாடு திரும்பு வதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாக சென்ற 300 இற்கும் மேற்பட்ட பெண்கள் கர்ப்பமடைந்த நிலையில் கடந்த வருடம் நாடு திரும்பியதாக பணியகத்தின் பிரதி முகாமையாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பல இலங்கை பெண்களின் தவறான நடத்தைகள் காரணமாக இந்த நிலைமை ஏற்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாக பணிபுரியும் இலங்கை பெண்களுக்கு வீட்டு எஜமான்களினாலும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதாக கூறப்படுகிறது. (2)

# மாடு வெட்டியவர்களுக்கு 30,000 ரூபா அபராதம்

(கரணவாய்)

அனுமதிப்பத்திரம் இன்றி மாட்டினை வெட்டி இறைச்சியாக்கிய இரு சந்தேக நபர்களுக்கு ஒருவருக்கு தலா 15 ஆயிரம் ரூபா அடிப்படையில் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த இரு நபர்கள் கடந்த வியாழக்கிழமை இரவு வேளை இச்செயலில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக இரகசிய தகவல் கிடைத்த நெல்லியடிப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று அவ் இருவரையும் கைது செய்ததுடன் வெட்டிய இறைச்சியினையும் எடுத்தும் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் அவ் இருவரையும் பொலிஸார் ஆஜர்படுத்தி இருந்த நிலையில் மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது.

மேற்படி குற்றச்செயலில் ஈடுபட்ட இருவரும் வல்வெட்டித்துறையை சேர்ந்தவர்கள் எனவும் நீதிமன்ற விசாரணையில் இருந்து தெரிய வருகின்றது. (2-60)


**தொழில் வாய்ப்பு**

சம்பளம் 19000/= 30000/= 38000/= 17-50 வயது ஆண்/ பெண் இருபாலாருக்கு கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகளில் உற்பத்தி / லேபல்/ பொதியிடல்/ தரம் பிரித்தல் போன்றவற்றிற்கு உடனடியாக ஆட்கள் தேவை. உணவு+ தங்குமிடம் சகாய விலைகளில் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு- (சி-7469)

077 4312176, 0770224156


# செயலாளர் பதவியிலிருந்து ஜயசுந்தர நீக்கம்

(கொழும்பு)

நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக பணியாற்றி வரும் பீ.பி. ஜயசுந்தர, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

ஜயசுந்தர, அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் அமைச்சுக்கு கூடுதல் நிதியை ஒதுக்கி வருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டில் இருந்து தப்புவதற்காக தனது அமைச்சு வேறு ஒருவரை செயலாளராக நியமிக்குமாறு அமைச்சர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனடிப்படையில் இந்த மாற்றம் செய்யப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

சுகாதார அமைச்சின் செயலாளராக பதவி வகித்து வரும் ஒருவர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக நியமிக்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

பீ.பி. ஜயசுந்தர நிதியமைச்சின் செயலாளராக மாத்திரம் பணியாற்றுவார் என தெரிவிக்கப்படுகின்றது. (2)


**தேவை**

கட்டட நிர்மாணத் துறையில் தேர்ச்சி பெற்றவராயின் (கொழும்பு/ தெஹிவளை, களனி / கண்டி) மேசன்/ தச்சு/ பெயின்டர்/ கம்பிபாஸ்/ செடலின்/ (1200/= 1500/=) கை உதவியாளர் (900/=1100/=) தங்குமிடம் இலவசம்.

மேலதிக தொடர்புகளுக்கு-

0775561883 (சி/7467)


# இராசி பலன்

**25.05.2014**

**(வைகாசி 11, ஞாயிற்றுக்கிழமை)**

**சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு**

**துவாதசி பின்னிரவு 1.23 மணிவரை**

**ரேவதி பிற்பகல் 5.34 மணிவரை**

**இராகுகாலம் 4.22-5.52 மணிவரை**

**சுபநேரம் 8.52-10.22 மணிவரை**

வளவன்

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், உற்றார் உறவினர்களின் வருகையுண்டு, வளர்ச்சிப்பாதைக்கு வித்திடுவீர்கள்.

**மிதுனம்:** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், உற்சாகமான நாள்.

**கடகம்:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், மறதியால் தவறிய காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, தந்தை வழி உறவில் நன்மையுண்டு.

**சிம்மம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது, மனச்சஞ்சலங்கள் கூடும்.

**கன்னி:** குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்கள் கைகூடும், காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்பும் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

**துலாம்:** மனதில் உற்சாகம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், முயற்சிகள் எளிதில் கைகூடும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பிறருக்கு உதவி செய்வதில் பிரியப்படுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம்.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன நன்மையுண்டு, மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்:** பயணங்களால் பலன் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், கோரிக்கைகள் நிறைவேறும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச சித்த வைத்திய மருத்துவ முகாம் இன்று

(மானிப்பாய்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் இலவச சித்த வைத்திய மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை





கீரிமலை கருகம்பனை தமிழ் மன்ற சன சமூக நிலையத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வைத்திய அதிகாரி துஷ்யந்தி கலந்து கொண்டு நோயாளர்களை பார்வையிடவுள்ளார்.

இந்நிகழ்வானது இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினர் தெல்லிப்பழை சித்த வைத்தியசாலையிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே இடம்பெறவுள்ளது.

எனவே, இம் மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (2-23)




# முத்துக்குமார் வீதி நீர் வடிகால் புனரமைக்கப்பட்டு வருகின்றது



யாழ்மாநகரசபைக்குட்பட்ட கோணாவில் தோட்டம் முத்துக்குமார் வீதிப் பகுதியில் உள்ள நீர் வடிகால் புனரமைப்பு பணிகளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந் திரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இங்குள்ள ஏனைய நீர் வடிகால்களையும் புனரமைத்து தரும்படி அப்பகுதி மக்கள் ஒருங் கிணைப்பாளர் வி.கே.குகேந் திரனிடம் கோரிக்கை விடுத்தனர். அவற்றை சென்று பார்வையிட்ட ஒருங்கிணைப்பாளர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகள் முடிவடைந்ததும் இப்பிரச்சினைக்கு அமைச்சூடாக நடவடிக்கை எடுத்து தருவதாக கூறினார். இவ் வடிகால் புனரமைப்புப் பணிகள் நடைபெறுவதனால் அப்பகுதியில் நீண்ட காலமாக இருந்துவந்த சுகாதார பிரச்சினைகள் ஓரளவு தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ் விஜயத்தின் போது அமைச்சின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வி.கே.குகேந்திரனுடன் மாநகர சபை முன்னாள் பிரதி மேஜர் றீகன், மாநகர சபை உறுப்பினர் ராஜேந்திரன் ஆகியோரும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# செவிப்புலன் உபகரணங்கள் வழங்கும் மருத்துவ முகாம்

யாழ்.பாதுகாப்புத் தலைமையகத்தின் இணைப்பு நடவடிக்கை ஊடாக இலவசமாக செவிப்புலன் உபகரணங்கள் வழங்குவதற்கான மருத்துவ முகாமொன்று நடத்தப்படவுள்ளதாக யாழ்.பலாலி கட்டளைத் தலைமையகத்தின் ஊடகப் பிரிவுக்கு பொறுப்பான மேஜர் மல்லவராச்சி அறிவித்துள்ளார்.

- இதற்கமைய, இவ் இலவச மருத்துவ முகாமில் கலந்துகொள்ள தகுதியானவர்களை எதிர்வரும் ஜூன் மாதம் 9,10,11 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் சிவில் இணைப்பு மற்றும் பொதுமக்கள் தொடர்பு அலுவலக வளாகத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இதற்கான இலவச செவிப்புலன் பரிசோதனை (Audiogram) ஞாயிறு தவிர்ந்த நாட்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை இல. 227, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள விக்கிரமாராச்சி ஒப்டிக்கல்ஸ் இலும் ஞாயிறு மற்றும் திங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இல.108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி யில் அமைந்துள்ள விஷன் கெயாரிலும் மேற்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை 021 222 2001 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (அ)

# நூல்களின் அறிமுக விழா

இலங்கையின் தமிழ்மக்களின் இனப்பிரச்சினையும் அரசியல் யாப்புகளும் 13ஆவது திருத்தம் என்ற இரு நூல்களின் அறிமுக விழா எதிர்வரும் ஜூன்மாதம் முதலாம் திகதி பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் டேவிற் வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தில் அருட்தந்தை ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நூல்களை சி.அ.ஜோதிலிங்கம் எழுதியுள்ளார்.

இந்நூலுக்குப் பிரதம விருந்தினராக பேராசிரியர் க.சிற்றம்பலம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

வரவேற்புரையினை அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.க.கஜேந்திரகுமார், ஆசியுரையை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர் சிவ.மகாலிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நூல்களின் முதற்பிரதியை இருதய நோய்வைத்தியநிபுணர்டாக்டர் பூலக்ஸ்மன் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

நூல்களின் ஆய்வுரையை வைத்தியர் சி.குமாரவேல்,கவிஞர் நிலாந்தன் மற்றும் சமூக ஆய்வாளர் தெ.மதுசூதன் ஆகியோரும் ஏற்புரையை நூலாசிரியர் சி.அ. சோதிலிங்கம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (2-250)

# செயலாளர் நியமனம்



(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைக்கு புதிய செயலாளராக தென்மராட்சி வரணியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கனகதுரை நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தனது கடமைகளை கடந்த புதன் கிழமை பொறுப்பேற்றுள்ளார்.

இவர் காரைநகர் பிரதேச சபையின் செயலாளராக இருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் செயலாளராக இதுவரை காலமும் கடமையாற்றிய திருமதி தியாகேஸ்வரி அன்னலிங்கம் தற்போது நல்லூர் பிரதேச சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (2-10)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த நல்லூர் பொது சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

இதற்கமைய ஒவ்வொரு நாய்களுக்கும் உரிமக் கட்டணமாக 20 ரூபாவும் வரியும் செலுத்தப்படல் வேண்டும்.

இதற்கமைய நாளை திங்கட் கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை செட்டித் தெரு நல்லூர் முருகன் சனசமூக நிலையத்திலும் அதனைத் தொடர்ந்து 11.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரைகோவில்வீதியில் அகில இலங்கை இந்துமா மன்றத்திற்கு அருகாமையிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை கோவில் வீதி துர்க்கா மணிமண்டபம் அருகாமையிலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை பண்டாரிக்குளம் கோவில் வீதி சந்தியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை முருகேசர் லேன் சந்தியிலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை மணற்றரை லேன் ஜே/103 கிராமசேவகர் அலுவலகத்திலும்வைத்துஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை பலாலி வீதி சனசமூக நிலையத்திலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை செம்மணி வீதி வெயிலுகந்த பிள்ளையார் கோவிலடியிலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரையும் யாக்கோபு பாலர் பாடசாலையிலும் வைத்த தடுப்பூசி ஏற்றப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# தெல்லிப்பழை பிரதேச மக்களுக்கு உதவிகள்

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட வறிய மாணவர்களினதும் விவசாயிகளதும் அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 53 வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் சேவாலங்கா நிறுவனமும் அப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 96 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களையும் 125 விவசாயிகளுக்குநீர்தெளிக்கும்உபகரணங்களையும் 238 விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளையும் வழங்கியது.

மேற்படி உதவிகள் வழங்கும் நிகழ்வு தெல்லிப்பழை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் ஸ்ரீமோகன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நீண்டகாலமாக அபிவிருத்தியை வேண்டி நிற்கும் இப்பகுதிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த காலங்களைப் போலவே இம்முறையும் உதவிகள் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் பல எடுத்துள்ளார்.

அதன் ஒரு பகுதியாகவே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இவ் உதவிகளை வழங்கிய சேவாலங்கா இணைப்பாளர் மௌலேந்திரன் கடந்த 2010 இல் இருந்து இந்த திட்டத்தை நாம் இப்பிரதேசத்தில் [illegible] கொண்டு வருகிறோம்.

இது ஒரு வாழ்வாதாரத் திட்டமாகும்.

உள்ளூர் அமைப்புக்களைப் பலப்படுத்தி அதனூடாக மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்காகவே இத்தகைய திட்டத்தை நாம் செய்து வருகிறோம் என்றார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) இந்நிகழ்வு எளிமையான முறையில் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இச் சேவாலங்கா நிறுவனமானது பயனாளர்களை தெரிவு செய்வதில் பிரதேச மட்டத்தில் உள்ள அபிவிருத்திக் குழுக்களின் ஆலோசனைகளுக்கு அமைய தெரிவுகளை மேற்கொண்டிருந்தால் இன்னும் வேறு சில பயனாளர்களும் உள்வாங்கப்பட்டிருக்கலாம்.

வெறுமனே பொருட்களைப் பெறுவதுதான் உங்களது கடமையாக இருக்காது, இவ் உதவியை யார் மூலம் தங்களுக்கு கிடைக்கின்றது என்பதை இனங்கண்டு எதிர்காலத்தில் நீங்கள், உங்கள் பகுதி மக்கள் பிரதிநிதியை எங்கள் சார்பானவர்களாக தெரிவு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இந் நிகழ்வில் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, சிறுவர் பாதுகாப்பு நிதிய இணைப்பாளர் புளோரியா, ஈ.பி.டி.பி. வலி. வடக்கு அமைப்பாளர் அன்பு, ஈ.பி.டி.பி. வலி. தெற்கு அமைப்பாளர் வலன்ரயன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பிக்கவின் கருத்துக்கு ஹிருணிகா கடும் அதிருப்தி

(கொழும்பு)

அமைச்சர் சம்பிக்கவினால் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்து தொடர்பில் மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் கொலையுடன் நாட்டில் போதைப் பொருளுக்கு பாரியளவில் தட்டுப்பாடு ஏற்பட்டது. எனவே தேவை என்றால் குற்றச் செயல்களை தடுக்க முடியும் என சம்பிக்க அண்மையில் ஊடகங்களுக்கு குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சரவை அந்தஸ்து அமைச்சுப் பொறுப்பை வகித்து வரும் அமைச்சர் சம்பிக்கவின் கருத்து அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

தந்தையின் கொலையைத் தொடர்ந்து துமிந்த சில்வா வெளிநாடு சென்றதனால் போதைப்பொருள் வர்த்தகம் ஸ்தம்பிதம் அடைந்தது என்றே சம்பிக்க தெரிவித்திருக்க வேண்டும். கொள்கைகளுக்கு சம்பிக்க குரல் கொடுப்பவர் என்றால் உண்மையை மட்டுமே பேச வேண்டும் என்றார். (2)


## வேலைவாய்ப்பு

தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்கு 17-50 வயது ஆண், பெண் இருபாலாருக்கும் வேலைவாய்ப்பு. Printing, கீல்ஸ், கார்கில்ஸ், கிளவுஸ், பிளாஸ்டிக், இறைச்சி போன்றவற்றிற்கு உற்பத்தி+ லேபல்+ பொதியிடல்+ Loading+ Unloading பிரிவுகளுக்கு உடனடியாக தேவை. சம்பளம் 19000/= 30000/= 39000/= உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில். சிங்களம் தெரிந்த தெரியாத இருபாலாருக்கும் (நண்பர்கள்+ குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே வேலை.

(சி-7468)

தொடர்புகளுக்கு- 0778430179

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532

## மணமகள் தேவை (இவர்களுக்கு) — கல்யாண மாலை — மணமகன் தேவை (இவர்களுக்கு)

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: ரேவதி 2
கி.பா: 38.25 செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/ பாதுகாப்பு உத்தியோகத்தர் (மலேசியா)
தொ.இ: B/3191

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா: 27 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc, MSc / ஆசிரியர்
எதிர்பார்ப்பு: மணமகன் விவாகரத்தானவர்
தொ.இ: B/3192

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: 10.25 செவ் 2 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: O/L / சொந்த வியாபாரம்
தொ.இ: B/3195

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 34.75 செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L / அரச உத்தியோகம்
தொ.இ: B/3196

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: 47.25 செவ் 1 இல்
உயரம்: 4'10"
தகைமை/தொழில்: BA, MA / காணி சுவிகரிப்பு அதிகாரி
தொ.இ: G/1978

பிறப்பு: 1987 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: 14.75 உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc. / போதனாசிரியர்
தொ.இ: G/1979

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 21.5 சூரி செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.Com, M.Com Following (அவுஸ்ரேலியா)
தொ.இ: G/1984

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: ரோகினி 2
கி.பா: 29 செவ் 12 இல்
உயரம்: 4'10"
தகைமை/தொழில்: A/L, நூலக கற்கை / நூலகர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/1988

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

## சித்தர்களின் வர்மக்கலையின் மருத்துவ பயிற்சிகள்

சித்தர்களின் வர்மக் கலையின் மருத்துவ பயிற்சி மூலம் தமக்கும் தம்மை சார்ந்தவர்களுக்கும் மருந்து மாத்திரைகள் அற்ற முறையில் அளிக்கக்கூடிய ஓர் கலையாகும்.

இதற்கான அறிமுக விளக்கம் இன்று பி.ப 4.30 மணிக்கு தியாகி அறக்கட்டளை நிலையத்தில் (TCT Super market) நடைபெறும்.

( )


## விற்பனைக்கு

புலோலியில் சின்னப்பிள்ளையார் கோவிலடியில் ஹாட்லி கல்லூரிக்கு அண்மையில் 2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
021 222 3294

(6465)

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



## ஸ்ரீ மஹா கால பைரவர் ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிராதேவிக்கு அமாவாசையில் மிளகாய் வற்றல் யாகம்

வட்டுக்கோட்டை ஸ்ரீ மஹா கால பைரவர் ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிராதேவிக்குப் பிரதி அமாவாசை தினங்களில் மாலை 5 மணி முதல் 7 மணிவரை மிளகாய் வற்றல் யாகம் நடைபெற்று வருகின்றது. சகல கஷ்ட நிவாரணமாக வேண்டி இவ் யாக பூஜை நடைபெற்று வருகின்றது. எனவே அனைத்து அடியார்களும் இப்பூஜையில் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டி நிற்கின்றோம்.

தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை, (சங்கரத்தை சந்திக்கு அருகில்)

நிர்வாகம்

(6450)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடி அரசாங்கம் ஜெயலலிதாவை விட மும்மடங்கு பிரிவினைக்கு துணைபோகும்

## தே.ப.தே.இயக்கம் தெரிவிப்பு

**இந்தியாவின் மோடியின் அரசாங்கம் இலங்கையின் பிரிவினை வாதத்திற்கு ஜெயலிதாவை விட மும்மடங்கு துணை போகும். எனவே, அரசாங்கம் தப்புக்கணக்கு போடக் கூடாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத் தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்தார்.**

மோடி அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் இராஜதந்திர நட்புறவை மேம்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மோடியின் அரசாங்கம் பெரும்பான்மை பலம் கொண்ட அரசாங்கமாகும். எனவே, ஜெயலலிதாவின ஆதரவு அவசியமில்லை என்பது உண்மை.

ஆனால், தமிழ் நாட்டில் பெரும்பான்மை பெற்ற ஜெயலலிதாவின் பலத்தை உடைப்பதற்கும் பாரதீய ஜனதா கட்சியின் ஆளுமையை தமிழ்நாட்டில் நிலை நிறுத்துவதற்கும் மோடியின் அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

இது இலகுவாக அமையும். இந்துத்துவ தீவிரவாத கொள்கையை தமிழ்நாட்டு மக்கள் ஆதரிப்பார்கள். அத்தோடு வைகோ போன்ற பிரிவினைவாத புலி ஆதரவாளர்களின் உதவியும் மோடிக்கு கிடைக்கும்.

எனவே, தமிழ்நாட்டில் பாரதீய ஜனதா கட்சியின் அதிகாரத்தை நிலை நாட்டுவதற்காக மோடியின் அரசாங்கம் ஜெயலலிதாவை விட மும்மடங்கு இலங்கையில் பிரிவினை வாதத்திற்கு துணை போகும்.

எனவே, ஜெயலலிதாவின் அழுத்தம் மோடிக்கு இல்லையென்பதால் இலங்கைக்கு பிரச்சினை இலலையென தப்புக் கணக்கு போடக்கூடாது.

மோடியின் பதவியேற்பு வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வது நல்லது. இவ் விஜயத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு மோடியின் அரசாங்கத்துடனான இராஜதந்திர நட்புறவை வலுப்படுத்திக் கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். (2)

# ரயில்வே ஓய்வூதியர்கள் மீண்டும் கடமைக்கு

புகையிரத சேவையில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு தற்காலிக தீர்வாக ஓய்வூதியம் பெற்ற பணியாளர்களை சேவையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கமவின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு மருதானை புகையிரத நிலையத்தில் புகையிரதங்கள் பல தாமதமடைந்தமையின் காரணமாக நேற்று முன்தினம் மாலை அப்பிரதேசத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், போக்குவரத்து அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 140 | 150 |
| தக்காளி | 150 | 160 | 130 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 40 |
| கோவா | 100 | 90 | 70 | 100 |
| கரட் | 120 | 90 | 90 | 120 |
| பூசணி | 60 | 60 | 50 | 60 |
| புடோல் | 60 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 25 | 50 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 110 | 130 | 130 | 120-140 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 | 90 |
| பாகற்காய் | 160 | 140 | 130 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 60 | 70 | 60 | 50 |
| லீக்ஸ் | 80 | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 50 | 90 | 80 | 100 |
| கறிமிளகாய் | 90 | 120 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 70-100 | 120 | 140 | 60 |
| போஞ்சி | — | 180 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | — | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 40 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 130 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 90 | 120 | 90 | 80 |

# சிறுவர் தேசிய கொள்கை

## பிரகடனத்தை திருத்துவது தொடர்பில் கருத்தரங்கு

சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை பிரகடனத்தை மீண்டும் புதுப்பிப்பது தொடர்பான விசேட கருத்தரங்கொன்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தலைமையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில், சுமார் பத்து வருடங்கள் பழைமை வாய்ந்த மேற்படி தேசிய கொள்கை பிரகடன்த்தை திருத்தி அமைப்பது குறித்து பலராலும் வலியுறுத்தப்பட்டது.

சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலுள்ள ஐந்து வயதுக்குக் குறைந்த பிளைகளுக்கு வழங்க வேண்டிய பாதுகாப்புகுறிந்தும்குறியாக ஆராயப்பட்டது.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லக்ஷ் மன் ஜயதிலக்க ,சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் எரிக் இளையப்ஆரச்சி ,அரச சார்பறற நிறுவனாங்களின் பிரதிநிதிகள் உட்பட துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் இந்த கருத்தரங்கில் கலந்துக் கொண்டனர். (2)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 24

### ஜனகன் ஜனா

**யார் கடவுள்?**

**பக்திக்கு பலி கேட்பவனா?**
**பசிக்கு உணவளிப்பவனா?**
**சிந்தித்துப்பார்...!**



– தந்தை பெரியார்

### கோபால் துவா

அகழ்வு ஆராய்ச்சியில் கண்டெடுத்த கோட்டையல்ல...
யாழ் பொது நூலகம்



### டேவிற்





அவள் பாதம் பட்ட இடமெல்லாம் முத்தமிட்டேன்
ஆனால் அவள் என் அம்மாவிடம் சொன்னாள்...
"ஆன்டி உங்க பையன் மண்ணு திங்கிறான் என்று"

### அபர்ணியா மகாலிங்கம்




ஆசிரியர்: பரீட்சையில ஒரு பக்கம் தான் எழுதியிருக்கிறாய் கொஞ்சம் கூட வெட்கமா இல்லை உனக்கு?
மாணவன்: டீச்சர்...சிங்கம் SINGLE SHEET ல தான் எழுதும் பண்ணிங்க தான் பக்கம் பக்கமாக எழுதும்.

### ரெட் புல்




### பானுஜா சிவச்சந்திரன்

**ஒருவரை வேதனைப்படுத்தி**
**நாம் காணும் இன்பம்**
**பிணத்தை பார்த்து**
**சிரிப்பதற்கு சமம்.**

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

*ஆசிரியர், வியாசர் பதில்கள்*
*இல. 3,2 ஆம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்,*

எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

கிரு.செந்தூரன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

புலன் விசாரணை செய்யும் ஒருவருக்கு குறித்த விலையைவிடக் கூடுதலாக விற்கும் ஒருவரைக் கைது செய்யும் அதிகாரம் உண்டா?

நாட்டில் நடக்கும் கைதுகளைப் பார்த்த பின்பும் புரியவில்லையா?

சி.சுகிர்தமலர், யாழ்ப்பாணம்

அன்பின் வியாசர் அவர்களே!

இன்றைய நவீன விஞ்ஞான உலகில் சில இளையோர்கள், முதியோர்கள் அவர்களுக்கு பல நன்மைகள் செய்த போதும் கண்டும் காணாமை, அலட்சியம், புறக்கணிப்பு, உதவி செய்ய மனமின்மை போன்ற காரணங்களுக்கு இரக்கமின்மைதானே காரணம் எனக் கருத முடியுமா?

கூட்டுக்குடும்பம், தாத்தா, பாட்டியுடனான அந்நியோன்னியம் அன்பு, இரக்கம், பரிவு ஒன்றாய் இருந்து உணவு உண்பது என எமது பண்பாடு மாற்றப்பட்டுவிட்டது. அதற்கு முதியவரும் ஒரு காரணம். ஏனென்றால் அடுத்த சந்ததியிடம் அதைக் கையளிக்க தவறிவிட்டனர்.

அந்தப் பாரிய தவறை பெரியோர் விட்டுவிட்டு சிறுவர்களை குறைகூறுவது எந்த வகையிலும் நியாயம் இல்லை என்பதே எமது கருத்து.

சி.சிவறீபன்,புன்னாலைக்கட்டுவன்

**Hi Hello** வியாசர் சேர்...!

காணாமற் போன மலேசிய விமானம் எம்.எச்.370 இன் கிளைமாக்ஸ் என்னாங்க மதிப்பிற்குரிய சேர்?

இதொன்றும் April fool இல்லையே பத்திரம் பத்திரம் என எழுதுவதற்கு. முதலில் மனித மனங்களுக்கும் மனித உயிர்களுக்கும் இருக்கும் விலை கொடுக்க முடியாத மதிப்பை உணர்ந்து கொண்டால் சரி. எம்.எச்.370 விமானம் பத்திரமாக இல்லாவிடினும் அதிலிருந்த உயிர்கள் பத்திரமாக மீட்க இறைவனைப் பிரார்த்திப்போம்.

## அண்மைய இந்திய தேர்தல் முடிவு தமிழர் வாழ்வை சீரமைக்குமா?

சு.ஜெயரூபன், பருத்தித்துறை


அன்பின் வியாசரே!

உலகில் காதலொருமாயவலை என்பார்கள். அதில் தாங்கள் எப்போதாவது சிக்கித் தவித்ததுண்டா?

ம்ம்... தலைக்கு மேல் வந்துவிட்டதே இனி சாண் ஏறியென்ன... முழமேறியென்ன.

**வையாபுரி என்றால் நகைச் சுவை. வலம்புரி என்றால் கலைச் சுவை.**

***கொஞ்சம் சிரிங்கப்பா...***




K. வாணி, புன்னாலைக்கட்டுவன்

அன்பின் வியா அண்ணா!

அதிகமாக ஆசைப்படும் ஆம்பிளையும் அதிகமாகக் கோபப்படும் பொம்பிளையும் நல்லா வாழ்ந்ததாக சரித்திரமே இல்லை என்று நடிகர் ரஜனிகாந்த் கூறினாரே, அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

அப்படியென்றால் ஆண் அதிகம் கோபப்படுவதும் பெண் அதிகம் ஆசைப்படுவதும் சரி என்கிற கொள்கைக்கு வரலாமா? அதிக ஆசை, அதிக கோபம் இரண்டும் மனிதனை மிருகமாக்கும்.

த.மோகனரூபன், சுழிபுரம்

**Hi வியா Master**

வையாபுரி என்றால் நகைச் சுவை. வலம்புரி என்றால் கலைச் சுவை. இதுபற்றி நீங்கள் கருதுவது என்ன?

தங்களைப்போன்ற வாசகர்கள் இப்படி சொல்லக்கேட்கும் போது ரொம்ப சந்தோசமாய் இருக்கிறது.

வாசகர் மனமறிந்து சொல்ல வந்த விடயத்தை ஈய்க்காமல் இழுக்காமல் பக்கம் பக்கமாய் நிறைக்காமல் நடுவுநிலையுடன் என்றும் உங்களுடன் உங்களுக்காய் நிற்பான் வலம்புரி.

யு.வளர்மதி, இருபாலை

அன்பின் வியாசர் அண்ணா!

உங்களுக்குப்பிடித்த நடிகர், நடிகை யார்?

புகழின் உச்சத்தில் இருந்தும் இப்போதும்கூட நடிப்புப் பட்டறைக்குச் சென்று பயிற்சியெடுக்கும் கமல். சூர்யாவை ரொம்பவே பிடிக்கும். தமிழே தெரியாத நடிகைகளை நடிக்க வைக்கும் சினிமாவில் எப்படி நடிகைகளிடம் நடிப்பை எதிர்பார்ப்பது. நடிகைகளிடம் யாரும் நடிப்பை எதிர்பார்ப்பதில்லையே என நீங்கள் மனதிற்குள் கூறுவது எனக்குக் கேட்கிறதே.

இரா.ஜெ.துஷ்யந்தா, சூறாவத்தை

கனம் வியாசர் அவர்கட்கு,

சில மனிதர்கள் இரவு நேரங்களில் உறவினர்களோடு உரையாடுவதை விட ரிவி சீரியலில் அதிக கவனம் செலுத்துகிறார்களே, இதுபற்றி உமது கருத்து என்ன?

கற்பனையில் கூட நடந்திராத சம்பவங்களை குடும்பத்தில் நடப்பது போல குரோதமாய் நீண்டு செல்லும் ரிவி தொடர்கள் எமது குடும்ப சமூக கட்டமைப்பை அறுத்தெறிவதாகவே இருக்கின்றதே தவிர வேறு எதுவும் இல்லை.

க.கணபதிதாசன், கட்டைக்காடு

அன்பின் வியாசரே!

அண்மைய இந்திய தேர்தல் முடிவு தமிழர் வாழ்வை சீரமைக்குமா?


வரலாறு காணாத அமோக வெற்றி பெற்ற பா.ஜ.க. தமிழர் பிரச்சினையை பக்குவமாய் அவதானத்துடன் கையாளும் எனக் காத்திருந்த தமிழருக்கு பா.ஜ.க. ஆரம்பத்திலேயே உச்சி அடி அடித்துவிட்டது.

*இருமல்காரி போக செருமல் காரி வந்தாளாம்* எனும் தமிழ்ப்பழமொழி ஒன்று உண்டு அடே இளைய மருமகன வந்த பின்னர்தான் மூத்த மருமகனின் அருமை தெரியும் எனும் இன்னொரு பழமொழிக்குள் பா.ஜ.க. சிக்காமல் இருந்தால் சரி..

# மோடியின் செயலை எக்காரணம் கூறியும் நியாயப்படுத்த முடியாது

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெரிவிப்பு

**நரேநதிர மோடி பதவியேற்பு விழாவில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அழைப்பதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.**



இது தொடர்பாக டில்லியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி. ராஜா கூறியதாவது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தனது பதவியேற்பு விழாவுக்கு அழைத்துள்ள மோடியின் செயலை எக்காரணத்தைக் கூறியும் நியாயப்படுத்த முடியாது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் நிலவிய போது என்ன நடந்தது? யாருக்கெல்லாம் பாதிப்பு ஏற்பட்டது? அதன் பின்னணியில் இருந்தவர்கள் யார், யார்? என்பதை நன்றாக உணர்ந்த கட்சி பா.ஜ.க. எனவே, நட்பு நாடு, நல்லெண்ண அடிப்படையில் அழைப்பு அனுப்பினோம் என்றெல்லாலம் அக்கட்சித் தலைவர்கள் கூறுவதை நம்ப மக்கள் தயாராக இல்லை.

இலங்கை போர்க்குற்றங்கள் மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று இந்தியா முழுவதும் பல்வேறு அரசியல் கட்சிகள் குரல் கொடுத்து வருகின்றன. அப்பாவித் தமிழர்களைக் குறி வைத்து இனப் படுகொலையும் சொல்ல முடியாத அளவுக்கு மனிதவுரிமை மீறல்களும் இலங்கையில் அரங்கேறின. அதற்குக் காரணமானவர்கள் மீது விசாரணை நடத்தி தண்டிக்கப்பட வேண்டும்.

இக்கோரிக்கையைத்தான் இந்தியாவில் உள்ள தமிழ் அமைப்புகளும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், அதைக் கண்டும் காணாமற் போனதன் விளைவைத்தான் தமிழ்நாட்டில் லோக்சபா தேர்தல் முடிவில் காங்கிரஸ் கட்சி பேரழிவை சந்தித்துள்ளது.

இப்போது அதே பாணியை கடைப்பிடிக்க பா.ஜ.கவும் தயாராகி வருவதைத்தான் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மோடி அனுப்பியுள்ள அழைப்பிதழ் காட்டுகிறது.

மோடி நாட்டின் பிரதமராகி விட்டால் இலங்கை பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என பா.ஜ.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் பா.ம.க. ம.தி.மு.க. போன்ற கட்சிகளின் தலை வர்கள் கூறி வருகின்றனர். ஆனால், இலங்கை விவகாரத்தில் இந்தியா இதற்கு முன்பு கடைப்பிடித்து வந்த வெளியுறவுக் கொள்கையைத்தான் பா.ஜ.க. அரசு கடைப் பிடிக்காது என அவர்களால் உறுதிபடக் கூற முடியுமா?

மொத்தத்தில் ஆட்சி மாற்றத்தின் மூலம் தமிழர் நிலையில் மாற்றம் ஏற்படும் என தமிழர்கள் கொஞ்சமாவது நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால், அந்த நம்பிக்கையைத் தகர்க்கும் வகையில் மோடி செயற்பட்டிருப்பது கவலைக்குரியது என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




– திரைவிமர்சனம்

**நடிகர் : ரவிக்குமார்**
**நடிகை : பவித்ரா**
**இயக்குனர் : ஆர்.கே.அன்பு செல்வன்**
**இசை : ஜீவன்மயில்**
**ஒளிப்பதிவு : மித்ரஸ்**

நாயகன் ரவிக்குமார் ஐ.ஏ.எஸ். படித்து விட்டு ஊரில் நண்பர்களுடன் சுற்றி திரிகிறார். ஒருநாள் பேருந்து நிலையத்தில் நாயகி பவித்ராவை சந்திக்கும் ரவிக்குமார், அவருக்கு எதேச்சையாக உதவி செய்ய, இருவருக்குள்ளும் காதல் மலர்கிறது.

நாயகனின் அப்பா ஆர்.கே.அன்புசெல்வன் அந்த ஊரில் அநியாயங்களை தட்டிக் கேட்கும் ஊர் பெரியவர். அம்மாவோ பெரிய பணத்தாசை பிடித்தவள். தனது மகனுக்கு அதிக வரதட்சணையுடன் பெண்ணை பார்த்து திருமணம் செய்துவைக்க வேண்டும் என்று கனவோடு வாழ்ந்து வருபவள்.

இந்நிலையில், நாயகனுக்கு சப்-கலெக்டர் வேலை கிடைக்கிறது. உடனே அவனுக்கு திருமணம் செய்துவைக்க ஏற்பாடுகள் செய்கின்றனர். நாயகனோ, நாயகி நினைவாகவே இருப்பதால் பெண் பார்க்கும் படலத்துக்கு முழு சம்மதம் இல்லாமல் வருகிறான். ஆனால், வந்த இடத்தில் நாயகியே மணப்பெண்ணாக இருப்பதால் எந்த வரதட்சணையும் வேண்டாம் என்று கல்யாணத்துக்கு சம்மதம் சொல்கிறான்.


இருவருக்கும் திருமணம் நடக்கிறது. தான் நினைத்ததுபோல் நடக்கவில்லையே என நாயகனின் தாய் தினமும் வருத்தத்தோடு இருக்கிறாள். இந்நிலையில், நாயகன் விடுமுறை முடிந்து பணிக்கு செல்கிறான். வீட்டில் தனிமையில் இருக்கும் நாயகியிடம், நாயகனின் அம்மா கடுமையாக நடந்து கொள்கிறாள். அவளை செத்துவிடு என்னும் அளவுக்கு அவளை திட்டி தீர்க்கிறாள்.

இதனால் மனமுடைந்த நாயகி தற்கொலை செய்துகொள்கிறாள். இந்த தற்கொலைக்கு நாயகனின் அம்மாவும், அப்பாவும்தான் காரணம் என்று அவர்களை பொலிஸ் கைது செய்கிறது. இதன்பிறகு நாயகனின் வாழ்க்கை என்னவாயிற்று? நாயகன் தன் அம்மாவையும், அப்பாவையும் வெளிக்கொண்டு வந்தாரா? என்பதே மீதிக்கதை.

பேராசை பெருநஷ்டத்தில்தான் முடியும் என்பதை சொல்ல வந்திருக்கும் மற்றொரு திரைப்படம்தான் இது. ஆனால், சொல்ல வந்த கருத்தில் தேவைய்யில்லாத காட்சிகளை புகுத்தி படம் முழுவதையும் ரசிக்க முடியாமல் வைத்துவிட்டார் இயக்குனர் ஆர்.கே. அன்புச்செல்வன்.

படத்தின் நாயகன் ரவிக்குமார்தான் என்றாலும், ஆர்.கே.அன்புச்செல்வனே படம் முழுவதும் வருகிறார். அன்புசெல்வனுக்கும் நடிப்பு வரவில்லை. இவர் ரவுடிகளிடம் சண்டை போடும் போது சிரிப்புதான் வருகிறது. லஞ்சம், வரதட்சணை கொடுமை, அதிக விலைக்கு உணவு விற்கும் ஓட்டல்கள், விவசாயிகளின் மறுவாழ்வு, ரவுடிகளின் அராஜகம் என சமூக பிரச்சினையை கையிலெடுத்திருக்கும் இயக்குனர், அதை தெளிவாக காட்சிப்படுத்தவில்லை. நாயகி பவித்ரா அழகாக இருந்தாலும், நடிப்பு சுத்தமாக வரவில்லை. கோபம், காதல் என எதையும் தன் முகத்தில் காட்டமுடியாமல் தவியாய் தவிக்கிறார்.

ஜீவன் மயில் இசையில் 'தங்கம் விதை விதைச்சி' பாடல் கேட்கும் ரகமாக இருந்தாலும், அதை காட்சியாக்கிய விதம் காமெடியாக இருக்கிறது.



மொத்தத்தில் 'என் நெஞ்சை தொட்டாயே' மனதை தொடவில்லை.



ராகுல் பிரீட் சிங்

## கபாலியிருந்து மெட்ராசானார் கார்த்தி



பிரியாணி படத்திற்குப் பிறகு கார்த்தி, அட்டகத்தி படத்தை இயக்கிய ரஞ்சித் இயக்கத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் கார்த்திக்கு ஜோடியாக கேத்ரீன் தெரேசா நடிக்கிறார்.

வட சென்னையை மையமாகக் கொணட இப்படத்தின் தலைப்பு முதலில் **கபாலி** என வைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் பூரவி வந்தன. தற்போது **மெட்ராஸ்** என்ற தலைப்பை தேர்வு செய்துள்ளதாக தகவல் பரவியுள்ளது.

மேலும் இப்படத்தின் பர்ஸ்ட்லுக், டீஸர் போன்றவை கார்த்தியின் பிறந்தநாளான இன்று வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கொலைவெறி நாயகன் வரியில் இளையதளபதியின் குரல்



ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்துவரும் புதிய படம் கத்தி. இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக சமந்தா நடிக்கிறார்.

இதன் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வருகிறது. தீபாவளிக்கு படத்தை ரிலீஸ் செய்ய படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

வித்தியாசமான கதைக்களத்தில் ஆக்ஷன் படமாக தயாராகும் இப்படத்தில் விஜய் இரு வேடங்களில் வருகிறார். இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

இப்படத்தில் வரும் 5 பாடல்களில் 4 பாடல்களுக்கு இசையமைத்து கொடுத்து விட்டார். மீதமுள்ள ஒரு பாடலை விஜய் பாடபோகிறாராம். விஜய் பாடும் அந்தப் பாடலின் வரிகளை தனுஷ் எழுதுவதாக தகவல் கசிந்துள்ளது.

விஜய்யும் தனுசும் நெருக்கமான நட்பு வைத்துள்ளனர். விருந்துகளில் இருவரும் அடிக்கடி சந்திக்கிறார்கள். இந்நிலையில் விஜய் நடிக்கும் படத்தில் தனுஷ் பாடல் எழுதவிருப்பது அப்படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகமாக்கியுள்ளது.

## அந்த நாள் ஞாபகம்



குதூகலக் கவிஞர்களின் குழாம்: கவியரங்க மேடை ஒன்றில் வைரமுத்து, கருணாநிதி, அப்துல் ரகுமான், மு.மேத்தா, வாலி ஆகியோரின் சங்கமம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச தொழிலை நம்பியிருப்பதை விடுத்து நாமும் நாமாக முயல்வோம்

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சி ஒன்று ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவும் உணரக்கூடியதாகவும் உள்ளது.

எம்மவரின் பெரும் பகுதி முதலில் கட்டடங்களிலும் வாகனங்களிலும் முடக்கப்பட்டுள்ளன.

மேலும், பலர் சீட்டுக்கட்டியும் மீற்றர் வட்டிக்கு கொடுத்தும் வாங்கியும் காசோலை மோசடிகளாலும் வெளிநாடுசெல்வதற்கெனப் பணம் கட்டியும் ஏமாந்துள்ளனர்.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பொருளாதார அனர்த்தம் எமது புலம்பெயர் உறவுகளின் வேலைவாய்ப்புகளையும் பாதித்துள்ளதால் வெளிநாட்டுப் பணத்தின் வருகையும் குறைந்துள்ளது.

யுத்தத்திற்குப் பின்னரான தென்னிலங்கை பெரிய வர்த்தக மற்றும் குத்தகை நிறுவனங்களின் வருகையினூடாகவும் அதிகரித்த மதுப்பாவனையாலும் எமது பணம் குடாநாட்டைவிட்டு தென்னிலங்கையை நோக்கி நகருகிறது.

குடாநாட்டு வர்த்தகர்களும் அவர்களுடன் போட்டியிட மிகச்சிரமப்படுகின்றனர்.

போதாதென்று திருவிழாக்கள், திருமண வைபவங்கள் மற்றும் பூப்புனிதநீராட்டுவிழாக்கள் என்பவற்றில் தமது கௌரவத்தை நிலைநாட்டுவதற்கெனக் கடன்பட்டும் பணம் செலவழிக்கின்றனர்.

அரசவேலைகளுக்கு செல்வது மட்டுமே கௌரவம் என்ற எமது மக்களின் நீண்டகால மனோபாவம் காரணமாக தனியார் துறைகளையோ புதிய தொழில்முயற்சிகளைத் தேர்ந்தெடுக்கவோ தயங்குகின்றனர்.

அத்துடன் பரம்பரை பரம்பரையாகச் செய்து வந்த விவசாயத்தைத் தொடர்ந்து செய்வதற்குப் புதிய சந்ததியினர் தயங்குகின்றனர். ஒட்டுமொத்தத்தில் எமது குடாநாட்டு மனிதவளம் வீணடிக்கப்படுகிறது.

அதுமட்டுமல்லாது தொழில் வாய்ப்பின்மை சுலப வழியில் பணக்காரராக வேண்டும் என்ற எண்ணம், சினி மாக்களின் தாக்கம் போன்றவை காரணமாகவும் களவு, கொலை, கொள்ளை மற்றும் கோஷ்டி மோதல் போன்றன குடாநாட்டிலே மலிவடைந்து செல்கின்றன.

ஒட்டுமொத்தத்தில் குடாநாட்டு மக்களிடம் பணப்புழக்கம் வெகுவாகக் குறைந்துள்ளதோடு, மனிதவளம் வீணடிக்கப்படுகிறது. கலாசார, பண்பாட்டு விழுமியங்களும் சீரழிந்து செல்கின்றன.

இத்தன்கைய கொடுமைகள் போதாதென்று பருவமழை பொய்த்ததால் உள்ளூர் நெல்உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க நாம் மீளுவதற்கான வழிதான் என்ன?

முதலாவதாக, இத்தகையதோர் நிலைமை ஏற்பட்டுள்ளதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். விளங்கிக்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக,மற்றவர்கள் எமக்கு உதவுவார்கள் என்ற மனோபாவத்திலிருந்து விடுபட்டு "இது எமது பரச்சினை. இதனை நாமே கையாளவோம்" என்ற உறுதிப் பாட்டிற்கு வரவேண்டும்.

மேலும், எமது தன்னிறை விற்காக மட்டுமின்றி தென்னிலங்கைக்கோ வெளிநாடுகளுக்கோ ஏற்றுமதி செய்து குடாநாட்டிற்குள் பணப்பாய்ச்சுகையைக் கூட்டும் உள்ளூர் உற்பத்திகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது வேலைவாய்ப்பினையும் குறைக்க உதவும்.

குறிப்பாக, விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி மற்றும் பனம்பொருட்கள் உற்பத்தி போன்றவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அந்த வகையிலே, இன்று ஒரு நன் முயற்சியாக மானிப்பாய

**Dr.S. கண்ணதாசன்**



"கார்கில்ஸ்" உணவு நகரிற்கு (Cargill's food city) முன்பாக "ஜோய்" மருந்தகமும் கால்நடை சுகாதாரப் பிரிவும் இணைந்து கோழி வளர்ப்பும் நோய்களிலிருந்து அவற்றைப்பாதுகாப்பது தொடர்பானதுமான ஒரு கருத்தரங்கை நடத்துகின்றன.

காலத்தின் தேவையறிந்து நடத்தப்படும் இம் முயற்சி பாராட்டுதலுக்குரியதாகும்.

குறுகிய காலப்பகுதியில் இலாபகரமான வருமானம் தரக்கூடியதான இறைச்சி மற்றும் முட்டைக் கோழி வளர்ப்பானது யுத்தம் காரணமாக விதவையாக்கப்பட்ட பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

மேலும், கோழிகளைக் கொடுத்து விட்டோம் ஆடுகளைக் கொடுத்து விட்டோம் என்பதோடு மட்டும் நின்றுவிடாது,பயனாளிகள் சுயமாகவும் பயன் பேறடையும் விதத்திலும் இயங்குவதை உறுதிப்படுத்தும் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

இப்படியான கருத்தரங்குகள் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அவர்களை சுயமாக இயங்கும் ஒரு நிலைக்கு மாற்றுவதாயுமிருக்கும்.

இன்று பாரிய பொருளாதார வளர்ச்சி கண்டுள்ள சீனாவில் ஒவ்வொரு சிறு கிராமமும் கைத் தொழிற பேட்டையே. ஒவ்வொரு வடும் அடிப்படைத் தொழிற் சாலையே.

அரசதொழிலையும் அரசியல்வாதிகளையும் நம்பியிருப்பதை விடுத்து நாமும் ஏன் நாமாக முயலக் கூடாது?

இறுதியாக, சமூக அக்கறையுள்ளவரகள் துறைசார்ந்தவர்களுடன் இணைந்து மக்கள் மத்தியில் ஒருவிழிப்புணர்வையும் உத்வேகமுள்ள இயங்குநிலை மாற்றத்தையும் ஏற்படுத்த வேண்டியது காலத்தின் உடனடித் தேவையாகும்.

---

## தில்லையம்பதியாள் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில்-தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் மஹோற்சவம் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய முன்றலில் வேட்டைத் திருவிழாவும் இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும், எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

மேலும், உற்சவ காலங்களில் தினமும் முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், முற்பகல் 11.30 மணிக்கு உள்வீதி உலாவும், பிற்பகல் 6 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, இரவு 7 மணிக்கு வெளிவீதி உலா என்பனவும் நடைபெறவுள்ளது. (அ)

## க.பொ.த சா/த பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)


இவ்வாண்டுக்கான கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் தோற்றும் பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக்கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக் களம், தபாற்பெட்டி-1503, கொழும்பு என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பல் வேண்டும். (அ)

---

# புலிகளை கொன்றமைக்கு பழிதீர்க்க முனைகின்றார் நவநீதம்பிள்ளை

## இப்படிக் கூறுகிறது ஹெல உறுமய



தமிழீழ விடுதலைப் புலிகளை கொன்றமைக்கு பழி தீர்க்கவே நவநீதம்பிள்ளை அவசரப்படுகின்றார். சர்வதேச விசாரணையின் இறுதி முடிவு மீண்டுமொரு ஆயுதப் போராட்டமேயாகும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணையினை நடத்த ஐ.நா. ஆணையாளர் நவிபிள்ளை தீவிரம் காட்டுவது தொடர்பில் கருத்துக் கூறும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு எதிராக வலுவானதொரு சர்வதேச குழுவினை அமைக்கவே கூட்டமைப்பு முயற்சித்துக் கொண்டிருக்கின்றது.

இதற்கு இந்தியாவின் உதவி கிடைக்குமென்பது வெறும் பகற் கனவு.

இலங்கையில் போர்க்கால சூழலில் சர்வதேச நாடுகளின் ஆதரவும் உதவிகளும் எமக்குக் கிடைத்தது. அப்போது சர்வதேசத்திற்கு விடுதலைப்புலிகள் அமைப்பு பயங்கரவாதிகளாகவே தெரிந்தனர். அனைத்து நாடுகளிலும் தமிழீழ விடுதலைப்புலிகளை தடை செய்யப்பட்ட இயக்கமாகவும் சர்வதேச அளவில் தேடப்படும் இயக்கமாகவும் காணப்பட்டது. எனினும் யுத்தத்தின் பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கம் நல்லதொரு இயக்கமாகவும் அவர்களின் ஆயுதப் போராட்டம் நியாயமான ஒன்றெனவும் வலியுறுத்த ஆரம்பித்து விட்டனர்.

இன்று இலங்கைக்கு எதிராக விசாரணையினை கொண்டுவர முயற்சிக்கும் அனைவரும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களென்பது உண்மை. நவநீதம்பிள்ளை முதற்கொண்டு ஜெயலலிதா வரையிலும் இலங்கையில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் அனைவரும விடுதலைப்புலிகளினால் வழிநடத்தப்பட்டு வருபவர்களின் கைப்பொம்மைகள்.

தீவிரவாதிகளின் கறுப்புப் பணம இவர்களிடம் குவிகின்றதன் காரணத்தினாலேயே தமிழர் பிரச்சினை எனும் பெயரில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளை பொதுமக்கள் என பொய்யான அறிக்கையினைத் தயாரித்து நாட்டையும் சிங்கள மக்களையும் பழிவாங்கும் நோக்கத்திலேயே மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வேகமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையொன்று இடம்பெற்று இறுதியில் மீண்டுமொரு ஆயுதப்போராட்டம் ஏற்படும் நிலைமையை உருவாக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

அதில் சர்வ தேசம் வெற்றி காண ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

மேலும், இலங்கையில் தமிழ் மக்களை துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தி சர்வதேச நாடுகளிடம் பொய்யான கருத்துகளைப் பரப்பி, அறிக்கையினை சமர்ப்பித்து இலங்கைக்கு எதிரான சர்வதேச குழுவொன்றினை அமைக்கும் முயற்சியினை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்கத்தேய நாடுகள் - இந்தியா மற்றும் தென்னாபிரிக்காவின் பலமும் உதவியும் தமக்குள்ள தென்ற நம்பிக்கையில் கூட்டமைப்பினர் செயறபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்தியத்தேர்தலில் ஆட்சி மாற்றம், ஜெயலலிதாவின் பெரும்பான்மை வெற்றி என்பன ஒருபோதும் கூட்டமைப்பிற்கு சாதகமாக அமையப் போவதில்லை என்றார்.

## இராஜதந்திர கடவுச் சீட்டுக்களை வழங்குவதில் முறைகேடுகள்

(கொழும்பு)

இராஜதந்திர கடவுச் சீட்டு வழங்கும் நடைமுறைகளில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின பாராளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இராஜதந்திர பதவிகளை வகிக்கா தவர்களுக்கு அதிகளவில் இராஜதந்திர ரீதியிலான கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

2005ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் 2ஆயிரத்து 872 இராஜ தந்திர கடவுச் சீட்டுக்களை வழங்கியுள்ளது.

மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், ஓய்வு பெறறுக் கொண்டவர்கள், அரசியல்வாதிகளின் தனிப்பட்ட செயலாளர்கள், ஊடகவியலாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், தகவல் தொழில்நுட்பவியலாளர்கள், ஊடகச் செயலாளர்கள், வங்கியாளர்கள், சட்டத்தரணிகள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலருக்கு இவ்வாறு இராஜ தந்திர கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

814

## பாட்டிலில் பெண்

ஓர் ஊரில் ஒரு விறகுவெட்டி இருந்தார். காட்டில் மரங்களை வெட்டி அவற்றை விற்றுப் பிழைத்து வந்தார்.

அவருக்கு ஒரு மகன். பல சிரமங்களுக்கு இடையில் அவனை படிக்கவைத்தார்.

பள்ளி விடுமுறையின் போது ஒருநாள் விறகுவெட்டி வேலைக்கு புறப்பட மகனும் வருவதாக சொன்னான்.

இது படிக்க வேண்டிய வயது. நீ படிக்க மட்டுமே செய். தவிர நம்மிடம் ஒரே ஒரு கோடரிதான் இருக்கிறது. நீ வந்தாலும் பயன் இருக்காது என்றார். பக்கத்து வீட்டுக்காரரிடம் கோடரியைக் கடன் வாங்கி வருகிறேன் என்றான் மகன் பிடிவாதமாக.

கோடரியைகடன்வாங்கிக்கொண்டு இருவரும் காட்டுக்குப்போய் கடுமையாக வேலைபார்த்தார்கள்.

மதிய நேரம் வந்தது. வீட்டிலிருந்து எடுத்து வந்த சாப்பரட்டை அப்பாவும் மகனும் சாப்பிட்டார்கள்.

பழங்கள் ஏதாவது பறித்துக் கொண்டு வருவதாக சொல்லிச் சென்றான் மகன். காட்டுக்குள் நீண்டதூரம் போனதும் பெரிய கருவேலமரம் இருந்தது.

அந்த மரத்திலிருந்து ஏதோ சத்தம் வந்தது.

மரத்தின் அருகில் சென்றான் மகன். அப்போது தயவுசெய்து என்னை விடுதலை செய். தயவு செய்து என்னை விடுதலை செய் என்ற ஓலம் கேட்டது.

அந்த மரத்தின் வேருக்கு அருகில் பெரிய பாட்டில் கிடந்தது. அதிலிருந்துதான் சத்தம் வந்தது .

பாட்டிலை எடுத்து அதன் மூடியைத் திறந்தான் மகன். அதிலிருந்து



முதலில் புகை வெளிவந்தது.

பின்னர் மங்கலாக ஓர் உருவம் தோன்றியது. சில நிமிடங்களில் அந்த உருவம் ஒரு பெண்ணாக மாறியது. அந்தப் பெண் இவனிடம் நான் செய்த தவறுக்குத் தண்டனையாக இந்த பாட்டிலில் அடைக்கப்பட்டேன். பல ஆண்டுகளாக பலரிடம் என்னை விடுதலை செய்யும்படி கெஞ்சினேன். யாரும் உதவவில்லை. அதனால் மனதில் கடும் வெறுப்புஉருவானது. இனி உன்னை யார் விடுதலை செய்கிறாரோ அவர் கழுத்தை உடைக்க சபதம் செய்தேன்.

எனவே உன் கழுத்தை உடைக்கப்போகிறேன் என்றாள் அவள்.

இது என்னடா வம்பு என்று வருந்திய அவன், இதோ பார் உன்னை விடுதலை செய்த எனக்கு நீ உதவிதான் செய்யவேண்டும். கழுத்தை உடைப்பது சரியில்லை.

தவிர எனக்கு ஒரு சந்தேகமும் இருக்கிறது என்றான். என்ன சந்தேகம் என்று கேட்டாள் அவள்.

இவ்வளவு பெரிய பெண்ணான நீ இந்தச் சிறிய பாட்டிலுக்குள் இருந்தாய் என்பதை எப்படி நம்புவது என்று கேட்டான் மகன்.

அந்தப் பெண் ஏதேதோ சொல்லியும் அவன் நம்பவில்லை. என்ன செய்தால் நம்புவாய்? என்று கேட்டாள்.

நீ அந்தப் பாட்டிலுக்குள் மீண்டும்போய் காட்டு என்றான். அவளும் யோசிக்காமல் அவன் சொன்னபடி செய்தாள். உடனே விறகு வெட்டியின் மகன் அந்த பாட்டிலை மூடிவிட்டான்.

அவள் இதை எதிர்பார்க்கவில்லை.



தயவுசெய்து என்னை விடுதலை செய். நீ சொல்வதை நான் செய்கிறேன். என்னை விடுதலை செய்தால் உனக்கு நான் அற்புதமான பரிசு தருவேன் என்று கெஞ்சினாள்.

நீ மீண்டும் என்னை கொல்ல வந்தால் என்ன செய்வது. உன்னை எப்படி நம்புவது என்று கேட்டான்.

அவள் மீண்டும் மீண்டும் கெஞ்சவே கடைசியில் மனம் இரங்கி அவளை மீண்டும் விடுவித்தான்.

விடுதலை பெற்ற அந்தப்பெண் அவனிடம் ஒரு துணியைக் கொடுத்து இதன் ஒரு பக்கத்தால் எதைத் தொட்டாலும் அது வெள்ளியாக மாறும். மற்றொரு பக்கத்தால் எந்தக் காயத்தைத் தொட்டாலும் ஆறிவிடும் என்று சொன்னாள்.

அவன் மிகுந்த மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு தந்தை இருக்கும் இடத்துக்கு வந்தான்.

மகன் வெகு நேரமாக காட்டுக்குள் சென்று சுற்றிவிட்டு வந்ததால், தந்தை மிகவும் கோபத்துடன் இருந்தார். எங்கே சுற்றிவிட்டு வருகிறாய்? என்று கேட்டார்.

எதையோ சொல்லி சமாளித்த மகன், கடன் வாங்கி வந்த கோடரியை தன்னிடம் இருந்த துணியால் துடைத்தான்.

பிறகு மரத்தை வெட்ட ஆரம்பித்தான். ஆனால், அந்தக் கோடரி வளைந்துவிட்டது.

அப்போதுதான் அது வெள்ளியாக மாறிவிட்டதைக் கவனித்தான். கோடரிவளைந்து போனதைக் கண்ட தந்தை, மகனைக் கடுமையாகத் திட்டினார்.

இப்படி வளைத்துவிட்டாயே. பக் கத்து வீட்டுக்காரனுக்கு என்ன பதில் சொல்வது? ஒரு கோடரி 10 வெள்ளிக் காசுகள் ஆகுமே என்றார்.

அப்போது மகன், தந்தையிடம் கவலைப்பட வேண்டாமென்று ஆறுதல் கூறினான்.

பிறகு, பொற்கொல்லரிடம் சென்றான். வெள்ளிக் கோடரியை விலைக்கு எடுத்துக் கொள்ளும்படி சொன்னான். பொற்கொல்லரும் அந்தக் கோடரியை எடுத்துக்கொண்டு அதற்கு 110 வெள்ளிக்காசுகளைக் கொடுத்தார்.

சந்தைக்குச் சென்ற மகன் 10 வெள்ளிக்காசுகளைக் கொடுத்து. புதிய கோடரியை வாங்கிப் பக்கத்து வீட்டுக்காரருக்குக் கொடுத்தான். பிறகு, 100 வெள்ளிக்காசுகளைத் தந்தையிடம் கொடுத்துவிட்டு காட்டில் நடந்ததைச் சொன்னான்.

தந்தைக்கு ஏகப்பட்ட சந்தோஷம். இனி நாம் மரங்களை வெட்ட வேண்டாம் என்ற மகன், அந்தத் துணியின் உதவியால் குறைந்த பணத்தைப் பெற்றுக் கொண்டு மற்றவர்களுக்கு வைத்தியம் செய்ய ஆரம்பித்தான். எல்லாக் காயங்களையும் அவன் ஆற்றியதால், அவனிடம்வைத்தியம்செய்துகொள்ள பல ஊர்களிலிருந்தும் ஆட்கள் வந்தார்கள்.

துணியின்மற்றொரு முனையை வைத்து எல்லாப் பொருட்களையும் வெள்ளியாக்க முடியும் என்றாலும்கூட அவன் அதைப் பயன்படுத்தவே இல்லை.

மக்களைக் குணப்படுத்தியே நல்ல பெயரும் புகழும் அடைந்தான்!

☆☆☆☆☆☆☆☆☆☆☆

05.2014
25

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1659 - ரிச்சார்ட் குரொம்வெல் இங்கிலாந்தின் "ஆட்சிக் காவலர் பெருமகன்" (Lord Protector) பதவியைத் துறந்தார். பொதுநலவாய இங்கிலாந்தின் இரண்டாவது குறுகிய கால அரசு ஆரம்பமானது.
- 1810 - ஆர்ஜெண்டீனாவில் இடம்பெற்ற புரட்சியின் போது ஆயுதம் தரித்த பியூனஸ் அயரஸ் மக்கள ஸ்பெயின் ஆளுநரை வெளியேற்றினார்கள்.
- 1837 - கியூபெக்கில் பிரித்தானியாவின் ஆட்சிக்கெதிராக நாட்டுப்பற்றாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்.
- 1895 - போர்மோசா குடியரசு அமைக்கப்பட்டது.
- 1953 - நெவாடாவில் ஐக்கிய அமெரிக்கா தனது முதலாவதும் கடைசியுமான அணு ஆற்றலினாலான பீரங்கியைச் சோதித்தது.
- 1961 - அப்பல்லோ திட்டம்: பத்தாண்டுகளின் இறுதிக்குள் சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் ஐக்கிய அமெரிக்காவின் திட்டத்தை ஜனாதிபதி ஜோன் எஃப். கென்னடி அமெரிக்கக் காங்கிரசில் அறிவித்தார்.
- 1963 - அடிஸ் அபாபாவில் ஆபிரிக்க ஒன்றியம் உருவானது.
- 1966 - எக்ஸ்புளோரர் 32 விண்வெளிக்கு ஏவப்பட்டது.
- 1977 - ஸ்டார் வோர்ஸ் திரைப்படம் வெளிவந்தது.
- 1982 - போக்லாந்து போரில் கவெண்ட்ரி என்ற ஆங்கிலக் கப்பல் மூழ்கியது.
- 1997 - சியேரா லியோனியில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் ஜனாதிபதி அகமது கப்பா பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 2000 - லெபனானில் 22 ஆண்டுகளாக நிலை கொண்டிருந்த இஸ்ரேல் இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறினர்.
- 2001 - அமெரிக்காவைச் சேர்ந்த 32 வயது எரிக் வைஹென்மாயர் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதலாவது கண் பார்வை இழந்த மனிதர் என்ற பெருமையைப் பெற்றார்.
- 2002 - மொசாம்பிக்கில் தொடரூந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 197 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1458 - மஹ்மூத் பேகடா, குஜராத் சுல்தான் (இ. 1511)
- 1865 - பீட்டர் சீமன், நோபல் பரிசு பெற்ற டச்சு இயற்பியலாளர் (இ. 1943)
- 1866 - மு. சி. பூரணலிங்கம் பிள்ளை, தமிழறிஞர் (இ. 1947)
- 1878 - சோமசுந்தரப் புலவர், ஈழத்துப் புலவர் (இ. 1953)
- 1918 - நா. முத்தையா, ஆத்மஜோதி இதழாசிரியர் (இ. 1995)
- 1933 - அநு. வை. நாகராஜன், ஈழத்து எழுத்தாளர்
- 1954 - முரளி, மலையாள நடிகர் (இ. 2009)

### இறப்புகள்

- 1988 - ஏர்ணஸ்ட் ருஸ்கா, ஜேர்மனிய இயற்பியலாளர் (பி. 1906)
- 2013 - டி. எம். சௌந்தரராஜன் தமிழ்த் திரைப்படப் பாடகர், (பி. 1923)

### சிறப்பு நாள்

- சர்வதேச காணாமற்போன குழந்தைகள் தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



51 ...ஆனால் உருவு கண்டு எள்ளாதே என்று உள்மனம் சொல்லியது.

ஒரு தாள் தந்தேன்.

சொல்வதை எழுது என்றேன்:

சுருக்கெழுத்துக்கு மட்டுமே வசப்படுகிற வேகத்தில் படபடவென்று சொல்லி முடித்தேன்.

பாறையில் மழை பெய்த மாதிரியே அவன் பரபரப்பில்லாமல் இருந்தான்.

எழுதிவிட்டேன் என்று ஏடு காட்டினான்.

பார்த்தேன்; பரவசமானேன்.

ஒற்றுப் பிழைகள் ஒன்றிரண்டு உற்று உற்றுப் பார்த்தாலும் கையெழுத்தில் ஏதோ கலை மின்னியது.

ஒவ்வோர் எழுத்தும் ஒரு வார்த்தை பேசியது.

எழுத்தில் இவ்வளவு செப்பம் இருந்தால் மனதில் அவ்வளவு நுட்பம் இருக்கிறது என்று அர்த்தம்.

மனதில் அவ்வளவு நுட்பம் இருந்தால் இவன் பற்ற வைத்தால் பற்றிக் கொள்வான் என்று அர்த்தம்.

கையெழுத்தைப் பாராட்டி விட்டு அவன் கண்களைக் கவனித்தேன்.

அதில் வஞ்சகம் இல்லை.

"சரி! உன்னைச் சேர்த்துக் கொள்கிறேன்; முதலில் உன் லுங்கியை இறக்கி விடு!" என்றேன்.

அன்று புதிதாய்ப் பிறந்தான்.

மெல்ல மெல்ல நகர நாகரிகத்துக்கு வந்தான். தினந்தோறும் முகம் மழிக்க வேண்டும் என்ற முக்கியமான முடிவுக்குக் கூட வந்து விட்டான்.

ஒலிப்பதிவுக் கூடத்துக்கு அழைத்துப் பேனேன்.

நடிகர் நடிகைகளைப் பார்த்து மோட்சத்துக்குப் போன அவனை மீண்டும் பூமிக்கு அழைத்து வர வேண்டியதாயிற்று.

ஒரு புதிய உலகத்திற்குள் வந்ததும் புலன் மாறிப்போனவனாய்த் தடுமாறினான்.

இங்கு எது ஜன்னல்; எது கதவு; எது சுவர்; எது வழி; என்று உணர்ந்து கொள்ளவே அவனுக்கு ஓராண்டாயிற்று.




நாளடைவில் நானே வியக்கும் வண்ணம் விசாலமாய் விரிந்தான்.

விசிறி வாழையாய் விஸ்பரூபமெடுத்தான்.

பட உலகமெங்கும் அவன் கையெழுத்து பரவலாகப் பேசப்பட்டது.

பாடலை வாங்கியவர்கள் யாரும் பாடலைப் படிக்காமல் அந்தக் கையெழுத்திலேயே ஒரு கணம் கரைவதை நான் கவனித்தேன்.

கோபப்பட்டால் எப்படி அவன் கொதிப்படைவதில்லையோ அப்படியே பாராட்டிச் சொன்னாலும் பரவசப்படுவதில்லை.

நான் வாய்மொழியாய்ச் சொல்லச் சொல்ல எழுதிக் கொடுப்பது அவன் வேலை.

என்னை மறந்து, என்னில் கரைந்து, தமிழோடு தமிழாகி, ஒலியோடு ஒலியாகி, ஓசையோடு வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டேயிருப்பேன்.

அவனிடம் ஓர் உணர்ச்சியும் இருக்காது.

தட்டச்சு எந்திரமாவது சத்தம் போடும்; இவனிடம் அதுவும் இருக்காது.

அபாரமான வரி வந்து விழுகிற போது என் முதுகை நானே தட்டிக் கொண்டு அவனைப் பார்ப்பேன்; எழுதி முடித்துவிட்டு அவன் ஈ ஓட்டிக் கொண்டிருப்பான்.

இவன் முதலிரவில் தன் மனைவியையாவது பாராட்டுவானா என்று சோகப் பட்டுக் கொள்வேன்.

ஆனால் அவன் அறிவாளி என்பதையும் அவன் ரசனையின் உயரங்கள் உன்னதமானவை என்பதையும் சில சமயங்களில் கண்டு சிலிர்த்திருக்கிறேன்.

சராசரிக் கவிதைகள், சராசரித் தமிழ்ப் படங்கள், சராசரிப் பத்திரிகைகள் இவைகளையெல்லாம் அவன் மருந்துக்குக்கூட மதிப்பதில்லை.

நான் சொல்லாமல் எந்த வேலையையும் அவன் செய்வதில்லை; நான் சொல்லி எந்த வேலையையும் அவன் செய்யாமல் இருந்ததில்லை.

அவன்மனம் புண்பட நான் நடந்திருக்கிறேனே தவிர, என் மனம் புண்பட அவன் எப்போதும் நடந்ததில்லை.

ஒரே ஓர் எழுத்தின் அடித்தலுக்காக ஒரு கடிதத்தையே கிழித்திருக்கிறேன்; அவன் கலங்கியதில்லை.

தொலைபேசிக்குப் பக்கத்தில் எழுதுகோல் வைக்கவில்லை என்பதற்காகத் தொலைபேசியைத் தூக்கி எறிந்திருக்கிறேன்; அவன் நொறுங்கியதில்லை.

(தொடரும்)

-வைரமுத்து-

# உங்கள் பிறந்த எண் 03 இல் கூட்டெண் 02 இன் பலன்கள்



12

### தோற்றம்

சராசரிக்கு அதிக உயரத்துடன் குருவுடன் சந்திரன் இணைந்த பலன் வரும். பொன் நிறத்தில் மஞ்சள் கலந்த நிற மெத்தென்ற பூமேனி அமைந்திருக்கும். அடர்ந்த தலைமுடி, புருவங்கள், சற்று மேலே தூக்கிய மூக்கு, அகன்ற நெற்றி, தடித்த உதடுகள், சிறிய வாய், பருத்த கன்னங்கள் இருக்கும். முத்துப் போன்ற பற்கள் வரிசையாக இருக்கும். லேசாக வயிறு பருமனாக இருக்கும். அழகான வடிவம் மதிக்கத்தக்கதாக கவர்ச்சியான கண்களுடன் இருக்கும். லேசான நீண்ட கோள முகமும் மேடான நெற்றியும் உண்டு. சுறுசுறுப்பா இருப்பர். பரபரப்பாகக் காணப்படுவர்.

### குணம்

தெய்வ பக்தி உண்டு. நற்பெயர் எடுப்பதில் ஆசை இருக்கும். சட்ட திட்டத்திற்கு கட்டுப்படுவர். பிறரைக் கெடுக்கமாட்டார். ஆன்மிக ஈடுபாடு பக்தியாக இருக்கும். இருந்தாலும் சஞ்சல மனம் உடையவர்களாகையால் ஆத்திரமும் கோபமும் பிறர்மேல் அடைவர். க்ஷணசித்தம் க்ஷணபித்தம் என மாறும்போக்கை அறிவால் வெல்லுவார். கல்விப் பயிற்சி உடையவர்.

பிறருக்கும் தாம் கற்றதைப் போதிப்பர். பல இடங்களிலும் அலைந்து திரிவர். பல மகான்களைத் தரிசிப்பர். பல புண்ணிய தலங்களைச் சுற்றுவர். வைராக்கியம் உள்ளவர். குடும்ப பாசம் பற்று உள்ளவர். பிடிக்காத இடம், மனிதரைவிட்டு ஒதுங்கிவிடுவர். பிறகு திரும்பிப் பார்க்கவே மாட்டார். நல்ல பேச்சுத் திறமை இருக்கும். கவிதைக்கு உயிரும் கொடுப்பர். மருத்துவத் துறையிலும் சாதனை செய்யக் கூடியவர். அமைதியை விரும்புவர். பொருத்தமான காரணம் இருந்தால் சரியான சமயத்தில் கோபப்படுவர். சிறந்த நிர்வாகம் அறிவர். குடும்பத்தை நன்கு நிர்வகிப்பர். சில சங்கதிகளில் அதிக விருப்புள்ள இவர்கள் வெட்கப் படாமல் அவற்றில் ஈடுபடுவர்.

சாப்பாடும், தூக்கமும் இவர்களுக்கு ஒரு பொருட்டேயில்லை. சிக்கனக்காரரான இவர்கள் நன்கு உழைப்பர். ஆட்கள் பலமும் பண பலமும் இவர்களுக்கு உண்டாகும். சுயநலத்துக்கும் அவற்றைப் பயன்படுத்துவர். பொது நலத்துக்கும் நன்கு கையாள்வர். சகிப்புத் தன்மை இருக்கும். வயதானாலும் சிற்றின்ப தேட்டம் குறையாது. சமூகத்தில் மிக மரியாதையான இடத்தில் இருப்பார்கள். புகழைத் தகுதிக்கேற்ப அடைவர்.

ஏதாவது கெட்ட பழக்கமும் ஏற்படலாம். நடு வயதுக்குப் பிறகே அப்படி இருக்கும். குடிப்பழக்கம் ஏற்படின் விடமுடியாமல் தவிப்பர். மனக் குழப்பமும் அச்சமும் பிற்காலத்தில் உண்டாகும். மனம் ஊஞ்சலாடும். வயதான போது அதிர்ஷ்டம் ஏற்படும். எழுத்தில் ஈடுபடலாம். கற்பனை சார்ந்த தொழிலில் வெற்றி பெறலாம். சாதாரணமான குடும்பத்தில் பிறந்திருந்தாலும் கலைத்துறையில் எளிதில் புகழ் பெறலாம்.

### குடும்பம்

வெற்றி பெறும் காதலைச் செய்வர். மனமொத்த இல்லறத்தில் நுழைவர். இதேபோல் செய்தொழிலிலும் வெற்றி பெறுவர். வருமானம் கிட்டும். அதிஷ்டகரமாகச் செல்வம் சேரும். காதல் இன்றியே மணம் புரிந்து கொண்டாலும் மனைவியை மிகவும் நேசிப்பர். குடும்பக் கடமையை மீற மாட்டார். வரும் மனைவி நன்றாகக் குடும்பத்தை நடத்துவாள். குழந்தை குட்டிகளைப் பார்த்துக்கொள்வாள். முதலில் சாதாரணமாக குடும்பம் நடந்தாலும் பிறகு மேன்மைபெற்றிடும்.

மனைவியிடம் முழுக்கக் குடும்பப் பொறுப்பை விட்டுவிட்டு தம் தொழிலைக் கவனிப்பார். மனைவியைத் தொழிலிலும் யோசனை கேட்பார். பெரிதும் சார்ந்தே நடப்பர். இவர் வாழ்வில் பிற பெண்களும் தொடர்பு கொள்வார். இவர்களின் பிற்கால வாழ்க்கை கற்பனை ரசிகத் தன்மையுடன் மகிழ்ச்சிகரமாக செல்லும். இசை, கேளிக்கை என அதிகம் வெளியில் சுற்றுவதை விரும்புவர்.

### தொழில்

எழுத்து, இசை, ஆன்மிகம், அரசியல், கவிதை, கட்டுரை, நாடகம் என விரும்பி ஈடுபடுவர். ஆனாலும் ஆசிரியராக, கணக்காரராக, சாதாரணமாகவே ஒருமாதச் சம்பள வேலையாக அரசாங்க அல்லது தனியார் நிறுவன அலுவலகங்களில் தொடங்கும். திறமையால் வாழ்வு திருப்பம் பெற்று வேறு அசாதாரண நிலையை தொழிலில் செய்வர்.

சினிமாவில் நடிப்பு, இயக்கம், கதை வசனம், பாடல் என்றோ வேறு துறைகளிலோ வாய்ப்பு பெற்று முன்னேறுவர். அரசியலில் விளங்குவர். வக்கீலாக, இரசாயனப் பேராசிரியராக, வீட்டு அலங்காரக் கலைஞராக, அழகுப் பொருள், மருந்து, நீர்வடிவப் பொருள் விற்பவராக இருக்கலாம். குரு திறமையையும் சந்திரன் அதிஷ்டத்தையும் இவர்களுக்கு நிர்ணயிப்பார். பேச்சாளராக, பிரசாரகாரராக, மக்கள் பிரதிநிதிகளாகவும் நல்ல பெயரும், புகழும் உண்டாகி உயருவர்.


### நோய்

கண் கோளாறு, உயர் இரத்த அழுத்தம், அசிடிடி, அல்சர் போர்ன்ற பித்த நோய்கள், தோல் நோய்கள் (படை, சொறி, சிரங்கு உட்பட்ட வெள்ளைப்புள்ளி, தேமல், படர்தாமரை முதலியவை) எக்ஸிமா வரும். மனச் சோர்வு, குழப்பம், தவிப்பு ஏற்படும். இவர்கள் தொண்டையில் கோளாறு எப்போதும் இருக்கும். கபத்தொல்லையும் படுத்தும். வயிறு சரியாக இருக்காது.

(தொடரும்)

-கணித்தவர்-ஸ்வாமி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் மணவாளக் கோல நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது....
(படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)




சாவகச்சேரி கச்சாய் டினோபா முன்பள்ளி மற்றும் கலைமகள் முன்பள்ளி இணைந்து நடத்திய விளையாட்டு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன விற்பனை ஆலோசகர் ந.நர்த்தனன் மாணவர் ஒருவருக்கு தன்னால் வைப்பிலிடப்பட்ட வங்கி புத்தகம் ஒன்றை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களுடன் ஆசிரியர்கள், சிறார்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

நிழல்கள்





பண்டத்தரிப்பு புனித பற்றிமா ஆலய வருடாந்த திருவிழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது திருப்புலி ஒப்புக் கொடுக்கப்படுவதையும் புனித பற்றிமா அன்னையில் திருச்சுரூப பவனி இடம்பெறுவதையும் கலந்து கொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)





யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் பிரதம விருந்தினர் தம்பிராசா குருகுலராஜா மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதனையும் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேங்காய் ஒன்றின் விலையைக்கூட குறைக்க அரசால் முடியவில்லை

## ரவி எம்.பி தெரிவிப்பு

**இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தால் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மெய்யான நிலை வெளிப்பட்டிருக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**

பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்படி கருத்தினை தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், அரசாங்கத்திற்கு எதிராக அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றில் நம்பிக்கையில்லா தீர்மானமொன்றை சமர்ப்பித்திருந்தது. இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் 94 மேலதிக வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்றம் என்பது மக்களின் கவலைகள், துன்பங்கள், துயரங்களை வெளிப்படுத்தும் இடமாகவே கருதுகின்றோம். அதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திறகு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானமொன்றை சமர்ப்பித்தது.

போர் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் தேங்காயின் விலையைக் கூட குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படும் விலையை விடவும் 40 வீதம் குறைவாக எரிபொருளை விற்பனை செய்ய முடியும். அதன் மூலம் மக்களுக்கு நன்மைகள் ஏற்படும். அவ்வாறு செய்ய முடியாத அரசாங்கமொன்று இந்த நாட்டுக்கு தேவையில்லை.

நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனையை ஒத்தி வைக்குமாறு



ஆளும் கட்சி அமைச்சர்கள் கோரியிருந்தார்கள். இதன்மூலம் நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு அரசாங்கம் அஞ்சியது என்பது புலனாகின்றது.

சிலர்போதைப்பொருள், எதனோல் போன்ற பொருட்களை இறக்குமதி செய்வதனால் நம்பிக்கையில்லா தீர்மானம் சமர்ப்பிக்கப்படுவதனை ஆளும் கட்சியினர் விரும்பவில்லை.

ஆளும் கட்சியின் 157 உறுப்பினர்கள் போதைப் பொருள் பிரச்சினைக்கு தீர்வு காண தேவையில்லை என்ற அர்த்தத்தில் வாக்களித்துள்ளனர்.

இதன்மூலம் நாட்டில் போதைப் பொருளை இறக்குமதி செய்ய வேண்டும்என்றா அரசாங்கம் கருதுகின்றது?

இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தால் ஆளும் கட்சிக்கான ஆதரவினை பார்த்திருக்க முடியும் என்றார். (அ)



சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு, இடமாற்றம் பெற்றுச் செல்லும் இந்திய துணைத் தூதுவர் வெங்கடாசலம் மகாலிங்கத்தின் பிரிவுசார நிகழ்வை ஞானம்ஸ் ஹோட்டலில் அண்மையில் நடத்தியது. இந்நிகழ்வில் துணைத் தூதுவருக்கு பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, வைத்திய கலாநிதி வை.தியாகராசா, எஸ்.பரமநாதன் ஆகியோர் இணைந்து விருது வழங்குவதையும் அருகில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- நல்லூர் செய்தியாளர்)

# ஜனாதிபதி- அமைச்சர் விமல் விரைவில் விசேட சந்திப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர அமைச்சர் விமல் வீரவன்ச குழுவினருக்கும் இடையிலான விசேட சந்திப்பு நடைபெறவுள்ளது.

துன்முல்ல பிரதேசத்திலுள்ள அமைச்சர் விமல் வீரவன்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முசம்மில் குறிப்பிட்டார்.

விமல் வீரவன்ச கடந்த காலங்களாக அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகிறார். இது அவரின் நடிப்பு என்று கூறப்படுகின்றபோதும், இந்த விடயம் அரசாங்கத்தரப்பில் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த நிலையில் அரசாங்கத்துக்கும் அவருக்கும் இடையிலான பிரச்சினையை தீர்த்துக் கொள்ளும் வகையில் இந்த சந்திப்பு நடைபெறவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தேசிய சுதந்திர முன்னணியின் குழுவினருக்கும் ஜாதிக ஹெல உறுமய குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது (2)

# மஹிந்தவின் வருகைக்கு எதிர்ப்பு; தமிழக எம்.பிக்களும் புறக்கணிப்பு?

(சென்னை)

நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வை புறக்கணிக்க தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

மோடி பிரதமராக பதவியேற்கும் விழாவில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்பது உறுதி என்பதால் தமிழகத்தில் அ.தி.மு.கவின் 37 நாடளுமன்ற உறுப்பினர்கள், பா.ம.கவின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என 38 எம்.பிக்களும் அந்த விழாவை புறக்கணிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நரேந்திர மோடி நாளைய தினம் டில்லியில் பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

அந்த விழாவில் சார்க் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கலநது கொள்கிறார்.

ஆனால் இனப்படுகொலையாளன் மஹிந்த ராஜபக்ஷவை அழைக்கவே கூடாது என்று தமிழக அரசும் தமிழக அரசியல் கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன.

பாரதீய ஜனதாவின் கூட்டணிக் கட்சியான ம.தி.மு.க., பா.ம.க. ஆகியவையும் ராஜபக்ஷவை அழைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

தமிழகத்தில் பா.ஜ.க. சார்பில் வென்ற ஒரு எம்.பியான பொன். ராதாகிருஷ்ணன் மட்டும் மோடி பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ளவுள்ளதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (2)

# பொன்சேகாவின் உரிமைகள் குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகாவின் சிவில் உரிமைகள் தொடர்பில் சட்டமா அதி பரின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாக்காளர் இடாப்பில் சரத் பொன்சேகாவின் பெயரை உள்ளடக்குவதா என்பது குறித்து சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோவின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

குறிப்பாக அடுத்த ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் சரத் பொன்சேகாவின் பெயரை உள்ளடக்குவது குறித்து கவனம் செலுத்தப்படும்.

உறவினர் ஒருவரின் வீட்டு முகவரியின் கீழ் சரத் பொன்சேகா வாக்காளர் இடாப்பில் பதிந்துகொண டுள்ளார்.

சரத் பொன்சேகாவின் சிவில் உரிமைகள் இரத்து செய்யப்பட்டுள்ளனவா என்பது குறித்து ஆலோசனை பெற்றுக்கொண்டு அதன் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (2)

# நல்லைக் கந்தனுக்கு மணவாளக் கோல விழா இன்று

உலகெலாம் நிறைந்து விளங்குகின்றஎல்லாம்வல்ல பரம்பொருளான முருகப் பெருமான் தம்மை வழிபடுகின்ற அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் இன்னல்களையும் இடுக்கண்களையும் நீக்குதற் பொருட்டு எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கும் தலம்தான் நல்லைக் கந்தன் ஆலயம். அந்த அருள் மிகு நல்லைக் கந்தனுக்கு இன்று மணவாளக் கோலவிழா.

பகல்1008சங்காபிஷேகம். இந்த அருள்மயமான அற்புத சங்காபிஷேகம் பார்க்கவென அடியார்கள் நான், நீ என்று முந்தியடித்துக் கொண்டு எங்கே எமக்கு முருகனின் தரிசனம் கிடைக்காது போய் விடுமோ? என்ற ஆதங்கத்துடன் ஓடி ஓடி நடத்தும் முருக வழிபாடு பக்தி பூர்வமானது.

நல்லூரே இன்று விழாக் கோலம் பூண்டு காணப்படும். நல்லைக் கந்தன் கோயில் கோபுர வாசல் மாவிலை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டும் இரண்டு பக்கங்களிலும் மங்களகரமாக மஞ்சள் நிற வாழைப்பழக் குலையுடனே வாழை மரங்கள் கட்டப்பட்டும் அழகூட்டப்பட்டிருக்கும்.

எங்கு திரும்பினாலும் பக்தர் குழாம் முருகா முருகா என்று உச்சரித்த வண்ணமும் பக்தர்கள் முருகன் புகழ்பாடிய வண்ணமும் கோயிலை வலம் வந்து வணங்குவர்.

அழகே ஒருருவெடுத்தாற் போன்று ஆறுமுகப் பெருமான் தமது இச்சாசக்தியான வள்ளியம்மை நாச்சியாருடனும் கிரியா சக்தியான தெய்வானையம்மை நாச்சியாருடனும் காட்சி தருவார். ஆலய உள்வீதியில் வசந்த மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்குத் திருக்கல்யாணம் நடைபெறும்.

இன்றைய மணவாளக் கோல நன்னாளில் ஒரு தனி விசேடம் என்னவெனில், ஆறுமுகப் பெருமானுக்கு நடைபெறுகின்ற திருக்கல்யாணம் ஓர் அழகே உருவான அற்புதத் திருக்காட்சியாகும்.

திருமணமாகாத கன்னியர்களும் காளையர்களும் இந்த திருக்கல்யாண நிகழ்வைப் பார்த்தால் அவர்களுக்கும் விரைவில் விவாகம் நடக்கும் என்று ஓர் ஐதீகம் நிலவுகின்றது. அதன் காரணமாக இன்று நல்லைக் கந்தன் ஆலயத்தை இலை[illegible] றுகையிடுவர்.

சண்முகப் பெருமான் அங்கம் முழுக்கத் தங்கம் ஜொலிக்க மலர்மாலைகளும் நகைகளும் சூட்டப்பெற்று அலங்காரரூபனாகக்காட்சிதருவார்.


நல்லூர் கந்தப் பெருமானுக்கு அலங்காரப் பிரியன் என்று ஒரு பெயரும் உண்டு. அதனால் இன்று கல்யாணக் காட்சிஒருவியன்மிகுஅழகுமிக்க அருள்திருக்காட்சியாக இன்று மிளிர்வதைக் காண முடியும்.

முன்னே மங்கள இசை முழங்க அடியார்கள் பக்தி மயமாக சண்முகப் பெருமானைச் சூழ்ந்து வர கர்ப்பூர ஜோதியிலே கந்தனின் ஒளிமயமான தத்ரூபக் காட்சி காண்பதற்கு நமக்குள்ள இரு கண்கள் போதாது. [illegible] காண்பதற்கு நான்காயிரம் கண் படைத்திலனே அந்த நான் முகனே என்று கவலைப்பட்டு ஆதங்கப் படுகின்றார் அருணகிரிநாதர்.

இன்றைய கல்யாணத் திருக்கோலம் அழகுத் திருக்கோலமாகக் கண்டு மனம் மகிழ அடியார்கள் பூர்வ ஜென்மப் புண்ணியம் செய்திருத்தல் வேண்டும்.

முருகன் என்றால் அழகன். அழகன் என்றால் முருகன். அதுவும் நல்லூர் முருகன் என்றால் சொல்லத் தேவையில்லை. அலங்காரம் நிறைந்த அழகுத் திருக்கோலத்தின் அழகை வர்ணிக்க முடியாது, வார்த்தைகளே இல்லை.

ஆகவே, இன்றைய மணவாளக் கோலங்கண்டு மனம் மகிழ்ந்து கர்ப்பூரத் திருவிழாவிலே



கலந்து கொண்டு கந்தனின் அருள்பெற அடியார்களுக்கு அழைப்புவிடுக்கப்படுகின்றது. வருவீர்கள் தானே!

நல்லைக் கந்தனை வழிபடத் தொல்லைகள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோலவிலகிவிடும். வாருங்கள் வந்துபாருங்கள் அருள்பெற்று முருகனின் அழகைஅள்ளிப் பருகுங்கள்.

ஓம் முருகா!

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியுடன் மோதுமா இலங்கை?



நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சி அரசாங்கம் புதுடெல்லியில் அமைவது தமக்குச் சாதகமானது போன்று கருத்து வெளியிடத் தொடங்கியுள்ளது இலங்கை அரசாங்கம். இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணத் தொடங்கியதை அடுத்து வெளியான ஆரம்ப நிலவரங்களே காங்கிரஸ் கட்சி படுதோல்வி கண்டுவிடும் என்பதையும் பா.ஜ.க.தான் ஆட்சியமைக்கப் போகிறது என்பதையும் தெளிவாகப் புலப்படுத்தின.

உடனடியாகவே பா.ஜ.கட்சியின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்த நரேந்திரமோடிக்கு தொலைபேசியில் வாழ்த்துத் தெரிவிப்பதில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முந்திக்கொண்டிருந்தார். முக்கியமான உலகத் தலைவர்கள் அனைவருமே தேர்தல் முடிபுகள் முறைப்படியாக அறிவிக்கப்படுவதற்கு முன்னரே வாழ்த்து தெரிவிப்பதற்கு முண்டியடித்தனர்.

அவர்கள் எல்லோரையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முந்திக் கொண்டுவிட்டார் என்பதில் இலங்கை அரசாங்கம் திருப்திகொள்கிறது. அதுமட்டுமல்லாமல் புதுடெல்லியில் ஏற்பட்டுள்ள இந்த ஆட்சி மாற்றத்தை கொழும்பு விரும்புவது போன்ற தோற்றபாட்டையும் உருவாக்க அரசாங்கம் முனைகிறது என்பதில் சந்தேகமில்லை.

நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்த தகவல் மின்னல் வேகத்தில் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டது. டுவிட்டரில் அதுபற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார். நரேந்திர மோடி அதிகாரபூர்வமான முறையில் பிரதமராகத் தெரிவு செய்யப்பட முன்னரே அவரை கொழும்புக்கு வருமாறும் அழைப்பு விடுவித்திருந்தார் இலங்கை ஜனாதிபதி.

அதற்கு டுவிட்டரில் பதில் அளித்திருந்த நரேந்திர மோடி இலங்கையுடன் வலுவான உறவுகளை எதிர்பார்த்திருப்பதாக குறிப்பிட்டிருந்தார். இவையெல்லாம் புதுடெல்லியில் பா.ஜ.க. அரசாங்கம் அமைய வேண்டும் என்று மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது போன்றும் நரேந்திர மோடியின் வெற்றியை கொழும்பு சாதகமானதாக கருதுவது போன்றும் தோற்றப்பாட்டை உருவாக்கின. அதுமட்டுமல்லாது, அமைச்சரவைப் பேச்சாளரான ஹெகலிய ரம்புக்வெலவும் இந்தியாவில் பலமான ஆட்சி ஒன்று அமைவதை அரசாங்கம் விரும்புவதாகத் தெரிவித்திருந்தார்.

இந்தியத் தேர்தல் முடிபுகளையும் நரேந்திரமோடியின் வெற்றியையும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது போன்று காட்டிக்கொள்ள முயன்றது அரசாங்கம். ஆனால், உண்மை அதற்கு எதிர்மாறானது. புதுடெல்லியில் காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கம் வீழ்ச்சி காண்பதை கொழும்பு விரும்பவில்லை என்பதே உண்மை. ஏனென்றால், மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு காங்கிரஸ் அரசாங்கம் பெரியளவில் உதவியதே தவிர, உபத்திரவங்களை கொடுத்ததில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது எந்த எதிர்ப்பையும் காட்டாமல், புதுடெல்லி பச்சைக்கொடி காண்பித்திருந்தது. அதன் பின்னரும்கூட, இலங்கை அரசாங்கத்துக்கு புதுடெல்லி பெரியளவில் எந்தத் தலைவலியையும் கொடுக்கவில்லை. இரண்டு தடவைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்திருந்த போதும்கூட, அது காங்கிரஸ் அரசாங்கத்தின் சுதந்திரமான முடிபு அல்ல என்பதை கொழும்பு நன்றாகவே உணர்ந்திருந்தது.

தமிழ்நாட்டின் அழுத்தங்களால்தான், தன் மீது அழுத்தங்களைக் கொடுக்க புதுடெல்லி முனைவதாக கொழும்பு உணர்ந்திருந்ததால், இரு தரப்பு உறவுகளில் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படவில்லை. அதற்காக போருக்குப் பின்னர் இந்திய- இலங்கை இராஜதந்திர உறவுகள் எந்தச் சிக்கலுமின்றி திருப்தியாக இருந்தது என்று அர்த்தமில்லை. அண்மைக்காலத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் காப்பாற்றத் தவறிவிட்டது என்ற வருத்தம், மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கத்திடமிருந்து வந்தது.

அதேவேளை, 13 ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தில் இந்தியா கொடுக்கும் மென் அழுத்தங்கள் மற்றும் ஜெனிவா தீர்மானங்களில் இந்தியாவின் அணுகுமுறைகள் குறித்தும் இலங்கைக்கும் வருத்தம் இருந்தது. இதனால், இருதரப்பு உறவுகளில் ஒரு இடைவெளி தோன்றியதை மறுக்க முடியாது. ஆனால், அதற்காக இருதரப்பு உறவுகளில் முறிவு ஏற்பட்டுவிட்டதாகவும் அர்த்தம் கொள்ள முடியாது.

தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் கருத்து வெளியிட்ட மன்மோகன் சிங், அரசாங்கத்தில் இறுதியாக வெளிவிவகார அமைச்சராக இருந்த சல்மான் குர்ஷித் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில், இந்திய- இலங்கை உறவுகள் நன்றாகவே இருந்ததாக குறிப்பிட்டிருந்தார். போருக்குப் பிந்திய காலகட்டங்களில் பல விடயங்களில் கருத்து வேறுபாடுகள் மற்றும் மனக்கசப்புகள் இருந்தாலும் அதை இரு தரப்புக்குமே ஒரு போதும் வெளிக்காட்டிக் கொண்டதில்லை. ஒருவரை ஒருவர் விமர்சிக்கவோ, விட்டுக்கொடுக்கவோ இல்லை. இது ஒன்றே இந்திய- இலங்கை உறவுகளில் முறிவுகள் இல்லை, வெறும் இடைவெளிதான் உள்ளது என்பதை உறுதிப்படுத்தப் போதுமானது.

மன்மோகன்சிங் அரசாங்கத்தின் பத்தாண்டு ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு, இந்தியா பல்வேறு விடயங்களில் பக்கபலமாக நின்று உதவியதுடன் பெரியளவில் முரண்படாமலும், நடந்துகொண்டிருந்தது. ஒரேயொரு விடயத்தில்தான் இலங்கைக்கு சற்று கலக்கம் இருந்தது. புதுடெல்லியின் முடிபுகளின் மீது செல்வாக்குச் செலுத்தத்தக்க நிலையில், தமிழ்நாடு இருப்பது ஒன்றுதான், இலங்கை அரசாங்கத்துக்கு கலக்கத்தையும் கடுப்பையும் ஏற்படுத்துவதாக இருந்தது.

தமிழ்நாட்டின் ஆதிக்கம் புதுடெல்லி மீது இருப்பது தவிர்ந்த மற்றெல்லா வகைகளிலும், காங்கிரஸ் அரசாங்கத்தின் ஆட்சியும் அணுகுமுறைகளும் கொழும்புக்கு உவப்பானதாகவே இருந்தன. இப்படிப்பட்ட நிலையில், பா.ஜ.க. ஆட்சியமைப்பதையோ, நரேந்திரமோடி பதவிக்கு வருவதையோ, இலங்கை அரசாங்கம் ஆவலுடன் எதிர்பார்த்தது என்றால், அது அப்பட்டமான பொய்யே.

காங்கிரஸ் அரசாங்கத்துக்கு தேர்தலில் எந்தப் பாதிப்பும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் இலங்கை அரசாங்கம் எந்தளவுக்கு அக்கறை கொண்டிருந்தது என்பதற்கு ஒரு சிறிய உதாரணமே போதும். இந்தியத் தேர்தல்கள் இறுதிக்கட்டத்தை எட்டியிருந்த நிலையில், இம்மாத தொடக்கத்தில் இலங்கை நாடாளுமன்றத்தில் ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள.

கடந்த வருடம் இந்திய நாடாளுமன்றத்தில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி வெளியிட்ட ஒரு அறிக்கையில் இலங்கையிடமிருந்தும், இந்தியா ஆயுத தளபாடங்களை வாங்கியுள்ளதாக குறிப்பிட்டிருந்தார். இந்தியாவுக்கு என்ன ஆயுதங்கள் விற்கப்பட்டன. எந்த அடிப்படையில் அவை விற்கப்பட்டன. அதன்மூலம் அடைந்த ஆதாயங்கள் என்ன என்ற கேள்விக்கொத்து ஒன்றை பிரதமர் டி.எம். ஜெயரட்ணவிடம் தலதா அத்துகோரள கேட்டிருந்தார்.

அப்போது பிரதமர் டி.எம்.ஜெயரட்ண, வியட்நாம் சென்றிருந்தார். அதனால், அரசதரப்பு கொரடாவான அமைச்சர் தினேஸ் குணவர்த்தன்வே அதற்குப் பதிலளித்திருந்தார். இந்தக் கேள்விகளுக்குத் தற்போது பதிலளிக்க முடியாது என்றும் இது இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதால், இரண்டு மாதங்கள் கழித்து பதிலளிப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

தாம் அளிக்கும் பதில் இந்திய அரசாங்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தி விடக்கூடாது என்ற அக்கறை இலங்கை அரசாங்கத்திடம் இருந்ததையே இது வெளிப்படுத்தியது. இப்படிப்பட்ட சூழலில் காங்கிரஸ் அரசாங்கம் வீழ்ந்து, பா.ஜ.க. அரசாங்கம் பதவிக்கு வரவேண்டும் என்று கொழும்பு ஆவல் கொண்டிருந்தது என்று கூறினால் அதை யாரும் நம்பப் போவதில்லை. ஆனால், அப்படி நம்ப வைக்கவே அரசாங்கம் முனைவதாகத் தெரிகிறது.

புதுடெல்லியில் நரேந்திரமோடி தலைமையிலான பலமான அரசாங்கம் அமைவதை இலங்கை விரும்புவதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார். இந்த விடயத்தில் இந்தியத் தேர்தல் முடிபு இலங்கை அரசாங்கத்துக்கு அளித்துள்ள ஒரே ஆறுதல், புதுடெல்லி மீது செல்வாக்குச் செலுத்தும் திறனை தமிழ்நாடு இழந்து போயிருப்பது மட்டும்தான்.

மன்மோகன் சிங்கின் பத்தாண்டு கால ஆட்சியிலும், அதற்கு முந்திய பா.ஜ.க. ஆட்சியிலும் புதுடெல்லியின் முடிபுகள் மீது தமிழ்நாடு ஆதிக்கம் செலுத்தும் நிலையில் இருந்து வந்தது. அதாவது தமிழ்நாட்டைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக்கழகம் அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஏதாவதொரு மாநிலக் கட்சியின் தயவுடன்தான் முடிபுகளை எடுக்கவேண்டிய கட்டாயம் புதுடெல்லிக்கு இருந்து வந்தது.

குறிப்பாக, 2012, 2013 ஆம் ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை இந்தியா ஆதரித்திருந்தது. இது இந்தியா இதுவரை கடைப்பிடித்துவரும் வெளிவிவகாரக் கொள்கைக்கு முரணான முடிவாகவே இருந்தது. ஆனாலும், தமிழ்நாட்டின் நெருக்குதல் காரணமாக அதற்கு அடிபணிந்து புதுடெல்லி முடிவெடுக்க நேர்ந்தது. ஆனால், 2014 ஆம் ஆண்டு தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கவில்லை. அதற்குக் காரணம், காங்கிரஸ் அரசின் மீது தமிழ்நாடு கொண்டிருந்த கடிவாளம் கழன்று போனதுதான்.

இந்தத் தேர்தலில், எந்தவொரு மாநிலக் கட்சியினது தயவையும் நம்பியிருக்கவேண்டிய தேவையை பா.ஜ.கட்சிக்கு இல்லாமல் செய்துவிட்டது. தனிப்பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியைப் பிடித்துள்ள பா.ஜ.கட்சியின் மீது தமிழ்நாடு அழுத்தங்களைக்கொடுக்க முடியாது என்பது ஒன்றுதான், இந்தியத் தேர்தல் முடிபு கொழும்புக்குக் கொடுத்துள்ள ஆறுதலான விடயம். அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கடந்த வாரம் செய்தியாளர்களை சந்தித்தபோதுகூட, இதனை வெளிப்படையாக கூறியிருந்தார்.

தமிழ்நாட்டில் முதல்வர் ஜெயலலிதாவின் தயவின்றி புதுடெல்லியில் ஆட்சி அமைவது மகிழ்ச்சியான விடயம் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இந்த விடயத்தில் பலமான அரசாங்கம் ஒன்று புதுடெல்லியில் பதவிக்கு வருவது வேண்டுமானால், இலங்கைக்கு மகிழ்ச்சி தரும் விடயமாக இருக்கலாம். ஆனால், வலுவான மத்திய அரசாங்கம் ஒன்று புதுடெல்லியில் ஆட்சியில் அமர்வது ஒருபோதும் கொழும்புக்குச் சாதகமானதாக இருக்க முடியாது.

ஏனென்றால், மன்மோகன் சிங் அரசாங்கம் கொள்கை ரீதியாக முடிவெடுக்கத் தயக்கம் காட்டும் ஒன்றாக இருந்ததால்தான், வெளிவிவகாரக் கொள்கை விடயங்களில் நெகிழ்ச்சிப் போக்குடன் நடந்துகொள்ள வேண்டியிருந்தது. உறுதியான அரசாங்கமாக இது இருந்திருந்தால், பல விடயங்களில் இலங்கை அரசாங்கத்தினால் இந்தியாவினது சொல்லைத் தட்டிக்கழிக்க முடியாமற்போயிருக்கும்.

குறிப்பாக, 13 ஆவது திருத்தச்சட்ட விவகாரத்தில் இந்தியாவின் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் இன்றுவரை, நிறைவேற்றவில்லை. இதுபோன்று இந்தியாவின் பல கோரிக்கைகளை கொழும்பு அலட்சியம் செய்து வந்துள்ளது. ஆனால், புதுடெல்லியில் வலுவான ஒரு அரசாங்கம் அமைந்தால், இத்தகைய உதாசீனப்படுத்தல்களுக்கு ஒருபோதும் இடமளிக்காது என்பது கொழும்புக்கு நன்றாகவே தெரியும்.

இருந்தாலும், நரேந்திரமோடி அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ள இலங்கை முந்திக்கொள்வது அதனைத் தனது கைக்குள் போட்டுக்கொள்வதற்கேயாகும். ஏனென்றால், காங்கிரஸ் அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கையை நரேந்திரமோடியும் பா.ஜ.கட்சியும் கடுமையாக விமர்சித்து வந்த நிலையில் இந்தியாவின் நிலைப்பாடுகள் மாற்றமடைவதற்கான சாத்தியங்கள் உள்ளன. குறிப்பாக பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளுடன் இலங்கை கொண்டுள்ள நெருக்கமான உறவை, நரேந்திர மோடியின் அரசாங்கம் தவறான கண்ணோட்டத்துடன் அணுகிவிடக்கூடாது என்று கொழும்பு நிச்சயம் கவனம் செலுத்தும். இந்த மூன்று நாடுகளினதும் நட்பை விட்டுக்கொடுக்கும் நிலையில் கொழும்பு இல்லை.

அதேவேளை, இந்தியாவின் இரண்டு பிரதான போட்டியாளர்களான பாகிஸ்தான், சீனாவுடன் இலங்கை கொண்டிருக்கும் உறவை இந்திய அரசு சகித்துக்கொள்ளவும் வேண்டும். அதற்கான இராஜதந்திர முன்னகர்த்தலைத்தான் கொழும்பு இப்போது செய்து வருகிறது. நரேந்திரமோடியுடன் ஏற்படுத்திக்கொள்ளத் துடிக்கும் உறவின் மூலம் தனக்கான ஒரு கவனத்தை உருவாக்கிக்கொள்ள கொழும்பு முனைகிறது.

அதற்கு பா.ஜ.கட்சியில் உள்ள சுஸ்மா சுவராஜ் மற்றும் சுப்ரமணியம் சுவாமி ஆகியோர்தான், நம்பிக்கை நட்சத்திரங்களாக இலங்கை அரசுக்கு உள்ளனர். ஆனால், நரேந்திர மோடி அரசாங்கம் பதவிக்கு வருவது இலங்கைக்கு அவ்வளவு நல்ல சகுனமாக இருப்பதற்கு வாய்ப்பில்லை என்பதே பொதுவான கருத்தாக உள்ளது. இருந்தாலும் புதுடெல்லியை வசப்படுத்துவதற்கு கொழும்பு உச்சக்கட்ட முயற்சிகளை எடுக்கிறது. இன்னும் எடுக்கும். ஏனென்றால், இந்திய மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் பதவிக்கு வந்துள்ள ஒரு அரசாங்கத்தைப் பகைத்துக்கொள்வது உலகளவில் இலங்கைக்கு இன்னும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை கொழும்பு அறியாதிருக்காது. எனவே, முடிந்தவரை புதுடெல்லிக்கு நேசக்கரம் நீட்டவே முயற்சிக்கும். நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பெரும்பாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனைப் புதிய இந்திய அரசாங்கத்துடன் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் நினைக்கிறது. இது எந்தளவுக்கு வெற்றி பெறும் என்பது போகப்போகத்தான் தெரிய வரும். ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயமானது. 13 ஆவது திருத்தச்சட்ட நடைமுறைப் படுத்தல் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களிலும் இதுவரை மன்மோகன் சிங் அரசாங்கத்தை ஏமாற்றியது போன்று நரேந்திரமோடி அரசாங்கத்தையும் சமாளித்துவிடலாம் என்று மட்டும் தப்புக் கணக்குப் போடப்பட்டால், அது இலங்கைக்குப் பல சவால்களை ஏற்படுத்தும். -கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அழிப்புக்கள், தடைகள் மூலம் நினைவுகளை அழிக்க முடியாது

## விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

நினைவு நடுகற்களை இடித்தழிப்பதன் மூலமோ, அல்லது நினைவு தினங்களைக் கடைப்பிடிப்பதற்குத் தடை விதிப்பதன் மூலமோ மக்கள் மனங்களில் இருக்கும் நினைவுகளை ஒருபோதும் அழித்துவிட முடியாது என்று வட மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கர நேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் ஒன்பதாவது அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போது முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களுக் கான அஞ்சலி நிகழ்ச்சி இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு அஞ்சலி உரை யாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் எமது உறவுகள் கூட்டாகப் படுகொலை செய் யப்பட்டதை நினைவுகூரும் நாள். இந்த நாள் என்பது ஈழத்தமிழ் மக்களோ உலகத் தமிழர் களோ மாத்திரம் அல்லாமல் பூமிப்பந்தெங் கும் பரந்து வாழ்கின்ற மனித நேயமுள்ள அனைவரும் நினைவில் வைத்திருக்கும் நாள்.

ஆனால் கொல்லப்பட்ட எமது உறவு களை நினைவுகூரும் இந்தத் தினத்தைக் கடைப்பிடிப்பதற்கு இலங்கை அரசு தடை விதித்திருக்கிறது.

மே 18 விடுதலைப்புலிகளின் தினம் அல்ல. மரணித்த விடுதலைப்புலிகளைப் பிரத்தியேகமாக நினைவுகூருகின்ற நாள் மாவீரர் தினம் எனப்படும் நவம்பர் 27 ஆம் திகதி தான்.

மே 18 இக்காலப்பகுதியில் முள்ளி வாய்க் காலில் கொல்லப்பட்ட அனைத்து மக்களுக் குமான பொது நினைவு நாள்.

நினைவு நாட்களில் அஞ்சலி நிகழ்ச்சி களை நடத்துவதும் பிதிர்க்கடன்களை நிறை வேற்றுவதும் எமது பண்பாட்டின் கூறுகளில் ஒன்று.

இவற்றுக்குத் தடைவிதிப்பதன் மூலம் அரசு எமது பண்பாட்டு உரிமைகளையும் பறிக்க ஆரம்பித்திருக்கிறது.

விடுதலைப்புலிகள் இராணுவத்தினரிட மிருந்து நிலங்களை மீட்டெடுத்தபோது, அங்கு காணப்பட்ட இராணுவத்தினரின் நினைவுக் கற்களை அழிக்கக்கூடாது என்று தலைவர் பிரபாகரன் உத்தரவிட்டிருந்ததாகச் சொல்லப் படுகிறது.

ஆனால் யுத்தம் முடிவுக்கு வந்தவுடன் மாவீரர் துயிலும் இல்லங்களில் இருந்த நினைவு நடுகற்களையெல்லாம் இராணுவம் இடித்து அழித்தது. அகிம்சை ரீதியாகப் போரா டிய திலீபனின் நினைவுத் தூபியைக் கூட விட்டு வைக்கவில்லை.

இப்போது இறந்த மக்களை நினைவு கூருகின்ற நிகழ்ச்சிகளைக் கூடப் புலிகளின் நினைவு என்று சொல்லித் தடைவிதித்தி ருக்கிறது.

ஆனால் நினைவு நடுகற்களை இடித் தழிப்பதன் மூலமோ, அல்லது நினைவு தினங் களைக் கடைப்பிடிப்பதற்குத் தடைவிதிப்பதன் மூலமோ மக்கள் மனங்களில் இருக்கும் நினை வுகளை ஒருபோதும் அழித்துவிட முடியாது என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக் கான எமது மக்கள் கொத்துக் கொத்தாக் கொன்று புதைக்கப்பட்டார்கள். அங்கு புதைக் கப்பட்டது வெறும் சடலங்கள் அல்ல நம்பிக் கைகளின் விதைகள் .

எதிர்காலத்தில் சுதந்திரமாகவும் சுபீட்சமாக வும் வாழ்வோம் என்ற அந்த நம்பிக்கை விதைகள் ஒருபோதும் வீண்போகாது.

ஆனால் முள்ளிவாய்க்காலில் அரசு விதைத் தது பேரினவாத வினை. அந்த வினைக்கான அறுவடையை அரசு எதிர்கொள்ளும் காலம் வெகுதொலைவில் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# ஆன்மீக சொற்பொழிவு

உடுவில் பிரதேச,இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப் படும் வாராந்த சொற்பொழிவு நிகழ்வு எதிர் வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு கந்தரோடைஅருளானந்தப் பிள் ளையார் ஆலயத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. தர்ப் பணா சுதர்சன் தலைமையில் நடைபெறும்

இந் நிகழ்விற்கு ஆசியுரையை மானிப் பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதம சிவாச் சாரியார் சிவஸ்ரீ.ப.ஜெயக்குமாரக் குருக்கள் வழங்குவார்.

**கண்டேன் அவர் திருப்பாதம்** எனும் தலைப் பில் சைவப்புலவர் கா.கமலநாதன் சிறப்புச் சொற்பொழிவொன்றையாற்றுவார்.

இந் நிகழ்வின் போது அருளானந்தப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாண வர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் மற்றும் அருளானந்தப் பிள்ளை யார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (2)

# திருக்கேதீஸ்வரத்தில் மஹோற்சவம்

(மன்னார்)

திருக்கேதீஸ்வரநாதர் திருக்கோயில் மஹோற்வசம் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்து டன் ஆரம்ப மாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திரு விழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திரு விழாவும் நடைபெறவுள்ளது. (2)

# இணைய ஊடகங்கள் கண்காணிக்கப்படும்

## ஜனாதிபதி தெரிவித்தாராம்

(கொழும்பு)

இலங்கையில் சமூக வலைத் தளங்கள் உள்ளிட்ட இணைய ஊடகங்கள் கண் காணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

நாட்டில் அரசியல் குழப்ப நிலைமை களை ஏற்படுத்த முயற்சிக்கும் சமூக மற்றும் இணைய ஊடகங்கள் தொடர்பில் கண் காணிக்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளதாக இந்திய ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவிற்கு அண்மையில் விஜயம் செய்திருந்த போது சீன ஜனாதிபதி ஜின் பின்கிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சைபர் குற்றச் செயல்களினால் உலகின் பல நாடுகளில் குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

முன்னெச்சரிக்கை ஏற்பாடாக இவ்வாறு குற்றச் செயல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சில நாடுகளில் உள்நாட்டு குழப்பங்களை ஏற்படுத்த சில சமூக வலைத் தளங்கள் மற்றும் இணைய ஊடகங்கள் பயன்படுத் தப்பட்டுள்ளன.

சில தரப்பினர் இளைஞர், யுவதிகளை பகடை காய்களாக பயன்படுத்தி வருகின் றனர்.

சமூக வலைத்தளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதனை தடுக்க சீனாவின் ஒத்து ழைப்பை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள் ளார். (2)

# தேர்தலில் கட்சியின் பலத்தை நிரூபிப்பேன்

## சரத் பொன்சேகா சூளுரை

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களின் பின்னர், நாட்டின் மிகவும் பலமான கட்சி எமது ஜன நாயகக் கட்சி தான் என்பதை நிரூபித்துக் காட்டுவேன் என முன்னாள் இராணுவ தள பதியும் ஜ.கவின் தலைவருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பிங்கிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

எதிர்வரும் தேர்தல்களுக்கான பிரசார நடவடிக்கைகளை எதிர்வரும் நாட்களில் ஆரம்பிக்கவுள்ளோம்.

அடுத்த தேர்தலின் போது, அரசாங் கத்தில் 75 ஆயிரம் வாக்குகளைப் பறிப் போம். இந்த வாக்குகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கானவை.

இந்த நிலைமை நீடித்து, ஒரு வருடத்தின் பின்னர் நடைபெறும் தேர்தலின் போது 5 அரசாங்கத்துக்குச் சேர வேண்டிய 5 இலட் சம் வாக்குகளையும் நாமே பெற்றுக்கொள் வோம்.

இந்த நிலைமை ஏற்பட்ட பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் திரும்ப வும் எழவே முடியாது போகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றவர் பண்டார நாயக்க.

ஆனால், அதே கட்சியை அழித்தவர் ராஜபக்ஷ. இது குறித்து நாம் கவலையடை கின்றோம் என்றார். (2)

# வாரம் ஒரு தகவல்

## முதலும் முடிவும்

“சேர் உங்களிடம் ஒரு யோசனை கேட்க வேண்டும்.”

“என்னிடம் யோசனை கேட்க என்ன காரணம் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?”

“உங்களுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகிவிட்டது அதனால்தான்!”

“சரி, கேளுங்க”

நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமா, வேண்டாமா சேர்?”

“எப்படி இருந்தாலும் கல்யாணம் செய்துகொள்! நல்ல மனைவி வாய்த்தால் சந்தோசமாக இருப்பாய்! மோசமான மனைவி கிடைத்தால் நீ ஞானியாவாய்!”

“அப்படியா சேர்?”

“ஆமாம். இது நான் சொல்லவில்லை. சோக்கிரட்டீஸ் தான் இப்படி சொல்லியிருக்கிறார்.”

“நான் ஞானியாக வேண்டும் என்று ஆசைப்படவில்லை சேர்?”

“அப்படியானால் மனைவியை நேசிக்கக் கற்றுக் கொள்”

“அது எப்படி”

“ஒருவனுக்குத் தன் மனைவியின் பழக்கவழக்கங்களில் ஏதேனும் ஒன்று பிடிக்கவில்லையெனில் அதற்காக அவளை அவன் வெறுத்த லாகாது. அவற்றுள் அவனுக்குப் பிடித்த ஒன்றை நினைத்து அவன் அவளை நேசிக்கட்டும் என்கிறார் நபிகள் நாயகம் (ஸல்).”

சான்றோர்களின் சிந்தனைகளைக் கூறியதற்கு நன்றி சேர். இது சம்பந்தமாக உங்களுடைய சொந்த சிந்தனையை தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

“என்னைப் பொறுத்தவரை குடும்பத்தில் கணவன் - மனைவிக்குள் சண்டையே வரக்கூடாது. அதுதான் நல்ல குடும்பம்”

“உங்கள் குடும்பத்தில் சண்டையே வந்ததில்லையா?”

“எனக்கு கல்யாணமாகி 20 வருடத்தில் இதுவரைக்கும் ஒரு தடவைதான் சண்டை வந்திருக்கு. அதுவும் கல்யாணம் ஆன புதிதில்!”

“அதற்குப்பின் வரவேயில்லையா?”

“வருவதற்கு சான்சே இல்லை!”

“ஏன்?”

“அந்த முதல் சண்டையே இன்னும் முடியவில்லையே!”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேலியகொட கொலை சந்தேக நபர் கைது

(கொழும்பு)

பேலியகொட நகர சபையின் உறுப்பினர் சாமில சந்தருவான் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தடல்ல மஞ்சுல எனப்படும் டிமஞ்சு (வயது 27) என்பவர் பேலிய கொட விசேட வடக்கு குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க – ஆடி அம்பலம பிரதேசத்தில் வைத்து கடந்த 21 ஆம் திகதி இரவு குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை தொடர்பில் பொலிஸ் குழுக்கள் விசாரணை நடத்திவரும் நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

சந்தருவன் இரண்டு கிழமைகளுக்கு முன்னர் தமது வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது காலை வேளையில் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# தமிழ் பேசும் ஒருவர் பிரதமராக பதவியேற்கும் காலம் விரைவில் மலரும்

## அமைச்சர் ராஜித நம்பிக்கை



**(கொழும்பு) பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்துள்ள நரேந்திர மோடி இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பார் என்று மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.**

இந்தியாவின் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்துள்ளமையானது இலங்கை விவகாரத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்தியாவில் ஆட்சிகள் மாறினாலும் அந்நாட்டின் வெளிவிவகார கொள்கை மாறாது.

எனவே தற்போது மோடி பெரும்பான்மை பலத்துடன் இந்தியாவில் ஆட்சிக்கு வந்திருந்தாலும் அந்நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றம் வரும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

இலங்கை விவகாரத்துடன் இந்தியாவில் ஏற்பட்டுள்ள புதிய நிலைமை எவ்வாறான அரசியல் சூழலை தோற்றுவிக்கும் என்று கேட்கப்படுகின்றது. இலங்கை விவகாரத்தைப் பொறுத்தமட்டில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்து மாறு இந்தியாவின் மோடி அரசாங்கம் அழுத்தம் வெளியிடும் என்பதனை எதிர்பார்க்கலாம்.

காரணம் இந்தியாவில் ஆட்சி மாறினாலும் அந்நாட்டின் வெளிவிவகார கொள்கை மாறாது.

எனவே தற்போது மோடி பெரும்பான்மை பலத்துடன் இந்தியாவில் ஆட்சிக்கு வந்திருந்தாலும் அந் நாட்டின் வெளி விவகாரக் கொள்கையில் மாற்றம் வரும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

அந்த வகையில் இந்தியாவில் எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் இலங்கை விடயத்தில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும்படி கோரப்படும் என்பதே யதார்த்தமாகும்.

அந்த வகையில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு மோடி தலைமையிலான இந்திய அரசாங்கத்தின் அழுத்தம் வரலாம் என்பதனை எதிர்பார்க்கலாம்.

இதேவேளை இலங்கையில் தமிழ் பேசும் ஒருவர் பிரதமராக பதவியேற்கும் காலம் விரைவில் மலரும் என்றே நான் கருதுகின்றேன்.

அவ்வாறான முன்னேற்றகரமான இடத்தை நோக்கி நாங்கள் பயணிக்கவேண்டியது அவசியமாகும்

மன்மோகன்சிங் இந்தியாவில் சிறுபான்மை இனத்தை சேர்ந்தவராவார். எனவே இந்தியாவில் அவ்வாறான முன்னேற்றகரமான நிலைமை ஏற்பட முடியுமாயின் ஏன் இலங்கையில் அது நடக்க முடியாது? என்னைப் பொறுத்த வரை இலங்கையில் விரைவில் அவ்வாறான நிலைமை ஏற்படும் என்பது உறுதியாகும் என்றார். (2)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது... (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

## பயங்கரவாதத்திற்கு எதிராக ஒன்றிணைக

### அரசாங்கம் அழைப்பு

உலக நாடுகள் ஒன்றிணைந்து பயங்கரவாதத்திற்கு எதிராக போராட வேண்டுமென அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இந்திய கொன்சோல் காரியாலயம் தாக்கப்பட்டதனைத் தொடர்ந்து வெளியிட்ட விசேட அறிக்கையில் வெளிவிவகார அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

உலகின் சகல விதமான பயங்கரவாதங்களும் இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

மேற்கு ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதிகளினால் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இராஜதந்திர அலுவலகங்கள் மீதான தாக்குதல்கள் மிகவும் பாரதூரமான விடயமாகும்.

இது குறித்து உலக நாடுகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் கொன்சோல் காரியாலய அதிகாரிகளுக்கு காயங்கள் ஏற்படவில்லை.

தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரையில் எவரும் உரிமை கோரவில்லை.

மூன்று ஆயுததாரிகள் கொன்சோல் காரியாலயம் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2)

## சீன அதிகாரிகளுக்கு சிறைத்தண்டனை விதிப்பு

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை உரிய முறையில் நிர்மாணிக்காத காரணத்திற்காக சீன அதிகாரிகளுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் சகல நிர்மாணப் பணிகளையும் மேற்பார்வை செய்த இரண்டு உயர் அதிகாரிகளே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளனர்.

நிர்மாணப் பணிகளை பொறுப்புடன் மேற்கொள்ளாத காரணத்தினால் அனல் மின் நிலையத்தின் பணிகள் தோல்வியடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் பாதக நிலைமை ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டதாகவும், இதற்கு காரணமான உயர் சீன அதிகாரிகள் இருவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், குறித்த சீன அதிகாரிகளுக்கு எப்போது எவ்வளவு காலம் தண்டனை விதிக்கப்பட்டது என்பது பற்றிய தகவல் வழங்கப்படவில்லை.

இதேவேளை, நுரைச்சோலை அனல் மின் நிலையம் பாதிக்கப்படுவதற்கு பொறுப்பாக செயற்பட்ட இலங்கை மின்சார சபையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு எவ்வித தண்டனையும் விதிக்கப்படவில்லை என இலங்கை மின்சாரசபையின் ஊழியர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (2)

## மோடியின் பதவியேற்புக்கு விக்கியை நேரடியாக அழைத்திருக்க வேண்டும்

### மனோ கணேசன் தெரிவிப்பு



இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடியின் பதவியேற்கும் நிகழ்வில் கலந்துகொள்ள, வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனை, விசேட விருந்தினராக இந்திய அரசே நேரடியாக அழைத்திருக்க வேண்டும் என்று இலங்கையின் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

வடமாகாண முதல்வர் விக்கினேஸ்வரனை விசேட ஒரு விருந்தினராக இந்திய அரசை கொண்டு நேரடியாக அழைக்க வைக்கும் முயற்சியில் தமிழக தலைவர்கள் இந்த கடைசித் தருணத்திலாவது ஈடுபட வேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஒரு அறிக்கையில்,

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று புது டில்லி வைபவத்தில் கலந்து கொள்ள, முதல்வர் விக் னேஸ்வரன் மறுப்பு தெரிவித்திருப்பது, நியாயமான ஒரு நிலைப்பாடாகும்.

வடக்கில் மாகாணசபை நடப்புகள் சுமுகமான முறையில் 13ஆம் திருத்தத்தின்படி நடைபெற்று இருக்குமானால், முதல்வர் ஜனாதிபதியுடன் கரங்கோர்த்து புதுடில்லி சென்றிருக்க முடியும்.

ஆனால், வடக்கில் மாகாண செயலாளரை கூட நியமிக்க முடியாத முதல்வர் விக்னேஸ்வரன் ஜனாதிபதியின் குழுவில் எப்படி செல்லமுடியும் என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்.

எனவே வடக்கு முதல்வர் இன்று இலங்கை அரசின் அழைப்பை ஏற்காமைக்கு இலங்கை அரசே முழுப் பொறுப்பேற்க வேண்டும்.

இந்திய அரசு நேரடியாக விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுக்க முன்னுதாரணம் இருக்கின்றதா என தேடத் தேவையில்லை.

வடக்கு மாகாணசபை உருவாக வழியேற்படுத்தியதே, இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்பதால் இத்தகைய அணுகுமுறை கையாளப்படலாம்.

இதன் மூலம் தெற்காசிய ஒத்துழைப்பு நோக்கில் இலங்கை ஜனாதிபதியை அழைக்கும் இந்திய அரசு, அதேவேளையில், இலங்கை தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் தமக்குள்ள கடப்பாட்டையும் தெளிவுபட வெளிப்படுத்தலாம் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## பள்ளித்தோழியே...

நீயும் நானும்
நீண்டு செல்லும்- அந்த
கோம்பாவில் வீதியில்...
கதைத்து...
கனவு கண்டு கவிதை செய்து
காதல் கடிதங்களைப் பரிமாறி
கைபிடித்து...
கிரவல் குவியல்களிலேறி
கும்மியடித்து
குதூகலித்திருந்த
நாட்களும் கழிந்து...
இன்றோடு...
வருடங்கள் ஒன்பது
என் பள்ளித் தோழியே
எங்கிருந்தாலும் ஓடி வா
பாதியில் போன
பள்ளிக்காதலை பக்குவமாய் சுவைக்க

பி.முல்லைதாசன்
கள்ளப்பாடு

## தடை தடை


தமிழர்களுக்கு இரத்தபூமி
உங்களுக்கு களியாட்ட விடுதி
நந்திக் கடலோடு கலந்தது
இரத்த ஆறுகளும்
அடயல் பொருளாய்
மிதந்தது மனித அங்கங்கள்
ஒன்றல்ல இரண்டல்ல
நாற்பதாயிரம் உயிர்கள்
இன்று வடக்கிற்கு குருதி
உறையும் நாள்- உமக்கு
மகிழ்ச்சி பொங்கும் நாள்
கணவனை இழந்த விதவையும்
தந்தையை இழந்த பிஞ்சுகளும்
சேயை இழந்த தாயும்
வாய்விட்டு கதற வழியில்லை இங்கு
அங்கோ வேட்டுக்கள் ஒலியொலிக்க
முப்படையும் அணிவகுக்க
உயிர்காக்கும் தலைவர்கள்
ஆனந்தக் கூத்தாடுகின்றனர்
இங்கு அங்கங்கள் சிதறி
துடிதுடித்த சொந்தங்களை
நினைவுகூர வழியுமில்லை
இயல்பாய் வாழவும் முடியவில்லை

எஸ்.சிந்து
புங்குடுதீவு

## வைரமுத்து

உங்கள் பெயர் மட்டுமல்ல
உள்ளங்களை பெயர்த்தெடுக்கும்
உங்கள் கவிதைகளும் வைரம்தான்
கள்ளிக்காட்டு இதிகாசத்தில்
கல் நெஞ்சங்களும் கண் திறந்தன
சாகித்திய விருதை நீங்கள்
சாந்தமாய் பெற்றபோது
சாட்சாத் அந்தப் பரம்பொருளை
உங்களில் கண்டேன்
அடக்கம், அன்பு, நட்பு என்று
நடப்புக்களைப் புரிந்து
நயம்பட கவி வடித்தீர்
இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்
என்று நீங்கள் கூறி
எந்தன் உள்ளக் குளத்தில்
குதித்து விட்டீர்களே
அற்புதமான உங்கள் படைப்பை
வெறும் அற்ப வார்த்தைகளால்
அர்ச்சிக்க முடியாது என்பதை
உணராது ஒரு குழந்தை
உங்களை கவிவடிக்க
துணிந்தது ஐயா

அ.நளினாசினி
கோண்டாவில்



## இமயம் தொட...

உன்னால்
தொடங்கப்படாவிடின்
தொடர்ச்சியை
தொடர்ந்து கொண்டேயிரு
உயிரில்
சுமந்து கொண்டேயிரு
தொடக்கம் என்பதைவிட
முடிவு என்பது மேல்
தொடர்... இடர்... சகித்து

மாவை.நா. கஜேந்திரன்

## தவிப்பு

ஆற்றில் போட்ட உப்பாய்
உன்னை மீண்டும்
பெற்றிட முடியாமல்
தவியாய் தவித்து நிற்பதை
நீ அறிந்திருந்தால்
உன் கல்லறையும்
கண்ணீரால் கவிதை வடிக்கும்

## ஏக்கம்

நிலவு இல்லாத வானம் போல
நீ இல்லாத என் வாழ்வு
பாலைவனத்தில் மலரும்
மலர்களைப் போல
மலராமல் மலர்கின்றது

க.செல்வமலர்
இடைக்காடு

# மௌனத்தின் தேடல் - 205



## காலம் தவறிய காத்திருப்பு

தினம் தினம் போராட்டம்
விடியல்கள் மட்டும்
விடுகதைகளாகவே
விடுதலை நாடுகின்றன- ஆனால்
தினம் தினம் விற்கப்படுவது
தமிழன் என்ற தன்மானமும்
வீரமும்தான்- வீழ்ச்சி மட்டும் எம்
சொத்தாகிப் போன விதியில்
சொர்க்க வாயில் நாடுகின்றனர்
இளம் சமூகம் வீறிட்டு அழுகிறது
விண்ணும் கூட
காலம் தவறிய காத்திருப்பிற்காக

அ.நளினாசினி
கோண்டாவில்

## வாழ்வைத்தேடி

வாழ்விழந்து
துடிதுடிக்கும் பாலகனே!
வெற்றி முரசு
எதிரொலிக்க- உன்
வாழ்வைத்தேடி
பயணம் கொள்
தோல்வி மட்டும்
வாழ்க்கையில்லை

சி.பிதுசன்
திக்கம்

## நினைத்துப் பார்

முடிந்த வாழ்வை நினைத்து
கவலைப்படும் தோழனே
ஒருமுறை நாளைய
வாழ்வை நினைத்துப்பார்
வெற்றியுடன் வலம்
வருவாய் நாளை

சி.டிலெக்சன்
யா.நெ.ம.க

## வரவேண்டாம்

மே- 18 ஏன்?
வந்தாய்
எதற்காக வந்தாய்
அன்று வந்து என்
தாய் மண் மக்களை
அடியோடு அழித்தாய்
என் பெற்றோர்களைக்கூட
விட்டு வைக்கவில்லை
இன்று நீ சந்தோசமாக
நானே அழுகைக்
கோலத்தில்
நீ! வரவேண்டாம்

வளர்மதி யுகன்
யா.செ...

## தவிப்பு

பள்ளி செல்லும் வயதில்
துள்ளிவிளையாடும் சிறார் நடுவில்
அள்ளி அணைக்க யாருமின்றி
எள்ளளவேனும் கருணைவேண்டி
அழுகையுடன் தொடர்கிறது
இவன் தவிப்பு

ராஜ்பவன்
நீர்வேலி

## அழுகுரல்

விதியின் விளையாட்டில்
சிக்கிக்கொண்டு
அடியெடுத்து முன்னேற
வழி தெரியாமல்
அநாதையாக நிற்கின்ற
இப்பாலகனின்
அழுகுரல் ஒருநாள்
திக்கெட்டும் விடியலின்
குரலாக முழங்கும்

இ.இலக்கியா
சுழிபுரம் மத்தி

## உன்னைப்பார்த்து

நண்பா!
தோல்வி மட்டும் வாழ்வென்று
நினைத்து கவலைப்பட்டு
நாளைய வாழ்வை
தொலைத்துவிடாதே
உன்னை எதிர்பார்த்து
காத்திருக்கிறது
முந்நூறு கோடி மனித இனம்

யாழ்.நிலவன்
துன்னாலை

## ஏக்கம்

அழுது அழுது நீ ஏங்கித்
தவிக்காதே தம்பி!
ஆரும் உனக்கில்லை என்று
நீ கலங்காதே!
நாளை இந்நாட்டில் நீயும்
மனிதனாய் வாழ்வாய்

கணபதிதாசன்
கட்டைக்காடு

## விழிநீர்

உன் விழிநீர் வழிபாடு
அழிக்கப்பட்ட எம் இனத்தின்
ஆத்மசாந்திக்கான
இதய ஒளியே தவிர
பழி தீர்ப்பதற்கானதல்ல
என்பதை புரிந்துகொண்டால்
நினைப்பதற்கே தடை என்பது
நினைத்துப் பார்த்திருக்கத்
தேவையில்லை

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## கானல் நீராக நினைவுகள்

அழுகுரல் தமிழனின் தேசிய கீதமானது
தீரா சோகத்தின் வலியை
கண்ணீரே கரைத்தது
காற்றிலே கலந்த உறவுகளின் நினைவுகள்
கானல் நீராகிப் போனது கடைசியில்
எம்மவரை நினைவுகூர
தடையும் பிறந்தது

இ.சிந்துஜன்
தாவடி

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -206



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 28.05.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.


குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்துக்கு வழங்கப்படும் உதவிகளை சட்டப்படி மறுபரிசீலனை செய்வோம்

## அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு




(பாங்கொக்)

தாய்லாந்தில் நடந்துள்ள இராணுவ புரட்சிக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில் அந் நாட்டுக்கு அமெரிக்கா வழங்கி வந்த அனைத்து உதவிகளும் நிறுத்தப்படும் என் தெரிகிறது.

ஆசிய நாடுகளில் ஒன்றான தாய்லாந்தில் அண்மையில் இரத்தம் சிந்தாமல் திடீர் இராணுவ புரட்சி ஏற்பட்டது. நாடு முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது.

இரவு நேர ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டு டி.வி., ரேடியோ நிகழ்ச்சிகளுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தாலும் அச்சு மற்றும் இணையவழி ஊடகங்கள் தணிக்கைக்கு ஆளாகவில்லை. ஊடகத்தில் ஒரு பிரிவினர் இராணுவ புரட்சியை விமர்சித்து செய்திகள் வெளியிட்டுள்ளனர்.

**அமெரிக்கா கண்டனம்**

தென்கிழக்கு ஆசியாவில் தனது நீண்ட கால நட்பு நாடான தாய்லாந்தில், ஏற்பட்டுள்ள இராணுவ புரட்சிக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி நேற்று முன்தினம் கூறுகையில்,

இந்த இராணுவ புரட்சியை நியாயப் படுத்த முடியாது. இது அமெரிக்கா - தாய்லாந்து உறவில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி விடும். குறிப்பாக தாய்லாந்து இராணுவத்துடனான உறவு மிகவும் பாதிக்கும். எங்களது இராணுவம் மற்றும் பிற உதவிகள், செயற்பாடுகள் அனைத்தையும் அமெரிக்க சட்டப்படி மறுபரிசீலனை செய்வோம் என கூறினார்.

எனவே தாய்லாந்துக்கு அமெரிக்கா செய்து வந்த உதவிகள் அனைத்தும் நிறுத்தப்படும் என தெரிகிறது.

**ஐ.நா. கவலை**

ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன், தாய்லாந்தில் இராணுவ் புரட்சி ஏற்பட்டிருப்பதற்கு ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

அங்கு ஜனநாயக ஆட்சி விரைவில் மலர வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார். ஐரோப்பிய நாடுகள் மற்றும் 10 உறுப்பு நாடுகளைக கொண்ட ஆசியான் அமைப்பு என பல்வேறு தரப்பினரும் தாய்லாந்தில் இராணுவ புரட்சி நடந்திருப்பதை கண்டித்துள்ளனர்.

இந்த நிலையில் புரட்சி நடந்து இரு நாளே ஆன நிலையில், இராணுவ தளபதி பிரயுத் சான் ஓச்சா நேற்று முன்தினம் தன்னைத் தானே இடைக்கால பிரதமராக அறிவித்துக் கொண்டார்.

இது தொடர்பான அறிவிப்பை தேசிய அமைதி மற்றும் ஒழுங்கு பராமரிப்பு கவுன்சில் வெளியிட்டது. அதிகார துஷ்பிரயோக வழக்கில் பதவி பறிக்கப்பட்ட யிங்லக் ஷினவத்ராவையும், அவரது நெருங்கிய ஆதரவாளர்கள் 22 பேரையும் நேற்றுமுன்தினம் இராணுவம் விசாரணைக்காக வரவழைத்து விசாரணை நடத்தியது.

## மோடியின் பயணத்துக்கு நவீன கார்

மோடியின் பயணத்துக்கு குண்டு துளைக்காத, கண்ணி வெடியில் சிக்கினாலும் பாதிப்படையாத நவீன பிஎம்டபிள்யூ கார் தயாராகவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமராக நரேந்திரமோடி பதவியேற்ற பின்பு அவருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் செயவது குறித்து சிறப்பு பாதுகாப்பு குழு ஆலோசனை நடத்தி வருகிறது.

மேலும், நரேந்திரமோடி பயணம் செய்வதற்கு அதி நவீன முறையில் பிஎம்டபிள்யூ நிறுவனத்தின் கார் தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்த காரை துப்பாக்கி குண்டுகள் துளைக்காது, கண்ணி வெடியில் சிக்கினாலும் நொறுங்காத அளவுக்கு பலம் பொருந்தியதாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஏவுகணைகள், வெடி குண்டுகள் போன்றவற்றின் வெப்பம் தாக்க முடியாத அளவுக்கு வெப்ப தடுப்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும் வெடிகுண்டு போன்ற எந்த தாக்குதலின் போதும் பெற்றோல் டாங்குகள் வெடித்து சிதறாது.

# பிரதமர் நவாஸ் இங்குவருவதா? சிவசேனா கட்சி போர்க்கொடி

மோடியின் பதவியேற்பு விழாவில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கலந்து கொள்ளுவதற்கு சிவசேனா கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

மோடி பதவியேற்பு விழாவில் ராஜபக்ஷ, நவாஸ் ஷெரீப் உட்பட 8 நாட்டுத்தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிலையில் பிரதமர் பதவியேற்பு விழாவில் ராஜபக்ஷ, நவாஸ் ஷெரீப் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொள்ள கூடாது என்று கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

ராஜபக்ஷ வருகைக்கு தமிழ்நாட்டில் அ.தி.மு.க, தி.மு.க, பா.ம.க.,மதிமுக உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இந்நிலையில் மோடி பதவியேற்பு விழாவில் நவாஸ் ஷெரீப் கலந்து கொள்ள கூடாது என பா.ஜ.க. தலைமையிலான கூட்டணியில் அங்கம்வகிக்கும் சிவசேனா கட்சி போர்க் கொடி தூக்கி உள்ளது.

நவாஸ் ஷெரீபுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜம்மு காஷ்மீரில் சிவசேனா கட்சி தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். அப்போது அவர்கள் நவாஸ் ஷெரீபின் உருவ பொம்மையை எரித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனால் நரேந்திர மோடி பதவி ஏற்பு விழாவில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் பங்கேற்பது உறுதியாகியுள்ளதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நவாஷ் ஷெரீப் பங்கேற்பை பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது.

நடைபெற உள்ள மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்க கடந்த 5 நாட்களுக்கு முன் நவாஸ் ஷெரீப்பிற்கு இந்தியா அழைப்பு விடுத்திருந்தது.

இந்த நிலையில் பாகிஸ்தான் சிறைகளில் உள்ள இந்திய மீனவர்கள் 151 பேரை பாகிஸ்தான் விடுவித்துள்ளது.

இதனிடையே நவாஷ் ஷெரீப் மற்றும் மோடி சந்திப்பு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் பாராளுமன்றில் நுழைந்து சீக்கியர்கள் போராட்டம்


மத புனித நூல் அவமதிப்பை தொடர்ந்து பாகிஸ்தான் பாராளுமன்றத்துக்குள் புகுந்து சீக்கியர்கள் போராட்டம் நடத்தினர்.

பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் மாகாணத்தில் சீக்கியர்கள் பெருமளவில் வசிக்கின்றனர். அவர்கள் நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் உள்ள பாராளுமன்ற கட்டடத்துக்குள் திடீரென புகுந்தனர்.

கைகளில் பனர்களை பிடித்திருந்த அவர்கள் அரசிடம் கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தினார்கள். அதை தொடர்ந்து பொலிஸார் விரைந்து வந்து அவர்களை வெளியேற்றினர்.

பாகிஸ்தானில் சீக்கியர்களின் புனித நூல் அவமதிக்கப்படுவதாக தெரிகிறது. அதற்கு கணடனம் தெரிவித்து இந்த போராட்டம் நடந்தது. பாகிஸ்தானில் மத அவமதிப்பு சட்டம் உள்ளது.

இஸ்லாம் மதத்தையும் புனித நூல் திருக்குர் ஆனை அவமதிப்பவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அது போன்று சீக்கிய மதத்தையும் புனித நூலையும் அவமதிப்பவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த போராட்டம் நடத்தப்பட்டது.



பிலிப்பைன்சிற்கு வருகைதந்துள்ள வியட்நாம் பிரதமர் நெக்யான் [illegible] ஜனாதிபதி மாளிகையில் வரவேற்கும் ஜனாதிபதி பெனிக்னோ [illegible]

# மோடியுடன் சேர்ந்து வாழ யசோதா பென்னிற்கு விருப்பம்

## பதவியேற்பு விழாவிற்கு அழைப்பில்லை

மோடி அழைத்தால் சேர்ந்து வாழத்தயார் என்று அவரது மனைவி யசோதா பென் கூறியுள்ளார்.

யசோதா பென் அளித்த பேட்டியில் கூறியதாவது,

மோடி நாட்டின்,பிரதமராக பதவி ஏற்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஒட்டு மொத்த தேசத்தைவிட அதிகமாக மகிழ்கிறேன்.

நானும் அவரும் விவாகரத்து செய்து கொள்ளவில்லை, நாங்கள் சேர்ந்து வாழவில்லை அவ்வளவுதான். அவரைப் பொறுத்த மட்டில், அவரது வாழ்க்கையில் நாடுதான் மிகவும் முக்கியம் என்றும் அவர் அழைத்தால் அவருடன் சேர்ந்து வாழத்தயாராக இருக்கிறேன் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை நரேந்திர மோடியின் பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்ளுமாறு அனைத்து மாநில முதல் -மந்திரிகள், முக்கிய பிரமுகர்கள், எம்.பிக்கள், சிறப்பு அழைப்பாளர்கள், அரசு உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு அழைப்பு அனுப்பப்பட்டது.

ஆனால், பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்ள குஜராத்தில் வசிக்கும் மோடியின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் இதுவரை அழைப்பு விடுக்கவில்லை.

மோடி 17 வயதிலேயே குடும்பத்தினரை பிரிந்து விட்டார். தாயார் ஹீரா பாயை மட்டும் அடிக்கடி சந்திப்பது உண்டு. மற்றபடி குடும்பத்தினருடன் நெருங்கிய உறவு கிடையாது.

மோடியின் தாயார் ஹீராபாய்க்கு டில்லி சென்று பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்ளும் அளவுக்கு உடல் நலம் இல்லை.

மோடியின் மனைவி யசோதா பென் சிறுவயதிலேயே கணவரைப் பிரிந்து குஜராத்தில் தனியாக வசிக்கிறார். அவரிடம் மோடி பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்வீர்களா? என்று கேட்டதற்கு அழைப்பு வந்தால் ஏன் கலந்து கொள்ளக் கூடாது என்று பதில் தெரிவித்தார்.

ஆனால் டில்லியில் அதிகாரிகளிடம் கேட்ட போது மோடியின் தாயார் மற்றும் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் பிரமுகர்கள் யார் வந்தாலும் அவர்களுக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்க தயாராக இருக்கிறோம் என்றனர்.

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815, 021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைகளை வென்றெடுப்பதற்கு நேர்மையாக செயற்படுங்கள்

## அரசியல் குறித்து கஜேந்திரன் கருத்து

(யாழ்ப்பாணம்)

தமிழர்களுக்கான உரிமையை வென்றெடுப்பதற்கு ஊடகங்களும் பொது மக்களும் நேர்மையாக செயற்பட்டால் போதாது, தமிழ் அரசியல் வாதிகளும் நேர்மையாக செயற்பட வேண்டுமென தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் அனைத்து கட்சிகளுக்கான அழைப்பின் பேரில் வடக்கில் தற்கால நிலை தொடர்பான கலந்துரையாடலொன்று யாழ்.பாடி விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையை பொறுத்தவரை இங்கு இரு தேசங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று தமிழர் தேசம் மற்றையதொன்று சிங்கள தேசம்.

சிங்கள தேசத்தில் தற்போதுள்ள ஆட்சி மாற்றமடைந்தால் அவர்களுக்கான தீர்வு அடுத்து வருகின்ற ஆட்சியாளர்களால் கிடைக்கப் பெறலாம்.

ஆனால் தமிழர் தேசத்தை பொறுத்த வரையில் இந்நாட்டில் எத்தனை தான் ஆட்சி மாற்றம் வந்தாலும் அவர்கள் அனைவரும் பௌத்த மதவாத சிந்தனையாளர்களாகவே இருப்பார்கள்.

ஆகையால் நாட்டின் ஆட்சி மாற்றம் தமிழர்களிற்கு ஒரு போதிலும் தீர்வை பெற்றுத்தராது. இந்நிலையில் எமது பிரச்சினைகள் எம் மீது மேற்கொள்ளப்படும் அடக்கு முறைகள் சர்வதேச மயப்படுத்துவதன் மூலமே எமது பிரச்சினைக்கான தீர்வைப் பெறமுடியும்.

ஆகையால் எமது பிரச்சினையை சர்வதேசத்திற்கு கொண்டு செல்வதே ஒரேவழியாகும். இதற்காக நாம் மக்களை திரட்டி போராட வேண்டும்.

எமக்கான உரிமைகளை பெறுவதற்கு ஊடகவியலாளர்கள், பொது மக்கள் மட்டும் நேர்மையாக செயற்பட்டால் போதாது. அரசியல் வாதிகளும் நேர்மையாக செயற்படல் வேண்டு மென்றார். (செ-4)

# வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களும் வாக்களிக்க வசதி ஏற்படுத்த வேண்டும்

(கொழும்பு)

முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்ப்பதற்கு கோரப்படும் ஆவணங்களில் வாக்காளர் பட்டியல் கோருவதை கட்டாயப்படுத்த வேண்டாம் என கல்வியமைச்சுக்கு வேண்டுகோள் விடுக்கவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வாக்காளர் பட்டியலை கோருவதால் பெருமளவிலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலையில் சேர்ப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

வாடகை வீடுகளில் உள்ளோர் தமது பிள்ளையை பாடசாலைக்கு சேர்க்கும்போது பிரதான ஆவணமான வாக்காளர் பட்டியலை பாடசாலைக்குச் சமர்ப்பிப்பது எந்தளவு சாத்தியமாகும் என்பதை கல்வியமைச்சு கவனத்திற்கொள்ள வேண்டும்.

இலவசக் கல்வி, இலவச மருத்துவம் போன்ற வாக்களிப்பும் மக்களின் உரிமையாகும்.

வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்கன்றி வாக்களிக்கும் உரிமை கைநழுவிப் போய்விடக் கூடாது என்பதை நோக்காகக் கொண்டே தேர்தல் செயலகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் இம்முறை வெளி நாடுகளிலுள்ளோருக்கும் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

அவ்வாறிருந்தும் 66 வீத வாக்குப் பதிவே இடம்பெற்றுள்ளது. தேர்தல் தொடர்பில் அக்கறையுடன் செயற்படும் நாடுகள் சில அங்குள்ள தூதரகங்களுக்கு வாக்குப் பெட்டிகளை அனுப்புமாறு எம்மைக் கேட்டுக்கொண்டுள்ளன.

தென்னாபிரிக்காவின் 56 பேர் இலங்கையிலுள்ளனர். அவர்களுக்கு வாக்களிக்க அந்நாடு வழி செய்து கொடுத்துள்ளது.

இதனைக் கவனத்திற்கொண்டு வெளிநாடுகளிலுள்ள இலங்கையரும் வாக்களிக்க வழிசெய்து கொடுப்பது அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2)

## ஆய்வரங்கு பிற்போடப்பட்டுள்ளது

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் திருவாதவூரரும் சைவத்திருநெறியும் எனும் தலைப்பில் எதிர்வரும் ஜூன் மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவிருந்த இந்து சமய தமிழிலக்கிய ஆய்வரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்திநாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இவ்வாய்வரங்கு எதிர்வரும் ஜூலை மாதம் 18, 19, 20 ஆம் திகதிகளில் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கை தமிழர் நலனில் நிச்சயம் கவனம் செலுத்துவோம்

## பா.ஜ.க. தேசிய செயலாளர் தெரிவிப்பு

இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் குறித்து நாங்கள் தெரிவித்து உள்ளோம். நிச்சயமாக இலங்கைத் தமிழர் நலன் பாதுகாக்கப்படும் என பாரதீய ஜனதா கட்சியின் தேசிய செயலாளர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

தாம்பரத்தில் அண்மையில் பாரதீய ஜனதா கட்சியின் தேசிய செயலாளர் தமிழிசை சௌந்தரராஜன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,

காங்கிரஸ் இந்திய தமிழர்களான மீனவர்களையும் இலங்கை தமிழர்களையும் காப்பாற்றவில்லை. இதனால் தான் காங்கிரஸ் தி.மு.கவை மக்கள் புறக்கணித்தார்கள்.

தமிழக முதலமைச்சர் தமிழர் நலன் கருதி ஏதாவது கோரிக்கை வைத்தால் மோடி நிச்சயமாக பரிசீலித்து நடவடிக்கை எடுப்பார்.

தமிழக முதலமைச்சரின் உதவி மத்திய அரசுக்கு தேவை இல்லை. அதனால் செவிசாய்க்க மாட்டார் என்பதையெல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

இலங்கை தமிழர் நலன் பாதுகாக்கப்படும். தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிச்சயமாக தீர்வு ஏற்படும். நதிகள் பிரச்சினை, மீனவர் பிரச்சினை, இலங்கை தமிழர் பிரச்சினைகள் குறித்து நாங்கள் தெரிவித்துள்ளோம் என்றார்.(2)

# பாடசாலை மாணவர்களின் போஷாக்கில் அதீத கவனம்

(கொழும்பு)

பாடசாலை செல்லும் மாணவர்களில் 65 வீதத்துக்கும் அதிகமான மாணவர்கள் போதிய போஷாக்குள்ளவர்கள் என கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவு மற்றும் பால் வழங்கும் வேலைத்திட்டத்தின் ஊடாக மாணவர்கள் மத்தியில் போஷாக்கின்மை வீதத்தை மேலும் குறைக்க முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றம் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் நேற்றுமுன்தினம் கூடியது.

இதன்போது ஐ.தே.க எம்பி சஜித் பிரேமதாச வாய்மொழி விடைக்காக எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே கல்விச் சேவைகள் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், 40 இலட்சம் பாடசாலை மாணவர்களில் 10 இலட்சம் மாணவர்களுக்குத்தான் மதிய போசன உணவு வழங்கப்படுவதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது.

போசணைக்குறைவு உள்ள மாணவர்களுக்கு மாத்திரமே மதிய போசனம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களில் 65 வீதமான மாணவர்கள் போதியளவு போசணையுடைய மாணவர்கள்.

இத் திட்டத்தின் மூலம் பாடசாலை மாணவர்கள் மத்தியில் காணப்படும் குறை போசாக்கை மேலும் நிவர்த்திசெய்ய முடியும். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### சிற்றம்பலம் தங்கத்துரை

உடுவில் தெற்கு புது மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் தங்கத்துரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சரவணமுத்து பேரம்பலம்

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாக கொண்ட சரவணமுத்து பேரம்பலம் கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 7 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாரந்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### இராஜகுணநாயகம் ஜெகநாதன்

கொல்லங்கலட்டி மடத்தடியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால், கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜகுணநாயகம் ஜெகநாதன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 9 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### இந்திரனேஸ்வரஐயர் சண்முகசர்மா

யாழ்.இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட இந்திரனேஸ்வரஐயர் சண்முகசர்மா கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது வத்தளை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொழும்பு-15, மாதம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சண்முகரெத்தினம் மங்கையர்க்கரசி

வேலணைமேற்கு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகரெத்தினம மங்கையர்க்கரசி கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### வேலுப்பிள்ளை செகதீஸ்வரன்

உசனைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செகதீஸ்வரன் கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி மாணிக்கம் கனகம்மா

நயினாதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் கனகம்மா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி ராஜேந்திரன் பரமேஸ்வரி

யாழ்.அல்வாயைப் பிறப்பிடமாகவும் அமெரிக்கா, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜேந்திரன் பரமேஸ்வரி கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு Elgin Mills Cemetery Visitation Chapel And Reception Centre,1591 Elgin Mills E, Richmond Hill,ON L4S 1M9,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகத்தெரிவு

(கிளிநொச்சி)

பூநகரி பிரதேச செயலக பிரிவின் மாற்றுத் திறனாளிகள் சம்மேளன நிர்வாகத்தெரிவு அண்மையில் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இதன்படி சம்மேளனத்தின் தலைவர் திருமதி மகேஸ்வரன் வனிதா, செயலாளர் திருமதி சத்தியப்பிரியா பொனிபஸ், பொருளாளர் பா.சிவானந்தகுமாரி, உப தலைவர் செ.சதீஸ்குமார், உப செயலாளர் வி.உமாபரன், நிர்வாக உறுப்பினர்கள் இ.குகராசா, கி.அழகநாதன த.சாயீசன், சி.இராசசுலோசனா, ச.புண்ணியமூர்த்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் செ.சுரேந்திரா, குடும்ப புனர்வாழ்வு நிறுவனத்தட்ட அதிகாரி கே.பிறேம்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (9-254)

## புதூர் நாகதம்பிரான் பொங்கல் விழா

(குருமன்காடு)

வவுனியா, புதூர் நாகதம்பிரான் கோவிலின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் ஜுன் மாதம் 23 ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அன்றையதினம் காலையிலிருந்து விசேட பூஜைகள் நடைபெறவுள்ளதுடன், இரவு பொங்கல் நடைபெறவுள்ளது.

இதேவேளை கோவில் பற்றுச்சீட்டுக்கள் கோவில் முன்றிலில் விற்பனை செய்யப்படும் என்பதால், எவராவது கோவில் பெயரை பயன்படுத்தி பற்றுச்சீட்டுக்களை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இது தொடர்பில் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் உடனடியாக கோயில் நிர்வாகத்திற்கு அறிவிக்குமாறும் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (9-250)

## மாங்குளம் மகாவித்திக்கு நாமல் எம்.பி.வருகை

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள மகிந்தோதய ஆய்வுகூடத்தின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய நாமல் ராஜபக்ஷ எம்.பி. நாளை காலை 9.30 மணிக்கு வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட க.பொ.த(உ/த) இல் கல்வி பயிலும் சுமார் 250 மாணவ, மாணவியர் அன்றைய தினம் மகிந்தோதய ஆய்வுகூடத்தில் நடைபெறவுள்ள இணைய சேவையை கல்வி நடவடிக்கைகளுக்காக எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான செயலமர்வு ஒன்றில் பங்குபற்றவுள்ளார்.

இச் செயலமர்வில் பங்குபெறும் மாணவர்களுடன் கலந்துரையாடுவதுடன் அண்மையில் நாமல் ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்ட மகிந்தோதய ஆய்வு கூடத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (அ-15)

# விசுவமடு பொதுச்சந்தைக்கு நிரந்தர கட்டடத்தை அமைக்குக



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள விசுவமடு பொதுச்சந்தைக்கு நிரந்தர கட்டடமின்மையால் வியாபாரிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

யுத்தத்தின் பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதோடு இப்பொதுச் சந்தையும் இயங்க ஆரம்பித்தது.

போரினால் பொதுச்சந்தையின் கட்டடம் சேதமடைந்திருந்தமையால் வியாபாரிகள் தாமாகவே கொட்டகைகளை அமைத்து வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறாக 12 மரக்கறி வியாபாரிகள், 2 இறைச்சி வியாபாரிகள், 15 மீன் வியாபாரிகள் உட்பட ஏனைய வியாபாரிகளோடு சுமார் 50இற்கும் மேற்பட்டோர் தற்காலிகக் கொட்டகைகளில் வியாபாரம் செய்து வருகின்றனர்.

இச்சந்தையை விசுவடுமேற்கு, கிழக்கு, பிரமந்தனாறு, நெத்தலி ஆறு, சுண்டிக்குளம், புன்னை நீராவி, கல்லாறு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்டவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.


அதிகமான மக்கள் நாடி வரும் இப்பொதுச்சந்தைக்கு நிரந்தர கட்டடம் அமைக்கப்படாமையினால் இட நெருக்கடி, பாதுகாப்பின்மை போன்ற பல பிரச்சினைகளை வியாபாரிகள் எதிர்கொள்கின்றனர்.

வருமானத்தை ஈட்டுவதற்கு பெருந்தொகை மூலதனத்தை செலவு செய்து சந்தையில் வியாபாரத்தை முன்னெடுப்பதற்கு பாதுகாப்பின்மை பெரும் பிரச்சினையாகவுள்ளதென வியாபாரிகள் அங்கலாய்க்கின்றனர்.

யுத்தத்தின் பின்னர் பல்வேறு இடங்களிலுள்ள பொதுச்சந்தைகள் புனரமைக்கப்பட்டு புதிதாக அமைக்கப்பட்டும் வருகின்ற போதும் விசுமடு பொதுச்சந்தையை அமைப்பதற்கு ஏன் எவரும் முன்வரவில்லையென அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே, மாதாந்தம் வரி அறவீடு செய்து வருகின்ற புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் சந்தைக்கான நிரந்தர கட்டடத்தை அமைத்து வியாபார நடவடிக்கைக்கு உதவுமாறு சந்தை வியாபாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (9-263)

## வலம்புரி செய்தியையடுத்து அம்பாள்குளம் கிராமத்தில் மின்விநியோகம் பூர்த்தி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளம் பழைய சந்தைக்கு பிற்பகுதியிலுள்ள வீதிக் கான மின்சாரம் வலம்புரி செய்தியையடுத்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

அம்பாள்குளம் கிராமத்திற்கான மின்விநியோகம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக வழங்கப்பட்டது.

எனினும், அம்பாள்குளம் பழைய சந்தைக்கு பின் வீதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் அவ் வீதியின் பகுதியிலுள்ள 22 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

இதனையடுத்து கடந்த பெப்ரவரி மாதம் வலம்புரி பத்திரிகை, குறித்த பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவில்லையெனவும் இச்செயற்பாடு மூலம் மக்களிடையே பாரபட்சம் காட்டப்படுவதாகவும் வலியுறுத்தியதோடு மின்சாரத்தை வழங்குமாறும் கோரியிருந்தது.

இதற்கமைய கடந்த வாரம் குறித்த பகுதிக்கு மின் விநியோகம் மேற்கொள்வதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது வீடுகளுக்கு மின்விநியோகிப்பதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-271)

## அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் 5 ஆயிரத்து 600 குடும்பங்களில் அனர்த்தங்களின் போது பாதிப்பிற்குள்ளான குடும்பங்களுக்கு சமூக சேவை திணைக்களத்தினாலும் சமூக சேவை அமைச்சினாலும் உதவிகள் வழங்கப்படுவதாக பிரதேச செயலக பிரதிச செயலர் எஸ்.குருபரன் தெரிவித் துள்ளார்.

இதன்படி சமூக சேவை திணைகளத்தினூடாக தற்செயல் நிவாரணக் கொடுப்பனவுகள் 105 குடும்பங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதமும் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள் ஆயிரத்து 339 குடும்பங்களுக்கு தலா 250 முதல 500 ரூபா வரையிலும் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு சமூக சேவை அமைச்சினூடாக தனி ஒருவரை மாத்திரம் குடும்ப தலைவராக கொண்ட 67 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கோடு தலா 15 ஆயிரம் ரூபாவும் திடீர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 280 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளை புனரமைப்பதற்காக தலா 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9-15)




## மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் கழிவுகள் போடுவதை நிறுத்துக

(மல்லாவி)

ஏ-9 வீதியிலுள்ள மாங்குள நகரப் பகுதிகள் மற்றும் திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயங்கள் போன்ற பகுதிகளில் சேருகின்ற கழிவுப்பொருட்களை புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் மக்கள் குடியிருப்பு பகுதிகளில் போடுவதை நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்குறித்த பகுதிகளில் சேர்கின்ற கழிவுகளை போடுவதற்கான இடம் ஒதுக்கப்படாமையினாலேயே இவ்வாறாக மக்கள் குடியிருப்பினுள் கழிவுகள் போடப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.


மாங்குளம் பகுதிகளில் சேருகின்ற கழிவுகள் கடந்த ஆண்டு துணுக்காய் செல்லும் வீதியிலுள்ள மூன்று முறிப்பு கிரவல் மண்குவாரி பகுதியில் போடப்பட்டன.

எனினும், அவ்விடத்தில் கழிவுகள் போடுவதனை மக்கள் எதிர்த்தமையினால், தற்போது மாங்குளம் மதகுவைத்த குளப்பகுதியில் போடப்படுகின்றது.

இவ்விடத்தில் மக்கள் குடியிருப்புக்கள் காணப்படுவதால் சுகாதாரச் சீர்கேடு இடம்பெறுவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேபோன்று திருமுறிகண்டி பகுதியிலுள்ள கழிவுகளும் மக்கள் குடியிருப்புள்ள காட்டுப் பகுதிகளில் கொட்டப்படுகின்றன.

எனவே, புதக்குடியிருப்பு பிரதேச சபையினர் கழிவுகளை போடுவதற்கு ஏற்ற இடத்தை ஒதுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-15)



கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் திறன்விருத்தி வெளிக்கள சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு அண்மையில் சென்றனர். இதன்போது கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அம்பாறை அரசாங்க அதிபருக்கு நினைவு பரிசில் ஒன்றை வழங்குவதையும் அம்பாறை, கிளிநொச்சி மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலு பொசுங்கினாலும் கல்லுலுத்தி வந்தாலும் காலக்கொடுமையாலே கஷ்டப் பட காலமாச்சே. *- நாட்டார்பாடல்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நினைவேந்தலுடன் நினைப்பொழியாதீர்

வன்னிப் போரில் உயிரிழந்தவர்கள் தொடர்பில் நினைவேந்தல் நினைவுகள் நடந்து முடிந்துள்ளன. வன்னியில் நடந்த பேரவலத்தில் சிக்கி உயிரிழந்தவர்களை நினைவு கூருவது எங்கள் கடமை என்ற அடிப்படையில் பல்வேறு சிக்கல்கள் மத்தியிலும் உறவுகளின் நினைவேந்தல் உணர்வு பூர்வமாக நடந்தேறின.

வன்னி யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவேந்தும் நிகழ்வை அரசியலாக்கி அதனையொரு பதற்றமான சூழ்நிலைக்குக் கொண்டுசெல்ல சில தீய சக்திகள் முற்பட்டாலும் தமிழ் மக்கள் நிதானமாக நடந்து கொண்டதுடன் உறவுகளையும் நினைவு கூர்ந்து தங்களின் தார்மீகப் பொறுப்பை செம்மையாக நிறைவேற்றினர் என்பதில் ஆறுதல்.

இவை ஒருபுறம் இருக்க, நினைவேந்தலுடன் எங்கள் கடமை முடிந்து விடுகிறதா? என்ற கேள்வி எழுகிறது.

நினைவேந்தல் என்பது உயிரிழந்தவர்கள் பொருட்டானது. அதேநேரம் வன்னி பேரவலத்தில் சிக்கி; அங்க வீனமாகிப்போனவர்கள், வருமானத்தை ஈட்டித்தரக் கூடிய குடும்பத் தலைவர்களை இழந்தவர்கள், பிள்ளைகளைப் பறிகொடுத்தவர்கள்,

இருப்பதற்கு வீடில்லை, உழைப்பதற்கு வழியில்லை, ஒரே நேர உணவுக்காக ஏங்கும் பரிதாபம் என்ற எத்தனையோ துயரங்களை வன்னிப் போர் பிரசவித்துள்ளதென்பதை நாம் ஒரு போதும் மறந்து விடக் கூடாது.

வீதி புனரமைப்பு என்று ஒரு தரப்பு மார் தட்டுகிறது. இன்னொருதரப்போ புதிய வீதி, பயணத்திற்குப் பெரும் சுகம் என்கிறது.

ஆனால் அந்த வீதியைப் புனரமைப்பதில் தமிழ்ப் பெண்கள் தலையில் கற்சுமையை தாங்கி வேகாத வெயிலில் வதைபடுவதை யாரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

போர் தந்த இழப்பில் தன் குடும்பத் தலைவனைப் பறி கொடுத்த பரிதாபத்தில் அந்தப்பெண் வீதியில் நின்று தலையில் மண் சுமந்து தன் குடும்பப் பாரத்தைப் போக்கப் படாப்பாடு படுவதையும் நாம் சிந்திக்க வேண்டும்.

நினைவேந்தல் எங்கள் தார்மீகக் கடமை என்றால், போரால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்திற்கு வழி செய்வதும் எங்களின் தார்மீகக் கடமை.

எனினும் அந்தக் கடமையை தமிழ் அரசியல் தலைமைகள் மறந்துபோயின என்றே கூற வேண்டும்.

நினைவேந்தலில் காட்டப்படும் மும்முரத்தைவிட முப்பது மடங்கு மேலாக ; போரால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்காக நாம் பாடுபட வேண்டும்.

வாழ விரும்பிய மக்களை வேரறுத்த இந்த நாட்டில், உயிரிழந்த ஆத்மாக்கள் சாந்தியடைய வேண்டுமாயின் முதலில் உயிரிழந்தவர்களின் குடும்ப நிலைமை எவ்வாறுள்ளது ? அவர்களின் சீவனோபாயம் சீராக உள்ளதா ? என்பதைக் கண்டறிந்து அந்தக் குடும்பத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

அவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே வன்னிப் போரில் உயிரிழந்த ஆத்மாக்கள் நிம்மதியடையும்.

எனவே தீபமேற்றி அஞ்சலி செய்வதோடு நினைப்பொழியாமல், போரால் பாதிக்கப்பட்டு சீவியத்திற்காக அவலப்படும் எங்கள் உறவுகளுக்கு உதவும் பெரும் பணியைச் செய்யும் போதுதான் நினைவேந்தல்கள் அர்த்தமுடையதாகும்.

# முப்பது இலட்சம் கோடி ரூபாய் ஊழியர் சேமலாப நிதி எங்கே?

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியை கொஞ்சம் கொஞ்சமாக எடுக்குமாறு அரசாங்கம் கூறுமேயானால், அதற்கு எதிராக மக்களை வீதியில் இறக்க வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின்பாராளுமன்ற உறுப்பினர்ஹர்சடிசில்வாதெரிவித்துள்ளார்.

30 இலட்சம் கோடி ரூபாய் ஊழியர் சேமலாப நிதிக்கு என்ன நடந்தது என்பதை அரசாங்கம் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனக் கூறிய அவர், 2011ஆம்மற்றும்2013ஆம்ஆண்டுகளில் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட நிதியறிக்கை பொய்யானது எனவும் குறிப்பட்டுள்ளார். கொழும்பில் அண்மையில நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஊழியர் சேமலாப நிதியம் பத்திரிகைகளில் வெளியிட்ட நிதியறிக்கை முழுமையானதல்ல எனவும்அவர் தெரிவித்துள்ளார்.

தான் தொடர்ந்தும் இது பற்றிய தகவல்களை வெளியிட்டு வந்ததால், ஊழியர சேமலாப நிதியம் 2014ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி 2011 ஆம் ஆண்டுக்கான நிதியறிக்கையை வெளியிட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், நிதியறிக்கை ஊழியர் சேமலாப நிதியத்தின் கணக்கில் உள்ள பணத்தை தெளிவாக குறிப்பிட்டு காட்டவில்லை என கணக்காய்வாளர் வரலாற்றில் முதல் முறையாக குறிப்பிட்டுள்ளார் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (2)

# தாய்லாந்து பிரதமர் யாங்லுக்கை விடுவிக்க வலியுறுத்துங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தாய்லாந்து பிரதமரை விடுதலை செய்யுமாறு இலங்கை பாராளு மன்றம கோரிக்கை விடுக்க வேண்டுமென எதிர்க்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தாய்லாந்து பிரதமர் யாங்லுக் சின்வத்ராவிடமிருந்து அண்மையில் இராணுவ ஆட்சியாளர்கள் பதவியை பறித்திருந்தனர். தற்போது யாங்லுக் சின்வத்ரா வீட்டுக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

யாங்லுக் கடந்த ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது மத வழிபாட்டு நிகழ்வுகளில் பங்கேற்றதுடன், பாராளுமன்றிலும் உரையாற்றியிருந்தார்.

ஜனநாயக ரீதியாக தாய்லாந்தில் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட யாங்லுகை விடுதலை செய்யுமாறு கோரும உரிமை இலங்கை பாராளுமன்றிற்கு காணப்படுகின்றது. ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பிரதமரை, இராணுவ சூழ்ச்சியின்மூலம் பதவி கவிழ்ப்பது ஏற்றுக் கொள்ள முடியாது என்றார். (2)

# சா/த பரீட்சைக்கு விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

யாழ்/கொக்குவில் இந்துக் கல்லூரியிலிருந்து இவ் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு இரண்டாம் தடவையாக தோற்றவுள்ள மாணவர்கள், கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் ஜுன் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (அ)

# கோழி வளர்ப்பு கருத்தரங்கு

(கொழும்பு)

யோய் வெட்பாமா, அஸ்ரோன் மிருக சுகாதாரப் பிரிவும் இணைந்து நடத்தும் **கோழி வளர்ப்பும் நோய்களிலிருந்து பாது காத்தல்** தொடர்பான கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் காகில்ஸ் பூட்சிற்றி முன்பாகவுள்ள எவரெஸ்ட் றெஸ்ரோரன்சில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கோழி வளர்ப்பின் முக்கியத்துவம்(முட்டைபோடும்கோழி, இறைச்சி இனக்கோழி) எனும் தொனிப் பொருளில் ஓய்வுபெற்ற கால்நடை உத்தியோகத்தர், விரிவுரையாளர் ச.தவகுணராசசிங்கம், கோழிகளுக்குரிய மருந்துகளும் அதன் பயன்களும் பற்றிய விளக்கவுரையினை அஸ்ரோன்கால்நடைவைத்திய ஆலோசகர் வைத்தியர்கேமபாலா ஆகியோர்வழங்கவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் பயனாளிகளுக்கு கோழிகளுக்கான விற்றமின்பவுடர்மருந்துகளின் பாவனைக் கையேடு இலவசமாக வழங்கப்படவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்க

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இவ்வாண்டு இறுதிப்பரீட்சை இற்கு விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளுக்குரிய பரீட்சை அனுமதி அட்டைகளை எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தவறாது பெற்றுக் கொள்ளும்படி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். இப்பரீட்சைக்கான நேரசூசியை கலாசாலை விளம்பரப்பலகையில் பார்வையிடமுடியும்.

இப்பரீட்சைக்கான செயல்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் ஜுன் மாதம் 7, 8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



## வேண்டிப் பணிந்திடடி

அகம்பிர மாஸ்மியென்னும் அரியதிரு மந்திரத்தை
அகத்திலே நீசெபித்துச்- சின்னத்தங்கம்
ஆறுதலாய் இருந்திடடி

அந்தியுஞ் சந்தியும்நீ ஆசானைச் சிந்தித்து
வந்தனைசெய் திருந்திடுவாய்- சின்னத்தங்கம்
மதியிரவி யுள்ளமட்டும்

# துன்பங்களிலும் இடர்பாடுகளிலும் மகிழ்ச்சியுடன் இயேசுவோடிருப்போம்

"நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள். உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை தந்தை உங்களுக்கு அருள்வார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியானவர். நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன். உங்களிடம் திரும்பி வருவேன். என் கட்டளைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பவர் என்மீது அன்பு கொண்டுள்ளார்.

## பரமபிதா காட்டிய பாதை

என்மீது அன்பு கொள்பவர்மீது தந்தையும் அன்பு கொள்வார். நானும் அவர் மீது அன்பு கொண்டு அவருக்கு என்னை வெளிப்படுத்துவேன்." என்று இயேசு தம் சீடரை நோக்கிக் கூறிய வார்த்தைகள் இன்றைய பைபிள் பகுதிமூலம் தெளிவுபடுத்தப் படுகின்றன.

தங்களுடன் இறைமகன் இயேசு இருக்கிறார் என்ற அந்த ஓர் உணர்வால் எத்தனையோ வீரமிக்க தியாக உள்ளங்கள் தங்கள் உயிரையும் இழக்க தயாராக இருந்தார்கள் என்பது வரலாறு.

இயேசுவுக்காக உயிராபத்துக்கள் மத்தியில் இத்தனை நூற்றாண்டுகள் உழைக்கவும் முன்வந்தார்கள்.

இவர்களுள் பலர் கிறிஸ்துவுக்குப் பின்னர் தொடர்ந்த பல நூற்றாண்டுகளின் போது தமது திருப்பணியின் நிமிர்த்தம் கிறிஸ்துவுக்காகதமது உயிரையும் தியாகம் செய்துள்ளனர்:

தமது சமகாலத்தில் வாழ்ந்து தமது தியாக வாழ்க்கைமூலம் உலகப் பிரபலயமடைந்த அன்னை திரேசா பற்றி அறியாதவர் இல்லை எனலாம். அவரது வாழ்க்கை முழுவதும் கிறிஸ்துவின் வழிகாட்டலில் உலக மக்கள் அனைவருக்கும் விசேடமாக மிகவும் பின்தங்கிய வறிய, எளிய மற்றும் நோயினால் பாதிக்கப்படும் மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாகவே இருந்தது.

எனவே இன்ப துன்பங்கள் நொடிப் பொழுதில் மாறலாம். அல்லது சிறிது காலத்திற்குத் தொடர்ந்து வரலாம். நிமிட சுகங்களைத் தேடுவது எளிது. ஆனால் அது நீண்ட பலன் தராது அது நிலைத்திருக்காது.



நிலையான மகிழ்ச்சி, தியாகத்தால் தான் கிடைக்கும். இறைவனின உறவில் இறுவரை நிலைத்திருக்க, சாவிலிருந்து வாழ்வுக்கு அடித்தளம் அமைத் துத்தந்தர் இயேசு. சாவைக் கண்டு பயப்படாமல் துணிவோடு செயற்படும் மனிதன் சரித்திரத்தில் நிலைத்து நிற்பான் என்பதற்கு இயேசுவே எடுத்துக் காட்டாவார்.

இயேசுவோடு நாமிருந்தால் அவர் எம்முடன் இருப்பார். அவரின் பிரசன்னம் இருந்தால் போதும் என்றும் வாழும் வழிகளை அவர் காட்டுவார். இறைவனின் பிரசன்னம் இப்படி பல கோடி மக்களின் மனதில் நம்பிக்கையை,

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

வீரத்தை, தியாகத்தை, அனைத்திற்கும் மேலாக அன்பை விதைத்துள்ளது. துன்பங்களிலும் இடர்பாடுகளிலும் மகிழ்ச்சியுடன் இயேசுவோடிருப்போம

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாவட்ட இளைஞர் விளையாட்டு விழா

# பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி; கோப்பாய் பிரதேச இளைஞர் சம்பியன்





யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களுக்கிடையிலான 26 ஆவது இளைஞர் விளையாட்டுப் போட்டி ஆரம்பமாகியுள்ளது.

இதில் ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டிகள் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

பெண்களுக்கான இறுதிப் போட்டிக்கு கோப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியும் தெல்லிப்பழைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியும் தகுதி பெற்றது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் ஆரம்பம் முதலே இரு அணிகளும் புள்ளிகளைப் பெற்றாலும் 2:0 என்னும் செட் கணக்கில் கோப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி போட்டியில் வெற்றியீட்டியது. (க-23)

## உதைபந்தாட்ட போட்டி

அராலி ஏ.எல் விளையாட்டுக் கழகம் அராலி ஏ.எல் இளைஞர் கழகம் இணைந்து வலிகாமம் லீக் அனுசரணையுடன் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியை நடத்தி வருகின்றது.

இதில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற போட்டிகளில் பாரதி விளையாட்டுக் கழகமும் நாமகள் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 4:2 என்னும் கோல் கணக்கில் நாமகள் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

யங்ஹென்றீஸ்விளையாட்டுக்கழகமும் கலைமகள் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் 3:0 என்னும் கோல் கணக்கில் யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

ஜேம்ஸ் விளையாட்டுக் கழகமும் ஆதவன் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டி யில் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் 2:1 என்னும் கோல் கணக்கில் வென்றது. (க-23)

## கொக்குவில் கே.சி.சி.சி. வெற்றி

அரியாலை சென்றல் விளையாட்டுக்கழகத்திற்கும் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்திற்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் விளையாட்டுக்கழகம் 38.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 179 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் கோபிசன் 37 ஓட்டத்தினையும் கேகந்தன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டத்தினையும் ஜெயருக்ஷன் 24 ஓட்டத்தினையும் அதிக பட்சமாக பெற்றனர்.

பந்து வீச்சில் சுலோஜன் 6 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் ஜெனுதாஸ் 7 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் பவிதரன் 7.1 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

180 ஓட்டத்தினை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி 32.1 ஓவர்களில் 9 விக்கெட்டை இழந்து தனது வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ராகுலன் 74 ஓட்டத்தினையும் ஜெயரூபன் 40 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் கேகந்தன் 9.1 ஓவர்கள் பந்துவீசி 45 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டினையும் ஜெயருக்சன் 7 ஓவர்கள் பந்து வீசி 32 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டினையும் விநோதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 47 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் கைப் பற்றினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகராக கொக்குவில் கே.சி.சி.சி அணியின் ராகுலன் தெரிவானார். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய போட்டிகள்

யாழ்.மாவட்ட தாச்சி சங்க அனுசரணை யுடன் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டியின் இன்றைய லீக் போட்டியில் வள்ளுவர் அணியும் சிந்து அணியும் மோதவுள்ளன.

இப் போட்டி இரவு 7 மணிக்கு தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (கு)

(கிளிநொச்சி)

கிளிநொச்சி- அம்பாள் குளம் இளந்தென்றல் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம்- அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக்கழக அணிகளுக்கிடையிலான மாபெரும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டி இன்று காலை 8.30 மணியளவில் அம்பாள் குளம் இளந்தென்றல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க-271)

## என் இதயமே நொறுங்கிவிட்டது



### வருத்தத்தில் மல்லையா

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் தோல்வியால் அந்த அணியின் உரிமையாளர் விஜய் மல்லையா மிகுந்த வருத்தத்தில் இருக்கிறார். ஐ.பி.எல் தொடரில் பலம் வாய்ந்த அணிகளில் ஒன்றாக பெங்களூர் அணி விளங்குகிறது. இதில் இந்திய அணியின் சிறப்பான வீரர்களான யுவராஜ், கோஹ்லி மட்டுமல்லாமல், வெளிநாட்டு வீரர்களும் உள்ளனர்.


இந்நிலையில் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடந்த வாழ்வா? சாவா? ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 30 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியிடம் தோல்வி கண்டு பிளேஆப் வாய்ப்பை இழந்து வெளியேறியது. நட்சத்திர வீரர்களை உள்ளடக்கிய வலுவான அணியாக விளங்கியும் அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியாமல் வெளியேறியது ரசிகர்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது.

மேலும், இந்த ஐ.பி.எல். போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் மோசமான செயற்பாடுக்காக ரசிகர்களிடம் வருத்தம் தெரிவித்துக் கொள்வதாகவும், நட்சத்திர வீரர்களின் ஆட்டம் வெற்றிகரமாக அமையாதது இதயத்தை நொறுக்குவதாக இருந்ததாகவும் அணி உரிமையாளர் விஜய் மல்லையா கருத்து தெரிவித்துள்ளார்.









கிளிநொச்சி திருவையாறு மகிழகம் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு முன்பள்ளி இயக்குநர் தங்கராஜா ஜெயந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் கலந்து கொண்ட நிகழ்வையும் மாணவர்களின் விநோத உடை நிகழ்வையும் படங்களில் காணலாம். (க-254)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்ரைசர்ஸ்ஸை வென்றது கொல்கத்தா

சன்ரைசர்ஸ், கொல்கத்தா அணிகளுக்கு இடையேயான போட்டியில் 4 விக்கெட் வித்தியாசத்தில் சன்ரைசர்ஸ் அணியை கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி வீழ்த்தியது. முன்னதாக நாணயசுழற்சியில்வென்ற கொல்கத்தா அணி முதலில் களத் தடுப்பைத் தேர்வு செய்தது. இதனை அடுத்து களமிறங்கிய சன்ரைசர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்களை எடுத்தது. இதனை அடுத்து 161 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா 14.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 161 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது.

இதனால் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் கொல்கத்தா அணி வெற்றி பெற்றது. கொல்கத்தா அணியில் அதிகபட்சமாக அதிரடியாக ஆடிய யூசுப் பதான் 22 பந்துகளில் 5 பவுண்டரி, 7 சிக்சர், உள்பட 72 ஓட்டங்களை எடுத்து வெற்றிக்கு வழிவகுத்தார். யூசுப் பதான் 15 பந்துகளில் அரைசதம் அடித்தது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றியின் மூலம் புள்ளி பட்டியலில் சென்னையை பின்னுக்கு தள்ளி 2-வது இடத்தைகொல்கத்தா அணி பிடித்துள்ளது. (க)

# சென்னை வெற்றி



பெங்களூருக்கு எதிரான போட்டியில் சென்னை அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை அணித்தலைவர் தோனி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனையடுத்து களமிறங்கிய பெங்களூரு அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 154 ஓட்டங்கள் எடுத்தது.

பெங்களூரு அணியில் அதிகபட்சமாக அணித்தலைவர் வீராட் கோலி 73 (49) ஓட்டங்கள் குவித்தார். 155 எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்னை அணி 17.4 ஓவர்களில் 160 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

சென்னை அணியில் தோனி 48 (28), டூ பிளஸ்ஸிஸ் 55 (43) ரன்கள் எடுத்து களத்தில் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை அணி தோனி தெரிவானார்.

# பரிந்துரைகளை அமுல்படுத்த இலங்கையை வலியுறுத்துவோம்

## அவுஸ்திரேலியா தெரிவிப்பு

(கான்பெரா)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுலபடுத்தவும் பயனுள்ளதும் வெளிப்படையானதுமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பங்குடனான சமாதான திட்டத்தை முன்னெடுக்க இலங்கையை ஊக்குவிக்கும் என அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியா வெளிவிவகார அமைச்சின் நாடாளுமன்ற செயலாளரும்செனட்டருமானபிரட்மேசன அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரசுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இதனை கூறியுள்ளார்.

மோதல்களின் போது இருத்தப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட கடுமையான குற்றங்கள் தொடர்பில் வெளிப்படையான மற்றும் சுதந்திரமான விசாரணைகளை முன்னெடுக்குமாறு அவுஸ்திரேலியா இலங்கையை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் இலங்கையுடனான அவுஸதிரேலியாவின் கொள்கை தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் மேசன் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சில வெளிநாட்டு புலம்பெயர் அமைப்புகளை தடை செய்தாலும் அந்த அமைப்புகள் அவுஸ்திரேலியா சட்டத்திற்கு அமைய செயற்படும் சுதந்திரத்தை அவுஸ்திரேலியா கட்டுப்படுத்தாது.

அவுஸ்திரேலியா உரிமைகளுக்கான சுதந்திரத்தை வலுவாக ஆதரித்து வருகிறது.

அத்துடன் புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் இலக்கு வைக்கப்பட்டதை நல்லிணக்கத்திற்கான உகந்த செயலாக அவுஸ்திரேலியா கருதவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# கறுப்புக்கொடி...

டுள்ளது

இந்த பதவியேற்பு விழாவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அழைத்தமைக்கு தமிழக அரசு மற்றும் அரசியல் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ டில்லி சென்று பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங், நரேந்திரமோடி ஆகியோரிடம் இந்த பதவியேற்பு விழாவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அழைப்பதைத் தவிருங்கள் என்று மன்றாடிக் கேட்டார்.

அத்துடன், நரேந்திர மோடியுடனான சந்திப்பின் போது ஒரு இரவுக்குள் நல்ல முடிவெடுங்கள் என்று வைகோ வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சாஞ்சி மற்றும் டில்லிக்கு ஏற்கெனவே விஜயம் செய்த போது போராட்டம் நடத்தியதையும் இதன்போது சுட்டிக்காட்டிய வைகோ, தாங்களும் போராட்டம நடத்த நேரிடும் என்று சூசகமாக எச்சரித்திருந்தார்.

இது தொடர்பில் குறித்த காலக்கெடுவுக்குள் எந்தவொரு ஒரு இறுதி முடிவையும் பாரதிய ஜனதாக்கட் கட்சி எடுக்கவில்லை. இதையடுத்து,

பாரதிய ஜனதாக் கட்சிக்கு விடுத்த எச்சரிக்கையின்படி டில்லியில் தமது தலைமையில் மோடி பதவியேற்கும் தினத்தில் ராஜபக்ஷவைக் கண்டித்து கறுப்புக் கொடி போராட்டம் நடைபெறும் என்று வைகோ அறிவித்துள்ளார்.

அதேபோன்று, நரேந்திர மோடி பிரதமராக பதவி ஏற்கும் விழாவில் கலந்து கொள்ள வருகை தரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கண்டித்து தமிழகம் முழுவதும் நாளை 26 ஆம் திகதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறான் அறிவித்துள்ளார். (எ-11)

# சர்வமத பிரதிநிதிகள் 40 பேர் நேற்று யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

சர்வமத பிரதிநிதிகள் 40 பேரைக் கொண்ட குழுவொன்று நேற்று மாலை நல்லூர் கந்தசுவாமி கோவிலில் விசேட வழிபாட்டில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை இந்தக் குழுவினர் இன்று பல்வேறு தரப்பினருடன் யாழில் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளன என்று கூறப்படுகின்றது.

யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோவிலில் வைத்து நேற்றுமாலை சர்வமத குழுவினருக்கு கலாசார முறைப்படி விசேட வரவேற்பளிக்கப்பட்டது.

இதில் நல்லை ஆதீன குரு முதல்வர் உள்ளிட்ட பலர் பங்கு கொண்டிருந்தனர்.

வடக்குக் கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளை அறிந்து ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தும் முகமாகவே இந்த சர்வமதக் குழுவினர் சகல மாவட்டங்களுக்கும் பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக நேற்று யாழ்ப்பாணத்திற்கு இந்தக் குழுவினர் விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் குழுவில் பௌத்தமத துறவிகள், இந்து மதக் குருக்கள், கிறிஸ்தவ மத அருட் தந்தையர், முஸ்லிம் மத மௌலவிகள் என 40 பேர் வருகை தந்துள்ளதோடு சிவில் சமூக பிரதிநிதிகளும் வருகை தந்துள்ளனர். (செ-6)

# யாழ்.பல்கலைக்கழகத்...

யிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றது.

கடந்த காலங்களை விட இம்முறை அச்சுறுத்தல்கள் அதிகரித்திருந்த நிலையில் யாழ்.பல்கலைக் கழகத்தில் அதிகளவானவர்களின் பங்கேற்புடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிலையில் யாழ்.பல்கலைக் கழகத்தை சூழவுள்ள வீடுகள், நிறுவனங்கள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், நூலகங்கள், மதச் சார்பு நிறுவனங்கள் என்பவற்றுக்கு நேற்று சென்ற இராணுவத்தினர் இந்தப் பதிவு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை வீடுகளுக்கு பதிவுக்காக சென்றபோது பல்கலைக் கழக மாணவர்கள் தங்கியுள்ளனரா? என்பதை துருவித்துருவி கேட்டுள்ளனர்.

அதேவேளை தென்னிலங்கையைச் சேர்ந்த கட்டிட வேலையாட்கள் தங்கியுள்ளனரா என்றும் கேட்டுள்ளனர்.

இதுமட்டுமன்றி கிராம சேவையாளர்களிடம் புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தொடர்பாகவும், புனர்வாழ்வு பெறாதவர்கள் தொடர்பாகவும் தகவல்களை திரட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பதிவு நடவடிக்கை குறித்து யாழ்.பலாலி பாதுகாப்பு தலைமையகத்தின் ஊடக இணைப்பாளர் மேஜர் எல்.மல்லவராட்சியிடம் தொடர்பு கொண்டு வினவியபோது இந்தப் பதிவு நடவடிக்கை தொடர்பாகதான் எதுவும் அறிந்திருக்கவில்லை என்று கூறினார். (எ-6)

# புதுடில்லி...

புதுடில்லிக்கு பயணமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதுடில்லிப் பயணத்துக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், இந்த வைபவத்தில் ஜனாதிபதிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படாது எனக் கூறப்படுகிறது. (செ-11)

# புகைப்படத்தில் இருந்...

ளம் காணப்பட்டுள்ளார்.

இப் போரின்போது படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் மற்றும் யுவதிகள் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டு, ஆடைகள் களையப்பட்ட நிலையில் சேறும் சகதியுமான கிடங்கு ஒன்றுக்குள் விடபபட்டிருந்த காட்சியைக் கொண்ட புகைப்படங்களை அண்மையில் கொழும்பு ரெலிகிராவ் ஊடகம் வெளியிட்டிருந்தது.

இந்தப் புகைப்படத்தில் மிகவும் ஆழமான பகுதியில் மேலாடையின்றி கைகள் கட்டப்படாத நிலையில் காணப்படும் இளைஞர் பருத்தித்துறையைச் சேர்ந்த பேரம்பலநாதன் பிரதீபன் (வயது - 35) என அவரின் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இறுதிக்கட்டப் போரின் போது முள்ளிவாய்க்கால் பகுதி ஊடாக படைத்தரப்பினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்லும் வழியில் இவர காணாமல் போயிருந்ததாக அவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவரின் உறவினர்கள், எமதுசகோதரன்காணாமல்போனமை தொடர்பில் நாம் மனிதவுரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், காணாமற்போனோரைக் கண்டறியும் குழு, காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் மன்னார் ஆயர் குழு ஆகியவற்றில் முறைப்பாடுகளைச் செய்துள்ளோம்.

அத்துடன் 2010ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்றில் வெளியான புகைப்படம் ஒன்றிலும் எமது சகோதரன் இருக்கிறார். அது தொடர்பிலும் நாம் எமது முறைப்பாடுகளில தெரிவித்துள்ளோம் என மேலும் தெரிவித்தனர்.

இந்தப் புகைப்படத்தில் இசைப்பிரியாவுக்கு அருகில் இருப்பவர் மல்லாவியைச் சேர்ந்த குணலிங்கம் உஷாலினி என்று ஏற்கெனவே அவரின் பெற்றோர்கள் [illegible] ளம் காட்டியிருந்தனர். [illegible]

# தேசிய பிரச்சினை...

சம உரிமை, நியாயம் மற்றும் நிரந்த சமாதானத்தை ஏற்படுத்த சந்தர்ப்பம் ஏற்பட்டது.

நாட்டுக்குள் அவற்றை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் பிரதான மாக 6 தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.

ஒரு அரசியற் தீர்வை வழங்குவேன் என இந்தியாவிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் வழங்கிய வாக்குறுதியை மதித்து இலங்கை அரசாங்கம் நடக்கவில்லை.

கடும்போக்கான ஓர் நிகழ்ச்சித் திட்டத்தை இலங்கை அரசாங்கம் முனைப்பாக முன்னெடுத்து வருகின்றது. அரசியற் தீர்வை வழங்குவேன் என்ற வாக்குறுதியை போர் நிகழ்ந்த காலத்திலும், போரின் முடிவிற்குப் பின்னாலும் - இந்தியாவிற்கும்சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை அரசாங்கம் வழங்கியிருந்தது.

இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகள், நல்லிணக்க முயற்சிகளையும் நிரந்தர அமைதி ஏற்படும் சூழலையும் மேலும் பல [illegible] வள ரச் செய்யும். இத்தகைய ஒரு நிலைமையைத் தமிழ் மக்கள் நிச்சயமாக விரும்பவில்லை.

இலங்கை அரசாங்கத்தின் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு அரசியல் தீர்வை உருவா க்கி எடுப்பதில் அது விசுவாசமாக இல்லை என்பதையே தெளிவாக காட்டுகின்றன என் பதையும் நாங்கள் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

நாங்கள் அப்படி கருதுவது ஏனெனறால் நீதியினதும் சமத்துவத்தினதும் அடிப்படையிலான கௌரவமான ஒரு சமாதானம் எங்கள் நாட்டில் உருவாகும் என்ற நாங்கள் நம்புவதாலும் பாரததேசம் வகிக்கின்ற பாத்திரம் அதனை உறுதிப்படுத்தும் என்பதனாலும் ஆகும்.

உங்களையும் உங்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏனையவர்களையும் சந்திப்பதற்கான ஒரு வாய்ப்பை உங்களால் முடிந்த அளவுக்கு விரைவாக எமக்கு வழங்குமாறும் நாம் வேண்டுகின்றோம் எனவும் சம்பந்தன் தனது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். (செ-11)

# விபத்தில்...

உயிரிழந்துள்ளார்.

தனரட்ணம் எட்வேட் தனரோஜன் (வயது-31) என்பவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பில் யாழ்.போதனாவைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.விபத்து தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (செ-6)

**மிக குறைந்த விமான கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| கொழும்பு – மதுரை | –16500 | RTN |
| கொழும்பு – சென்னை | –21700 | RTN |
| கொழும்பு – திருச்சி | –22400 | RTN |
| கொழும்பு – தோகா | –26000 | O/W |
| கொழும்பு – பெங்களூர் | – 27600 | RTN |
| கொழும்பு – மலேசியா | –30000 | RTN |
| கொழும்பு – சிங்கபூர் | –30200 | RTN |
| கொழும்பு – பிரான்ஸ் | –45500 | O/W |
| கொழும்பு – லண்டன் | –44800 | O/W |
| கொழும்பு – சுவிஸ் | –83500 | RTN |
| கொழும்பு – கனடா | –103700 | o/w |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்

Nation Popular Travels & Tours

#128, Brown Road, Jaffna

128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்

0114375357, 0773083820

0214 920 920

நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு கைக்குண்டுகள்...

மீட்கப்பட்ட பகுதியில் இராணுவத்தினரின் முகாம் முன்னர் இருந்ததாகவும் கூறப்பட்டுகின்றது. (செ-6)


**Personal Class-கணினி**

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)
* குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
TP:0779672038 ஆசிரியர்: KRC

**பொருளியல் கருத்தரங்கு S.S. சிறி** A/L 2014

இடங்கள்
யாழ்.நகர் :- நான்கற்பிக்கும் நிறுவனத்தில்.
உடுப்பிட்டி :- நான் கற்பிக்கும் நிறுவனத்தில். (நவிண்டில்)
*26 ஆம் திகதிக்குமுன் வெளிமாணவர்களும் பதிவுகளை செய்யலாம். (10 வெளியீடுகள் வழங்கப்படும்.)
(C-7477)

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு**
தொ.பே. : 021 321 0815,021 567 1540
E-mail : valampurii@yahoo.com, valampuriijaffna@gmail.com

**நிரந்தர தொழில்வாய்ப்பு**

சம்பளம் 18000/=, 40000/= வரை (தொழில் அடிப்படையில்) (18-50 வயது ஆண், பெண்) சிங்கள மொழி அவசியமில்லை. வட மாகாணத்தில் உள்ள தமிழ் முஸ்லிம் இளைஞர் யுவதிகளுக்கே முதலிடம். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/டொபி/ பிஸ்கட்/ கோடியல் /Pvc /கிளவுஸ்/Printing/Paint போன்ற கம்பனிகளில் உற்பத்தி /லேபல் / பொதியிடல் பிரிவுகளில் நிரந்தர வேலைவாய்ப்பு. உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில் (நண்பர்கள்+குழுக்கள் தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே வேலைவாய்ப்பு.
தொடர்பு:- 0776838231
(சி-7465)


## இந்திய ஊடக...

நாடுகளின் தலைவர்கள் அனைவருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

புதுடில்லியின் இந்த அழைப்பை ஏற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளார். இப்பயணத்தில் தன்னுடன் இணைந்து கொள்ளுமாறு வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு நேற்று முன்தினம் காலை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஊடாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார்.

இதையடுத்து, நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவத்தில் ஜனாதிபதியுடன் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் கலந்து கொள்ளலாம் என இந்திய ஊடகங்கள் பல செய்தி வெளியிட்டிருந்தன.

ஆனால், நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவத்தில் தன்னுடன் இணைந்து கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிராகரித்திருந்தார்.

இது தொடர்பில் இந்தியாவின் முக்கிய ஊடகங்கள் விரிவான செய்திகளை வெளியிட்டுள்ளதுடன், அதற்காக வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ள காரணத்தையும் விபரமாக வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


**STUDY IN UK, LATVIA**
(AUSTRALIA, CANADA, NEW ZEALAND, USA) EUROPE

- G.C.E O/L, A/L சித்தியடைந்திருந்தலே போதும்.
- அரச கல்லூரிகளில் பட்டப்படிப்பு.
- வேலை செய்து படிக்கக்கூடிய அரிய வாய்ப்பு.
- 5 வருடகால அனுபவம்மிக்க வீசா சட்டஆலோசகரால் வீசா சட்டஆலோசனை.
- இலவசமாக நேரில்வந்து சட்டஆலோசனைகளை அறிந்துகொள்ளக்கூடிய அரிய சந்தர்ப்பம்.
- 150 இற்கும் அதிகமான வீசாக்களை பெற்றுக்கொடுத்த சாதனை.
- IELTS & A1,B1 Special வகுப்பு ஒழுங்குகள்

City & Guilds Approved Centre-UK

WEC நிறுவனத்தினர் தற்பொழுது யாழ்நகரிலும் தமது IELTS, City&Guilds (A1,B1) German Deutsch, French வகுப்புக்களினை ஆரம்பித்துள்ளனர்.
(சி-7464)

கடந்த 9 மாதங்களில் மட்டும் எமது நிறுவனத்தினூடாக 60 மாணவர்களிற்குமேல் City&Guilds English Diploma (UK) A1,B1 பரீட்சையில் சிறந்த,அதிசிறந்த பெறுபேறுகளை தட்டிச்சென்றுள்ளனர்.

City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற மேல்மாகாண ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

WORLD EDUCATION CONSULTANCY
No:377, Sangaththanai, Chavakachcheri.
021 7200 989; 0779265447

Branch: No.04, Kesavil Road, Kokkuvil, Jaffna.

**FALC FRENCH LANGUAGE CENTRE**
REGISTERED FRENCH CENTRE.
**FRENCH CLASSES**

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Swiss, Belgium செல்வோர் பெற்றுக் கொள்ளலாம்... 805 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..
Note: 2006ம் ஆண்டிலிருந்து யாழில் French கற்பிக்கும் ஒரே ஒரு ஆசிரியர்..
ஆரியகுளம் மற்றும் Nelliady இல் மட்டுமே வகுப்புக்கள் நடைபெறுகிறது......

| ஆரம்பம்:28.05 Wed 8.30am. | ஆரம்பம்: 28.05 Wed 4pm. | Deutsch & Sinhala வகுப்புகளும் |
|---|---|---|
| No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | No.181, 1st Floor, Main Street, Nelliady. | 021 320 2973 0779 789 456 |

**IELTS** IELTS Registratin Center for BRITISH COUNCIL
நீங்கள் ஒரே தடவையில் IELTS இல் Band 7ற்கு மேல் எடுக்க இலகுவான வழி

**40 Hours** weekdays & Weekend Training Prrogram



- British Council Special Trained Lecturer Panel
- Focus individual Attention
- Proper Feedback and Analysis
- Conducive Leaning Environment
- Test Practice on the pattern of IELTS
- Exams in four skills
- Course Conducted by University Lecturers who have undergone IELTS Teacher preparation Courses at the British Council

யூலை 10ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்.
26-05-2014 வகுப்புக்கள் ஆரம்பம்
(சி-7443)



Course duration Commenncement

| | |
|---|---|
| Saturday - Sunday | 8.30 a.m - 11.30 a.m |
| Mon - Tues - | 7.00 a.m - 8.30 a.m , 5.00 p.m - 7.30 p.m |
| Wed - Thurs | 3.00 p.m - 5.00 p.m , 5.00 p.m - 7.30 p.m |

**BRITISH COLLEGE OF ENGLISH**
# 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்) Tel: 021 222 0384 / 0778803887

**WORLD EDUCATION FAIR 2014**



FREE ENTRY
SATURDAY 31st MAY @ HILTON HOTEL COLOMBO
From 11.00 a.m - 5.00 p.m

ORGANIZED BY
CDUK Campus Direct UK Your Trusted Partner in Education
OEC OVERSEAS EDUCATION CENTRE (PVT) LTD.

Meet representatives from leading universities in the UK, Australia, New Zealand, Malaysia and Canada. Your chance to get *SCHOLARSHIPS, SPOT OFFERS* and *FREE VISA GUIDANCE*

Aberystwyth University, Anglia Ruskin University, UEL University of East London, University of Bedfordshire, University of Bolton, London South Bank University, navitas, New Zealand Tertiary College, Java Institute, Nottingham Trent University, Ntec, northumbria University, University of Portsmouth, Richmond University, UWE Bristol University of the West of England

WE REPRESENT MORE THAN 200 UNIVERSITIES
Call us on: 077 824 6666 072 222 3522

REGISTER NOW AND STAND A CHANCE TO WIN GRAND PRIZES!
ADVANCE ENTRY FOR STUDENTS WITH CIM, CIMA, ABE, NCC, BCS, HND, ACCA AND OTHER RECOGNISED QUALIFICATIONS PLEASE VISIT THE FAIR WITH YOUR ORIGINAL CERTIFICATES AND A SET OF PHOTOCOPIES
*Log on to www.oecsl.lk or Scan Here*
MEDIA PARTNERS KISS 96.9 SUNDAY OBSERVER
(சி-7471)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES** BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

| Batch I | Batch II | Batch III | Batch IV |
|---|---|---|---|
| 31.05.2014 | 02.06.2014 | 07.06.2014 | 09.06.2014 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074
(C-7462)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org